அல்லியரசாணி மாலை

1895

உ

கடவுள்துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர் அருளிச்செய்த

அல்லியரசாணிமாலை.

இஃது,

திருவெண்காடு.

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

——[*]——

திருவொற்றியூர்.

பரசுராமமுதலியார்

குமாரர்.

கன்னியப்பமுதலியார்

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரமமுத்திராக்ஷர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

——*——

1895.

உ

கடவுள்துணை.

புத்தகவிளம்பரம்.

——*(*)*——

இதனால் சகலமானபேர்களுக்குந்தெரிவிப்பது யாதெனில்சென்னையைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில்தொட்டிக்கலை குமாரப்பமுதலியார் வீதியில் ௩௯-வது, கதவிலக்கமுள்ள கிருகத்தில் ஸ்தாபித்திரா நின்ற பரப்பிரம்மமுத்திராட்சர சாலையில் இதனடியில் கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல் கற்றுணர்ந்தபெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டமிகமேலாகிய உபயோகமுள்ள பலவித வேதாந்த சித்தாந்த கிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், சமஸ்கிருதகிரந்தங்களும், மகம்மதுமார்க்கக்கிரந்தங்களும், இன்னும் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்களும், விலைசாசமாய் விற்கப்படுமாகையால்வேண்டியவர்கள் மேற்படி அச்சுக்கூடத்தலைவராகிய தி-ப-கன்னியப்பமுதலியாரவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதவசனம்-௰௮-பர்வம் திக்குகாகிதம்
ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனை
ஸ்ரீமகாபாகவதவசனம் ௰௨-ஸ்காந்தம் லெத்தகிராப்படத்துடன்
ஸ்ரீமத்கம்பராமாயண வசனகாவியம் சப்தகாண்டங்களுடனும் திக்குவிஜயமுட்பட
இராமமூனிசிப்புசட்டம்
பெரியபுராணம்வசனகாவியச்சுருக்கம்-௯௬-படங்களுடன் கிரயரூபா-௫
பிரம்மோத்தரகாண்டம்
ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்
விராடபர்வம் குட்டைசயிசில் அச்சிட்டது
பெரிசு பராங்குசதாசர்கீர்த்தனை
அராபிக்கதை திக்குகாகிதம்
வீரமாமுனிவர்சதுரகராதி அனுபந்தத்துடன் பெரிய எழுத்தில் அச்சிட்டது
வயித்தியசாரசங்கிரகம்

அகஸ்தியர் ஏமதத்துவ மென்னும் பஞ்சகாவியநிகண்டு-அா
தட்சிணாமூர்த்திதிருமந்திர-தருா
தன்வந்திரிகலைக்ஞானம்-ருா
இராமதேவர்வயித்தியகாவியம்-து
அகஸ்தியர் ஆயுள்வேதம்-துஉா
யூனானி பதார்த்தகுண சாரசங்கிரகம்
இயாக்கோபுவாதத்திறவுகோல்
போகர்சத்தகாண்டம்-எது
அகஸ்தியர் பாலவாகடம்-ஙா
வயித்தியமூலிகைஅகராதி
பதார்த்தகுணசிந்தாமணி
நளவீமபாகசாஸ்திரம்
குமாரசாமீயம்
ஜாதகசிந்தாமணி
சினேந்திரமாலை
கசசுல்லன்பியா
இறவுசுல்கூல்படைப்போர்வசனம்
ஐந்துபடைப்போர்
அப்பாசுநாடகம்
சீறாபுராணம்

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில்கடிதம் அனுப்பப்படமாட்டாது.

உ

கடவுள்துணை.

அல்லியரசாணிமாலை.

விநாயகர்துதி.

கலிவிருத்தம்.

அடாதமும்முலையாள்திருவாலவாய்த்
தடாதகைப்பிராட்டியரின்தன்னருள்
கொடாநின்றவல்லிக்கோதைகதைசொல்லக்
கடகளிற்றிணைக்கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தன்செம்பொற்பதம்போற்றி
மூத்தியளிக்கவல்லமுக்கணன்ருள்போற்றி
சீராறுபல்லிகதைசெந்தமிழால்யான்பாட
வாராநாவினிலேஇசைந்தருளாயைங்கரனே

சுப்பிரமணியர்துதி.

சுத்தமெய்ஞ்ஞானகந்தர்துய்யவடிபோற்றி
பத்தர்தமக்குவரம்பாலிப்போன்ருள்போற்றி
ஆதிபரமசிவற்கருள்செயவோன்ருள்போற்றி
தீதில்லாமாயனையுஞ்சிருஷ்டித்ததாள்போற்றி
சூரபத்மன்சிரந்துணித்ததுய்யபதம்போற்றி
தீரகயமுகனைச்சேதித்ததாள்போற்றி
வன்முகன்ருருகனைவாதித்ததாள்போற்றி
பன்முகன்ருருகனைப்பாழ்செய்ததாள்போற்றி
கந்தாகடம்பாகதிர்வேலா இக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச்செய்திடுவாய்கர்த்தாவே

சாஸ்வதிதுதி,

தாதாருங்கூந்தல்விமுர்தங்கப்பதம்போற்றி
சூதார்முலைவாணிதுங்கப்பதம்போற்றி
துன்னுங்கலைமாதின்துணையடிகளைப்போற்றி
மன்னுசாஸ்வதிதாமரையடிகளேபோற்றி
அல்லிகதையுரைக்கஅருள்புரிவாய்மாதாவே
வல்லிக்கொடியனையவண்கரத்துக்கோதாவே

கஞ்சபூபன்மனதிற்கலந்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்துநிகழ்த்துமம்மா இக்கதையை

விஷ்ணுதுதி.

கூறுந்திருமாலின்கோகனகத்தாள்போற்றி
வீறுமுலைகளந்தமெய்யன்பதம்போற்றி
பஞ்சவர்க்குத்தூதுசென்றபங்கயத்தாள்போற்றி
எக்கலமடையாத இணையடிகளேபோற்றி
இந்தக்கதைதனக்குஎம்பெருமாளேநீரும்
சந்ததமும்வந்துவரந்தந்தளிக்கக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தேன்பெருகுஞ்சோலைதென்னவளநாடு
கனியுதிருஞ்சோலைகனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திரங்கும்வடமதுரைபட்டணமாம்
தென்காஞ்சிமுத்திரங்குந்தென்மதுரைபட்டணமாம்
வாழைவடக்கினும்வான்கமுகுதெற்கினும்
கரும்புமிளநீருங்கண்திறந்துமடைபாயும்
கட்டுக்கலங்காணுங்கதிருழக்குநெற்காணும்
அரிதாளறுத்துவசமறுதாள்பயிராகும்
அருதாளின்கீழேஐக்கலந்தேன்கூடுகட்டும்
யானைகட்டத்தாளும்வானமட்டும்போராகும்
மாடுகட்டிப்போர்படுத்தால்மாளாதுசெந்நெலென்று
யானைகட்டிபோர்படிக்கும்அழகானதென்மதுரை
தானகத்தான்வளர்ந்துதழைத்தோங்குந்தென்மதுரை
சோலைபலருடையசொக்கர்கிருபையினால்
அங்கயற்கண்மீனாட்சிஅம்மனருளாலே
மாதமொன்றுமும்மாரிவருஷிக்குந்தென்மதுரை
பஞ்சைபனாதிபரதேசிகிடையாது
பஞ்சைகிடையாதுபாண்டிவளநாட்டில்
கருப்புகிடையாதுசனத்தநொருமதுரையிலே
அங்காடிகூடைளாஅதிரவிலைகூறார்கள்
ஏழைபரதேசிஇல்லறங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கினுமிருந்துஏழைபரதேசிகளும்
அடுப்பார்பசிசனங்கள்அந்தமதுரையிலே
மதுரையிலடுத்தவர்கள்வாழ்வாகபோற்றிடுவார்
நீதிமனுமுறைகள்நெறிதவறுமன்னவனும்
செங்கோல்பிடித்தானும்சித்திராங்கபாண்டியனும்
மகுடமுடிசூடும்மன்னன்சிங்காதனத்தில்
தங்கமுடிசூடித்தாணிபதியாண்டிருந்தான்
சொக்கர்வதுணமையுண்டுதுரைராசபாண்டியற்கு

மீனாட்சிவலுமையினால்மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமைஅரசனவன்வாங்குவது
சக்கரநெறிப்படையேதானிதனையாண்டிருந்தேன்
சொக்கர்திருவிழாவைச்சோராமல்செய்திடுவார்
ஐயர்தன்திருவிழாஆனந்தமாய்நடக்கும்
உலகந்தழைத்தோங்கியுத்தமனாண்டிருந்தான்
தாழ்வுகளில்லாமற்றழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாய்வாழ்ந்துஅரசாளும்நாளையிலே

சோழமகாராசன்வறுமை—அல்லதுசிறுமை.

சோழராசன்தன்னாட்டில்சொர்ணகிரிபட்டணத்தில்
மழைகள்கிடையாதுமன்னனுராச்சியத்தில்
தூறல்கிடையாதுசோழனதுசீமையிலே
பயிர்கள்விளையாதுபாவைகள்நாடாது
குடிக்கசலங்கிட்டாதுகுருவிகள்நாடாது
காய்ந்தமரங்களெல்லாம்கனிகள்கிடையாது
தீய்ந்தபயிர்களெல்லாஞ்சொல்லமுடியாது
ஏரிகுளங்கழனிஇறைக்கசலங்கிட்டாது
பூமிதனிற்புல்லும்பூண்டுகள்கிடையாது
சாகுபோலுலர்ந்தனவேதனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாதுஅன்பானசீமையிலே
சோறுகிடையாதுசோழனதுசீமையிலே
எல்லோரும்பரதேசிஏழைகளாய்ப்போனார்கள்
பெண்டுடனேபிள்ளைகள்புருடசனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்திலிருந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறார்சோழராசன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள்மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார்குடித்தனக்காரரெல்லாம்
அண்டிபிழைக்கவென்றுஅனைவருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள்மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசத்திற்பரிசனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன்அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிற்றேபரிசனங்களில்லாமற்
சோழனதுசீமையிலேதுர்க்குறியடைந்தனவே
பன்னிரண்டுதன்வருடம்பாரில்மழையில்லாமல்
மாடுகள்கிடையாதுமனிதருங்கிடையாது
தங்கநிழல்கிட்டாதுதரித்திரமேபெரிதாச்சு
என்னசெய்வேனென்றுதானெண்ணமிட்டான்சோழனவன்
வாடிமனந்தளர்ந்தான்வாடும்பயிரதுபோல்
செடியின்கீழ்ப்புல்லதுபோல்செழித்ததிருமுகங்கள்
களர்நிலத்துப்புல்லதுபோற்கருகுநிறங்குலைந்தான்

எண்ணுதுமெண்ணியவனேங்கிமனந்தளர்ந்து
ஆணையடித்தோமேஅனியாயஞ்செய்தோமோ
கூலிகுறைத்தோமோதுறைமறக்காவிட்டோமோ
பஞ்சபணுதிகளைப்பறக்கடித்தோட்டினமோ
அந்தணர்வேதியர்க்குஅபசாரஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோதிருவுளத்தின்சோதனையோ
ஆணையடுப்போம்அண்டிப்பிழைத்திடுவோம்
எவரையடுப்போம்இக்குறையைதீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சுசெனங்களெல்லாம்பரிபோச்சு
ஆனைவரும்போயடுத்தாரணிமதுரைபாண்டியனை
பாண்டியன்தேசம்பதைதவியடைந்ததுகாண்
சொர்க்கர்கிருபையினால்சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலல்லவோசீர்பெற்றான்பாண்டியனும்
காமுபுவருடையநாதடித்தாள்பணித்து
பாண்டியனுமதியால்பகவானைநாம்வணங்கி
சொக்கர்மீனாட்சியரின்றிருவடியைநான்வணங்கி
பாண்டியனைக்கொண்டுபகவானைநாம்வணங்கி
ஐயர்கிருபையினலதிர்ஷ்டங்கள்பெறவேணும்
இதுதான்வயணமென்றும்இதைவிடவேறேயுண்டோ
மகாதேவர்கண்திறந்தால்மழைக்குக்குறையுமுண்டோ
தழைத்தோங்குஞ்சீமையென்றுதாணிபதியெழுந்து
மதுரைக்குப்போகவென்றுமன்னனெழுந்திருந்து
இலேகிதஞ்செய்யவேதென்மதுரைபாண்டியனை
என்றுபயணமிட்டான்இடருதனைத்தொலைக்க
கொஞ்சநஞ்சஞ்சேனைகளைக்கூடத்துணையாக்கி
பொன்னார்முடிதுலங்கபூஷணங்கள்சோதிமின்ன
வாருநங்கடகமின்னவச்சிரமணிடால்துலங்க
புரவியின்மேலேறிபுறப்பட்டான்சோழமன்னன்

சோழமகாராசன் பாண்டியனைக்காணுகிறது

பாண்டியன்தேசத்திற்பட்சமுடன்வாரானே
வெகுதூரமாய்நடந்துவிரும்பிவிடாய்பட்டு
தொலைதூரமாய்நடந்துதென்மதுரைவந்துசேர்ந்தார்
மதுரைவளநாட்டில்வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளேநுழையக்கொற்றவன்சோழனவன்
தூதுவர்களோடிப்போய்சொன்னார்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டுதனிமதுரைபாண்டியனும்
வரச்சொல்லுமென்றுமன்னன்கொலுவமர்ந்தான்
அப்போதுதூதர்வந்துஅறிக்கைவிட்டார்சோழனுக்கு
கொலுமுகத்தைத்தேடியல்லோகொற்றவனுந்தானடந்து
பாண்டியனைக்கண்டுபெரிவுடனேதெண்டனிட்டான்

தெண்டனிட்டசோழனைச்சித்ராங்கதபாண்டியனும்
திடுக்கிட்டெழுந்திருந்துசிங்காதனமேடைவிட்டு
கூடவேவகைபெடுத்தூக்கிப்பிட்டான்பாண்டியனும்
கட்டித்தழுவிகாடாலிங்கனஞ்செய்து
கூட்டிவந்துகொலுமுகத்தில்கூடவுட்காரவைத்தான்
இட்டசிங்காதனத்தில்இருந்தானேசோழராசன்
சினேகிதன்முகம்பார்த்துத்தென்பாண்டியராசன்
சோழன்முகம்பார்த்துசொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தியென்னுடையஉயிர்த்தோழா
அவசரமாய்வந்ததென்ன ஆள்கள்படையில்லாமல்
வேர்வைபொழியவேற்றுமுகமாவதென்ன
சிந்தைகலங்கித்திருமுகமுந்தான்வாட
பூமாலைதான்கசங்கபொன்மகுடந்தான்கருக
அழகுகள்தான்மாறி அணலிலிட்டமெழுகதுபோல்
உருமாறிவந்ததென்னவுணர்வுடையமன்னவரே
எந்தனுக்குத்தான்தெரியஇயம்பிடுங்காணென்றுரைக்க

சோழராசன்பாண்டியரிடத்திற்சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டுஅரசானசோழனவன்
தனக்குள்ளவருத்தத்தைச்சாங்கமாய்ச்சொல்லுகிறான்
பன்னிரண்டுவருஷம்பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகந்தாங்கமுடியவில்லை
நிருவகிக்கமாட்டாமல்நிலைக்காமலோடிவிட்டார்
கருகிறதேபூமியெல்லாங்கப்பிற்றோராச்சியங்கள்
தாளமுடியவில்லைதனிமதுரைபாண்டியனே
நானினைத்துப்போனால்நன்மையோயெந்தனுக்கு
உம்முடையராச்சியந்தானொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல்தாரணிகள்தான்றழைக்க
தேசஞ்செழிக்கச்சிறப்புடனேநீர்வாழ்க
எளியவன்போலேநான்இந்தச்சிறுமைபட
பார்க்கமனம்வந்ததோபாராளும்பாண்டியனே
என்தேசம்தான்செழிக்கஎன்சனங்களீடேற
அவ்வளவுதவிஅனுக்கிரகம்நீர்செய்தால்
நன்றிமறப்பேனோநானுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோசந்திராதித்தருள்ளளவும்
உதவிமறப்பேனோஊழியுள்ளநாள்வரைக்கும்
இந்தச்சகாயத்தையெப்போதும்யான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய்தனிமதுரைபாண்டியரே
அவ்வசனங்கேட்டுஅழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச்சொல்லுவானொருவசனம்
என்னாலேயாகுமோஇவ்வுலகந்தான்றழைக்க
நம்மாலேயாவதுண்டோநாடுகள்தழைத்தோங்க

உன்னாலுமென்னாலுமுலகந்தழைக்குமோதான்
தேவாதிதேவர்திருவருள்தானிருந்தால்
நாதாதுதயவுமக்குத்தானிருந்ததென்றால்
சொக்கரதுதயவால்தொல்லுலகம்தான்றழைக்கும்
அவருடையசெயலெல்லாலாசனலாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத்தெளிவறிந்தசோழமன்னா
நாதாவென்னுடையநாடுதழைத்ததென்றான்
அவ்வசனங்கேட்டுஅருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலேஉரிமைபடவெந்தனுககு
நாதருக்குச்சொல்லிநாட்டைத்தழைக்கவையும்
சொக்கருச்சொல்லித்தேசஞ்செழிககவையும்
என்றுமிகவேண்டினான்இராசனந்தபாண்டியனும்
அப்படியேநல்லதென்றுஆனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்குவருந்திமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ்சோழனுஞ் சொக்கரிடம் வந்துகண்டது.

இருவருங்கூடிஈசரதுஆலயத்தில்
சொக்கரதுகோவிலுக்குத்துரிதமுடன்வந்தார்கள்
ஈசரதுசந்நிதிக்குநலமுடனேவந்தார்கள்
சுவாமியைக்கண்டுதொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கதெண்டன்சரணமென்றடிபணிந்தார்
இருவருமேயடிபணிந்துஈசனைத்தோத்தரித்தார்
தும்பைமலர்சூடுகின்றசொக்கனைத்தோத்தரித்தார்
ஆலவிடமுண்டஐயனைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்டநாதனைத்தோத்தரித்தார்
இடறுதனைநீக்கிவிடும்ஈசனேசரணமென்றார்
துன்பத்தைநீக்கிவிடுஞ்சொக்கரேசரணமென்றார்
ஏழைமுகம்பாருமையாஈசனேசரணமென்றார
அப்போதுசொக்கலிங்கரந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர் சொல்வது.

குஞ்சிரிப்புகொண்டமுடிகைலாசர்
ஏதுவகையாகஇருவருமாய்வந்தீர்கள்
வந்தவிவரமதைவகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டுஅழகுள்ளபாண்டியனும்
சொக்கரைச்சேவித்துசொல்லுகிறான்இராசனவன்
மதுரையிலேவாழுகின்றமகாதேவஆண்டவனே
எந்தனுக்குக்குறைவில்லைஉந்தனதுசெயலாலே
இச்சோழராசனுக்குவந்ததொருதுன்பங்கள்
சொல்லத்தொலையாதுதுயராமிகத்தோன்றுதையா
மழைகள்கிடையாமல்வையகங்கள்பாழாகி

உலர்ந்துதேசாகுபாலுலகங்களத்தனையும்
வாடித்தவிக்கிறார்கள்மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாதுஅரசனதுபட்டணத்தில்
சோறுகிடையாதுசோழனதுசீமையிலே
மிகவும்வருத்தமுற்றான்வேந்தனிந்தசோழராசன்
தயவுபுரிந்துதற்காக்கவேண்டுமையா
நாடுசெழிப்பதற்குநாதரேகண்பாரும்
கண்பார்க்கவேண்டுமென்றுகர்த்தரேதெண்டனிட்டோம்

சொக்கநாதர்சொல்வது.

அவ்வசனங்கேட்டுஆண்டவருமேதுரைப்பார்
அரசர்களேநீங்கள்அஞ்சவேவேண்டாங்காண்
எவனவன்றன்றனக்குளந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம்அவனவனேசெய்கிறது
வருணபகவானுமனதுவைத்தானுமாகில்
பெய்யாமழைபெய்வித்துப்பெருகவைப்பான்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன்வானவர்கோனிந்திரன்காண்
மேகதனுக்கதிகாரன்மேலானஇந்திரன்காண்
தேவேந்திரனைநீங்களிருவரும்வணங்கிடுங்கள்
தேவேந்திரனைத்தெரிசித்தீராமாகில்
உங்கள்குறைவுகளையுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டிவணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்துமழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைத்தானழைத்துவிடைகொடுப்பானிந்திரனும்
இந்திரன்தயவாலேயெங்குஞ்செழித்தோங்கும்
அவ்வசனங்கேட்டுஅணிமதுராபாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச்சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லிநாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள்ஈசரதுகோயில்விட்டு
ஆலயத்தைவிட்டுஅப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங்காண்கிறது.

தெய்வலோகப்போகவென்றுசலுதியாய்த்தானடந்தார்
சோழனும்பாண்டியனுந்துரிசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்குஇசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்குசலுதியில்தானடந்தார்
அமரர்பதிதேடிஅரசர்கள்தானடந்தார்
வானுலகங்கிட்டிவருகிறவேளையிலே
ஆயிரங்கண்ணிந்திரரும்அமர்ந்தார்கொலுமேடை
முப்பத்துமுக்கோடிமுனிவர்களுந்தேவர்களும்

நாற்பத்தெண்ணாயிரம்நலமானரிஷிகளுடன்
அப்புருநாரதரும் துருவாசரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர்கள்கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள்கீதங்கள்பாடிநிற்க
மேனகைரம்பையும்மெல்லிதிலோர்த்தமையும்
ஊர்வசிநாட்டியங்களுச்சிதமாய்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமயத்தில்அழகுள்ளபாண்டியனும்
சோழனும்பாண்டியனும்துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்போகையிலே
கண்டானே இந்திரனும்காவலர்கள்வருகிறதை
பூலோகராசாக்கள்பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராசாக்கள்நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோஈச்சுரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்றுசொர்க்கபதிவருகிறார்கள்
நல்லதென்றுசொல்லிநலமுடனேயாத்திருந்தார்
பாண்டியனும்சோழனும்பதிகொலுவில்வந்தார்கள்

இந்திரனைக்காண்பது.

சொர்க்கலோகஇந்திரனைச்சோழனவன்பார்த்து
மிகவும்பயந்துமேன்மையுள்ள இந்திரற்கு
அஞ்சிபயந்து அடிதொழுது தெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான்சசிதேவிநாயகர்க்கு
தெண்டனிட்ட சோழனைத்தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனைவாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார்பூலோகச்சோழனுக்கு
எட்டுப்படியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசன்மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்திலமர்ந்தானேசோழனவன்
எதிராகப்பாண்டியனும் இறுமாப்புதானடைந்து
மதுரையாளும்பாண்டியனும்வணங்காமற்றானிருந்தான்
நம்மைப்போலிவனொருவன்ராசனல்லோயிந்திரன்றான்
இந்திரனைநாமும்எப்படிவணங்குவது
பூலோகஇந்திரன்போற்பொன்மதுரையாளுகிறோம்
சங்கரன்கிருபையினாற்றாணியையாளுகிறோம்
ஈசன்தயவிருக்கயிவனைவணங்குவதேன்
சொக்கர்மகத்துவத்தால்தொழாமலெதிரேநின்றான்
எதிர்நின்றபாண்டியனையிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான்வணங்காமலிருப்பதென்ன
நம்மைமதிக்கவில்லைநானெனபாண்டியனும்
எதிரில்மதியாமலிருக்கிறான்பாண்டியனும்

சொக்கர்வலுமையினாற்றொழகாமற்போனானே
நாரதாதயவால்நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப்பெருமைகள்தானுமுண்டோ
கெருவம்படைத்தோர்குக்கேடுவரும்தெரியாது
இவனுடையகெருவத்தையினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலேநடுங்கவைக்கவேணுமென்று
மர்ம்மத்தைக்கொண்டாராய்வானவர்கோனிந்திரனும்
ஆடாதாதுவர்கள்அருகிருக்குங்காவலரோ
சரியொத்தபாண்டியற்குச்சரிபீடம்போடுமென்றார்
எதிராகப்போட்டதொருஈடானஆசனத்தில்
குந்துமென்றார்பாண்டியனைக்கொலுமேடையாசனத்தில்
சரியாகவுட்கார்ந்தான்தனிமதுரைப்பாண்டியனும்
ஆடாதாதுவரோஅரசாளுமன்னனுக்கு
வந்ததொருமன்னனுக்குமாலையொன்றுபோடுமென்று
கண்காட்டயிந்திரனுங்கனமுடனேமல்லருக்கு

இந்திரன்கெண்டிமாலைசூட்டினது.

பாண்டியராசனுக்குப்பதித்தமுத்துகெண்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும்அணிமுததுகெண்டியொன்று
கொண்டுவந்துபோடுமென்றார்கொடிமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலைசோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேஓடினார்களந்தப்புரந்தானுழைந்து
ஆயிரம்பேராமல்லராவாள்பிடித்துத்தோளூன்றி
நெக்கியெடுத்தார்கள்நோனகழுத்துகெண்டி
இந்தோடேபாண்டியன்றான்ஈரல்நடுங்கிடுவான்
தூக்கிக்கொண்டுவந்தார்கள்சூராந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்டஎதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய்ப்பார்மாலைசூடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான்போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான்அழகுள்ளபாண்டியனும்
நாதாதுகிருபையினால்நடுக்கங்களில்லாமல்
சொக்கனாதுதிசெய்துதோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைநெளித்துமேமாலையைத்தாங்கிக்கொண்டான்
கண்டார்களெல்லாருங்கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டானேசிறப்புள்ளபாண்டியனை
இவனாலேயொன்றுமில்லையீசாதுதன்பலந்தான்
அறியோம்யிவனுடையஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேயல்லோபகைவைத்தானிந்திரனும்
ஒருவருக்குந்தெரியாதனுள்ளத்தில்கபடுவைத்தான்
பாண்டியன்முகம்நோக்கிபண்புடனேதுசெல்வான்
சோழனுநீருமாய்ச்சொக்கர்பதிவந்ததென்ன

வந்தவபணமதைவகைபிரித்துச்சொல்லுமென்றார்
அப்போதுபாண்டியனும்அருள்புரிந்தேதுசொல்வான்
எந்தனதுகாரியமாயிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன்சொர்க்கபதியிந்திரனே
அவ்வாசனலுவல்கொண்டுஅமரர்பதிவந்தேனென்றான்
தொந்தரைகள்படுகிறானேசோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல்வருத்தங்கள்மிகவாகி
நம்முதேசராச்சியங்கள்கருகுதேபூமியெல்லாம்
பரிசனங்களெல்லவரும்பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன்வருடப்பாரிலமழையிடையாது
அந்தவிசனத்தாலேஅடுத்துவந்தாரெந்தனையும்
தன்னாலேயாகாதென்றுயிசாண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோஉத்தரவுசெய்தார்காண்
ஈசன்விடைபெற்றுமல்லோயிவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானதல்லஉதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டுஆயிரங்கணிந்திரனும்
சோழன்முகம்பார்த்துச்சொல்லுவாரிந்திரனும்
எனக்குஞ்சாதேயின்பமுள்ளமன்னவனே
ஈசர்தாமலே இனியசவுக்கியமுண்டு
அப்படியேசெழிப்பேனென் அஞ்சாதேசோழமன்னா
நெறிமுறைமைதானறிந்தநீதியுள்ளமன்னவனே
நாதருவார்த்தைக்குநாமொன்றும்சொல்லலாமோ
அப்படியேயாணடப்பேன் அரசனேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லத்திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச்சரணமென்றடிபணிந்து
வாழ்த்திவிடைகொடுத்தார்வானவர்கோனிந்திரனும்
உத்தரவுபெற்றானேஉலகாளுஞ்சோழமன்னன்
பாண்டியனுமப்போதுபக்குவமாயெழுந்திருந்து
இந்திரனோவிடைதாறுமெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லிபோகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்ப்பூரித்துஅரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டுமல்லோதிரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில்வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள்செய்தந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுக்கொண்டுஅனுப்பிவிடைகொடுத்தார்
பாண்டியன்விடைபெற்றுப்பார்மன்னன்சோழனவன்
சொக்கநாதரிடத்துச்சோழன்நடந்துவிட்டான்
தன்னுடையராச்சியத்திற்றனஞ்சயனும்போய்நடந்தான்
இப்படியாய்ச்சோழனிருக்குமந்தவேளையிலே

இந்திரன் கோபித்துச் சோழன் பெருமைபடவும்

பாண்டியன் சிறுமைபடவுஞ்செய்தது.

ஆகாயவிந்திரனன்புடனேதுசெய்தார்
பாண்டியன்வந்ததுவும்பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற்றவிரியமாய்ப்போனதவும்
நானைபாண்டியன்றானும்மைவணங்காததினால்
மதியாமற்போனவனைமட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டானேகொழுந்தணல்போலிந்திரனும்
எறிபறக்ககண்களுடன்இந்திரனேதுசொல்வார்
மேகங்களேழையும்மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ்சதிராய்வரவழைத்து
வருணபகவானைவரவழைத்திந்திரனும்
சேருங்கள்மேகங்களேகீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாகபாண்டியவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாதுகருமேகங்களெல்லாம்
அன்னிதவான்மதுரையிலேஅடிவைக்கலாகாது
நூல்விழப்போகிறீர்கள்தன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல்இடைந்துமழைபெய்யுங்கள்
அவனுடையபூமிதனிலடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களுஞ்போய்மழைபெய்திராமானால்
கால்விலங்கும்கைவிலங்குஞ்சமற்றுப்பெருவிலங்கும்
தாள்விலங்குந்தோல்விலங்குந்தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோவெட்டிவெறிந்திடுவேன்
என்வார்த்தையைத்தடுத்தவருவிக்கப்போகிறீர்கள்
சோழனதுபூமியிலேசொர்ணமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரிவருவியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளையமும்மாரிபெய்திடுங்கள்
கறுப்புத்தெளியவேதான்கருமேகம்பொழிந்திடுங்கள்
எந்நாளுஞ்சோழனுக்குஇடையூறுவாராமல்
அவனுடையசீமையிலேஅமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தாரிந்திரனாப்போது
நல்லதென்றுசொல்லியல்லோநலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல்வருகிறதேமேகமெல்லாம்

சோழராசன்பெருமைபட்டது.

சோழனதுசீமையிலேசொலிக்கிறதேபெருமழைகள்
கடலிரைச்சல்போலாககர்ச்சிற்றேமேகமெல்லாம்
குமுறிபிடித்துக்குடங்கொண்டுபொழிந்ததுவே
இரைச்சலுடனேசவுகவெள்ளம்பொழிகிறது

சோனமழைகளதுசொரிகிறதேபூமியெல்லாம்
நல்லமழைகளாலேகாடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கேபொய்கைகள்நிரம்பியது
ஏரிகுளம்நிரம்பிகால்வாய்கள்தானிரம்பி
ஊற்றுகள்தான்சுரந்தோடிற்றேசலம்விசையாய்
தடாகங்கள்தானிரம்பித்தாமரைப்பூத்தனவே
வயல்கள்நிரம்பியல்லோவாய்க்காலுந்தானோடி
உலர்ந்தமரங்களெல்லாம்உயிருண்டாய்த்துளிர்த்தனவே
அடியற்றமரங்களெல்லாம்அன்பாய்த்துளிர்த்தனவே
காடுசெடிகளெல்லாங்கனமாகவேதுளிர்க்கும்
செடிகள்மரங்களெல்லாம்செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம்பூத்துச்சொரிந்தனவே
காயாமரங்களெல்லாங்காய்த்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவேதேசஞ்செழித்தனவே
கிள்ளப்பழுத்ததுவேகிளிகள்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுத்ததுவேஅணிகள்வந்துசோதுவன
சோலைகள்சாலைகளுஞ்சூழ்ந்ததடாகங்களும்
குருவியடுத்தனவேகுயில்கள்வந்துபாடுவதும்
குயில்களிரைச்சலிடுங்கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடையதுஅனேகம்வந்துசேர்ந்ததங்கே
பண்டுபழங்கள்தின்றுகளித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டியுழுவாரும்இளநாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகளெல்லாம்பலப்பட்டார்பூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம்ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரதேசியரிதேசிபஞ்சைபனுதியெல்லாம்
சோழராசன்பட்டணத்தில்சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லாரும்பெருமையடைந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம்சுகமாய்த்தழைத்தனவே
சோழமகாராசன்தொலைந்தான்விசனமெல்லாம்
தீர்த்தியடைந்தானேதிருவைபக்கடலாளன்
இந்திரனைமனந்தனிலேஎந்நாளும்நினைந்திருப்பான்
மாதமும்மாரிவருஷிக்கும்மண்டலத்தில்
சோழமகாராசன்தொலைந்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான்அழகானசோழமன்னன்

பாண்டியன்வறுமையடைந்தது.

பாண்டியநாட்டார்பரதேசம்போரார்கள்
மழைகள்கிடையாதுமதுரைநகர்சீமையிலே
காய்ந்துலர்ந்துபோயினதேசகனமதுரைபட்டணத்தில்
எறிந்துபுகைகிறதேசாங்கிடையாமல்
குடிக்கநீர்கிட்டாதுகுளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்குக்காண்டிசலங்கிடையாது
ஆறுகள்குளங்களெல்லாம்அடங்கலும்வரண்டனவே
ஏரிகள்வரண்டனவேஏற்றகோடைமுட்டும்
பூமிகள்சூடெழும்பிப்பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாதுவேந்தன்மதுரையிலே
களவுகள்கிடையாதுகனமதுரைப்பூமியிலே
பொன்மதுரைநாட்டிலேபுழுதியடைந்ததுவே
சருகுபோலுலர்ந்தனவேதழைத்தமரங்களெல்லாம்
பூமியுலர்ந்ததுபூண்டுகிடையாமல்
பறவைகள்கிடையாதுபாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினார்கொடிமதுரையுள்ளவர்கள்
பஞ்சைபனாதியாய்ப்பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாதுஅழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றியகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்துகரும்புகைச்சல்கொண்டனவே
தங்கநிழல்கிடையாதுதனிமதுரைபூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள்உறக்கங்கள்கொண்டார்கள்
பாழடைந்தமுகமானார்பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம்அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவருஷம்பாரக்கருப்பாயிற்று
சரீரம்வெளுத்தார்சல்லடைக்கண்ணானார்கள்
பெண்டுடனேபிள்ளைபுருஷர்களொருதேசம்
திக்குகள்கெட்டுத்திசைமாறிப்போனார்கள்
அப்படியலைந்ததுஅணிமதுரைபூமியெல்லாம்
இந்திரனாலேஇடறுகள்நேர்ந்தனவே
ஆயாசத்துடனேஅணிமதுரைப்பாண்டியனும்
மழையில்லாநாடுவையகம்தானாகுமோ
என்றுவிசனமாயிருக்குமந்தவேளையிலே
மேகம்பொழியுந்தனிச்சோழன்னாட்டினிலே
மேகங்குமரிமேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல்வதையுடனேபோய்விடுமாம்

இப்படியாயோடும்போது இதிலேயொருமேகம் 6
குட்டிமேகமொன்றுகுறுக்கிட்டுவோடும்போது
வருகிறவிசைதனிலேமதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிறதுபோகும்விசைதனிலே
அந்தமழைவெள்ளம்அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்புரண்டுவேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்துமாவெள்ளமோடுவதை
அதுகண்டுபாண்டியனும்அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான்சுந்தரப்பாண்டியனும்

பாண்டியன்வைகையாற்றை அணைகட்டியது.

ஓடுகிறவெள்ளத்தைஉள்ளடக்கவேண்டுமென்று
அப்புறம்போகாமல்அணைகட்டவேண்டுமென்று
ஆடாதூதுவனேஅணிமதுரைபட்டணத்தில்
வீட்டுக்கோராள்தான்விடுபட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டால்ஆக்கினைசெய்வேனென்று
அணைகட்டிவரச்சொல்லிஅடியடாதமுக்கென்றான்
அப்படியேதானடித்தான்ஆனதொருசாம்பவனும்
அந்தத்தமுக்கடிக்கஅணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோராள்கள்விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்கள்தம்முறைக்குஆளொருவர்வாரார்கள்
மண்வெட்டிக்கொண்டுவருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாகப்பறைகொண்டுஓடிவந்தார்
அவரவர்க்குப்பங்குஅளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில்அதிலேகுறைவுபட்டால்
பங்குவிதக்காரனைப்பட்டாவுக்கிடையிடுவேன்
என்றுதிட்டஞ்செய்தான்இராசனந்தபாண்டியனும்
அவரவர்கள்பங்குவிதம்அணைவரும்கட்டும்போது
மதுரையிலேயொருத்திவாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொருஆண்திக்குந்தானுமில்லை
அவளுக்கொருபங்குஅணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுச்சுடுவிற்றுப்பிழைக்குமந்தவாணிச்சி
என்னகிடப்பேனென்றுஎண்ணமிட்டாள்வாணிச்சி
ஆளுக்கிடையாதுஆருமற்றபாவிநான்

க்கிட்டவொருபக்கும்எப்படிச்செய்வேன்யான்
அணைகட்டஎந்தனுக்குஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால்அரசனுங்கேட்பானே
என்றுவிசனமுடனெண்ணியிருக்கையிலே

வாணிச்சிபிட்டுக்குச்சொக்கர்மண்சுமந்தது.

அவளுடையவிசனத்தையாற்றவேவேண்டுமென்று
அட்டாளுஞ்சொக்கரையாவரோதுசெய்தார்
அவளுக்குஆளாகிஅணைகட்டவேணுமென்று
ஒட்டனைப்போலேயுருவெடுத்துசொக்கலிங்கர்
தட்டுடனேமண்வெட்டித்தலைமேலேதானெடுத்து
வாணிச்சிஅண்டையிலேவந்துநின்றொட்டனாக
ஒட்டனைகண்டாளேஉத்தமியாள்வாணிச்சி
ஆரடாஒட்டாநீஅணைகட்டவந்தாயே
என்பக்குக்காளாகியெனக்கணைகட்டுவையா
கட்டுவேனென்றார்கனமதுரையொட்டனவன்
கேட்டதொருகூலிகிருபையுடன்தருவேனென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டுஅந்தவொட்டனேதுசொல்வார்
கூலிக்குபிட்டுசுட்டுகொம்பனையேநீகொடம்மா
உதிர்ந்துவிட்டபிட்டதனைஉத்தமியேநீகொடுத்தாள்
பிட்டுக்குமண்சுமந்துபோடுகிறேனணையாக
அப்படியேநல்லதென்றாளவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுசுடும்போதுபிட்டுதிர்ந்ததுகாண்
உதிர்ந்தபிட்டைதானெடுத்துஉத்தமியாள்கொடுத்தாளே
போடுவாரொருதட்டுபிட்டுஞ்சரியாகும்
மறுபடியும்தான்வருவார்வாணிச்சியண்டையிலே
பிட்டுசுடுவாளாம்பொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்தகொருபிட்டுக்குஒட்டன்வந்துநிற்பாராம்
பிட்டெடுத்துத்தான்கொடுப்பாள்போனவொட்டருக்கு
ஒருதட்டுமண்ணுக்குஉதிர்ந்தபிட்டுசரியாகும்
வாணிச்சிஅண்டைக்குவந்துநிற்பாரொட்டனவர்
பிட்டுசுடும்போதபொடிபொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்குஓடிவந்துநிற்பாரும்
பிட்டுகொடுப்பாளாம்போவாரார்தின்றுகொண்டு
ஒருமட்டுமண்போடுவதிலுதிர்ந்தபிட்டுசரியாகும்
மறுபடியும்வருவாராம்வாணிச்சிபிட்டுக்கு
ஒருபிட்டுசுட்டாலும்உதிராதிருப்பதில்லை
சுடப்பட்டபிட்டனைத்துஞ்சொரசொரென்றுசொரிந்திடுமாம்
உதிர்ந்தகொருபிட்டுக்குஓடிவந்துநிற்பாராம்
பிட்டுதின்றுகொண்டேபோடுவாரொருதட்டு

பிட்டுவிலையாகவில்லை ஒட்டன் வேலைசாயவில்லை
பாதியணையாயிற்றுபாதியின்னங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாணிச்சிபங்குக்குவரப்புகட்டிதீரவில்லை
பிட்டுகளைத்தின்கிறதும்போகிறதும்வருவதுமாய்
ஒட்டன்திரிவதிலேஉதிர்ந்தபிட்டுஞ்சரியாயிற்று
பொழுதுமறைந்ததுபொன்மதுரைபாண்டியனும்
கட்டின அணைகளைகனமுடனேபார்த்துவந்தான்
வாணிச்சிபங்குவரப்பின்னங்கட்டவில்லை
ஆருதடாயிந்தபங்கு அணைகட்டிதீரவில்லை
எவனுதடா இந்த அணையென்றுனேபாண்டியனும்
அரசனுக்குச்சொல்லுகிறாரணைகட்டுமன்னவர்கள்
வாணிச்சியங்குக்குவந்தானேயொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றான்
கோபங்கள்கொண்டானேகொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடா ஒட்டனவனிழுத்துக்கொண்டுவாருமென்றார்
ஒட்டனைப்பிடித்துவந்தார்உலகாளுப்ராசனண்டை
கண்கள்சிவப்பேறிகனமதுரைபாண்டியனும்

சொக்கர்பிரம்பாலடிபட்டது.

பிட்டுக்குமண் சுமந்தபித்தனென் றறியாமல்
ஒட்டனென்றெண்ணியல்லோ ஓங்கியடிக்கலுற்றான்
கைப்பிடித்தபிரம்பதனைக்கரமொன் றுதான்சுழட்டி
ஒட்டன்முதுகின்மேலோங்கியடித்தானே
அந்தஅடிபடவேஐயரந்தசொக்கருக்கு
வருத்தங்கள்கொண்டாரேமதுரைசொக்கநாதருந்தான்
அந்தவடியுந்தான் அனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்எம்முதுகில் அடித்தழும்புநேர்ந்தனவே
திக்குதிசைகளுந் தீவாந்திரங்களெல்லாம்
அண்டங்கள் தீவுகளும்ஆகாசமெவ்விடத்தும்
சகலசீவசெந்துக்குமதழும்புமிகவுண்டாச்சு
பாண்டியன்முதுகின்மேற்பாரத்தழும்பாயிற்று
எல்லவரும் பயந்தரிந்தவடியாலே
பாண்டியனுமப்போதுபயந்துநடுநடுங்கி
எங்கேயந்தவொட்டனென்றுமேயெடுத்துப்பார்க்கும்போது
மாயமாய்த்தான்மறைந்தார்வந்ததோரொட்டனவர்
எங்கெங்குந்தேடினான் இனிமதுரைபாண்டியனும்
காணாததினாலேகணக்கத்தாணிடிவிழுந்தான
வந்தவரொட்டனல்லவாண்டிசொக்கரவர்
ஆண்டவராகவேயும் ஆளடிமைசெய்யவந்தார்

தெரியாமற்போச்சுதென்றுசிநகைதமிகவாடி
[illegible]ளைக்காளானேமெதெய்வமென்றுயாராமல்
வல்வினைக்காயானேம்மகாதேவனென்றறியால்
இந்தவிதியதனைஎப்போதுலைத்திடுவோம்
வந்ததுநமக்குமல்லோமதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயுமீடேறப்போவதில்லை
தெரிந்ததுநமக்கென்றுதென்மதுரைபாண்டியனும்
மெத்தவிசனமாய்விடுதிக்குவந்துவிட்டான்
அழகியசொக்காவர்ஆண்டவனாப்போது
ஒட்டனென்றஉருவைஉத்தமனார்தான்மறைத்து
ஆலயத்தில்வந்தாரேஅட்டாளுஞ்சொக்கலிங்கம்
வருத்தத்துடனேயவர்வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சியண்டையிலேயோடிவந்து
ஏதுகாண்சுவாமிநீருமிப்படிக்குவந்ததென்ன
அலையகுலையவந்தீர்அக்குறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்னுபகியேகிளிமொழியேமீனாட்சி
வாணிச்சிக்காகவல்லோமண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப்பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென்னங்கந்தழும்பேற
கொடுத்தான்முதுகின்மேற்கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போனேன் அபாயம்வந்துநேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போறதில்லை
என்றுரைக்கசொக்கரொடுத்துரைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழைபெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லவோமண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லிஅடித்தான்பிரம்பாலே
ஐயனென்றுதானறிந்தாலடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால்சிற்றத்தில்வையாமல்
ஆதரிக்கவேண்டுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டுஅழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தஅடிஎல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாப்உறைத்ததேபிரம்படிதான்
சித்தர்முனிவர்கள்தேவருக்கும்பட்டதுவே
வானவர்ரிஷிகளுக்கும்மாயனுக்கும்பட்டதுவே
சப்தரிஷிகளுடன்தபோதனர்க்கும்பட்டதுவே
சகலசீவஜெந்துக்குத்தழும்புவந்துநேர்ந்ததுவே
கன்னியர்கள்கெர்ப்பங்கருவுக்குப்பட்டதுவே
இந்தப்பழிபாவமெப்படிதொலையுமடி
இந்தப்பழிக்குப்பெண்ணேயைந்தன்வாய்நான்கொடுக்கேன்
கருவுதரிக்கவேதான்கன்னியரோநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம்அத்தோடேதொலையுமடி

என்றுமிவருணாக்கலங்கிமழையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள்மதுரைமீனாட்சியரும்
இப்படிசிலகாலம்இருக்குமந்நாளையிலே
பாண்டியனுடுபரிசனங்களெல்லவரும்
அரசனதுனுடுஅருமைமழையில்லாமல்
தத்தளித்துப்போகிறதேதனிமதுரைபூமியெல்லாம்
அரனுனாததாணடிக்கஅக்கொலைப்பாதகனும்
கம்புதேநாட்டிற்கதறுதேபூமியெல்லாம்
மைந்தருமில்லைமகுடமுடிஅரசனுக்கு
பிள்ளைகளுமில்லைசேனையன்னனுக்கு
அப்படியாய்த்துன்பம்அரசனும்பட்டிருந்தான்
ஆனையும்வணங்காதேஅந்தசித்திராங்கதனும்
சிறுத்தேனென்றுசொல்லிப்பெருத்தவரைப்போயடிக்கான்
தெய்வமேகதியென்றுதேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்றுதோத்திரங்கள்செய்திருந்தான்
பன்னிரண்டுதன்வருடம்பாரில்மழையில்லாமல்
துன்பங்களுடனேபல்லோதுரைதனம்பண்ணுவார்

சொக்கரும்மீனாட்சியும் கானகமடைந்தது.

மதுரையிலேவாழும்மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சிஅம்மனும்சொக்கருமாய்
இருவருமப்போதுஏகாந்தவேளையிலே
தேவியரைப்பார்த்துசுவாமியவரோதுசொல்வார்
பெண்ணேபெண்ணேமீனாட்சிபொற்கொடியேஆலயத்தில்
தணலாயெரிகிறதுதனிக்காற்றடியாமல்
ஒடுக்கங்களாகிறதுஉன்மதுரைபட்டணத்தில்
காற்கருளிங்கடிக்கக்கனிவிருட்சங்கிடையாது
ஒடுக்கங்கள்தீரவேண்டிஉலாவிநாம்வந்திடலாம்
காத்துவாடைக்குநாம்கானகத்தில்போய்வரலாம்
மதுரையைச்சுற்றிவருவோம்நாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர்மயிலனையைத்தானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மீனாட்சி
சம்மதிப்பட்டுசதியும்புருடனுமாய
இடபத்தின்மேலேறிஈஸ்வரனுமீஸ்பரியும்
எருதின்மேலேறியிருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டுஆபரும்வெளியானார்
மதுரையைவிட்டுமகாதேவர்வெளியானார்
மதுரையைச்சுற்றிவந்தார்களிருவருமாய்
பட்டணங்கள்சுற்றிபாத்துவருகையிலே
அழகுமறைந்தது அழகானதென்மதுரை

அண்டவொருநிழலும்ஆசரிக்கக்கிடையாது
அண்டநிழலில்லைஒருமரமுங்கிட்டாது
தோட்டங்கிடையாதுதுறவுகள்தூர்ந்திருக்கும்
நிற்கநிழலுமில்லைநிலத்திற்றரிப்போமென்றால்
கானகங்களத்தனையுங்கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாதுசெட்டுகள்கிடையாது
தழைகள்கிடையாதுசற்றேயிருப்போமென்றால்
வெய்யலுரைக்கின்றதுவெங்கானல்வீசிடுமாம்
கானலுரைக்கின்றதுகடுங்கானல்வீசிடுமாம்
வேர்வைபொழிகிறதுவிமலருக்கும்பார்வதிக்கும்
அண்டமுடி கூடவில்லைஅக்கினிவாடையது
அக்கினிவாடையதுஅனல்கொண்டுவீசுதையா
நடுக்காட்டில்வந்தார்கள்நாதரும்தேவியுமாய்
அந்தநடுக்காட்டில்அலைந்துவருகையிலே
இங்கேயொருவில்வமரம்அடர்ந்துதழைத்திருக்கும்
பசுமையாகத்தழைத்துப்படர்ந்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல்தழைத்திருக்கும்வில்வமரம்
என்னேரமுஞ்சலங்கள்இலையிற்படர்ந்திருக்கும்
காய்த்துப்பழுத்துகனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்துபுட்பங்கள்படர்ந்திருக்கும்
தென்னலதுவீசுந்தேகங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்றுஅவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள்அரனுமுமையவளும்
அந்தவதிசயத்தைஅன்புடனேகண்டுவிட்டார்
சோபந்தெளிந்துதேகமுந்தான்குளிர்ந்து
இந்தநடுகாட்டிலிதுதழைத்தவதிசயத்தை
கண்டறியோமென்றுகடுகியேகீழிருந்து
எருதைநிழலில்விட்டுஇறங்கினார்மரத்தருகில்
ஆயாசந்தீர்வதற்குஅவ்விடத்திலுட்கார்ந்தார்
சவுக்கியமானார்கள்தங்கள்சரீரத்தில்
இருவருமுட்கார்ந்துஏகாந்தமாயிருக்க
பட்டப்பகலிலேபாங்கான்வேளையிலே
உச்சியிற்சூரியன்உருமத்தின்வேளையிலே

நீர்க்காக்கையைக்கண்டது.

அங்கேயொருநீர்க்காகம்அலைகடலில்போய்முழுகி
கடலில்முழுகியேகடல்சலத்தைதான்வாரி
செப்பட்டையில்நிறையசலங்கொண்டுவருகிறதாம்
கடல்நீரைக்கையிலேகாகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல்மேலாகத்தான்பறந்து

மேலிருந்துவிசிற்றும்மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலேவருஷிக்கும்காகமது
வருஷித்தஜலங்கள்மகாதேவர்மேற்படவே
குளிர்ந்ததுதிரேகங்கொடிமதுரைசொக்கருக்கு
அங்கையற்கண்ணம்மனுக்கு அங்கம்குளிர்ந்ததுகாண்
எதிந்தஜலமென்றுஎடுத்துப்பார்த்தார்கள்
சங்காரும்சங்கரியுந்தலையெடுத்துப்பார்க்கையிலே
நீர்க்காகம்சலம்பொழிந்துநின்றுபறந்ததுவே
அந்தகல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேபேட்சியிடதன்னறிவு
கண்டாயோபெண்ணேகாகத்தின்தன்னறிவு
இந்தமாத்துக்குஇக்காகம்நீர்தெளிக்க
ஏதனால்தெளிக்கிறதோ இதையறியவேண்டுமென்று
காகத்தைதான்கேட்டுகாரியமறிவோமென்றார்
அப்படியேயழையுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுஉமையுரைக்கஈஸ்வரனுமப்போது
ஆகாயத்திற்றான்பார்த்து அந்தநீர்க்காகமதை
கைகாட்டிதானழைத்தார்கைலாசநாதருந்தான்
கண்டதுகாகம்கைலாசநாதரென்றும்
அஞ்சிப்பயந்துஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோதற்காக்கநன்மையென்று
சீக்கிரமாய்தானிறங்கிதிட்டெனவேயோடிவந்து
முக்கால்வலம்வந்துமுடிவணங்கிதெண்டனிட
நாற்கால்வலம்வந்துநபஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியைச்சிவனாருந்தான்வாழ்த்தி
அடிபணிந்தகாகமதை அரனாருந்தான்வாழ்த்தி
இந்தபாதத்துக்குஇறைப்பதென்னநீசலத்தை
இந்தமாதனாலேஇத்தனைவருத்தமென்று
வருத்தத்துடனேநீவந்துநீர்தெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள்சொக்கரவர்கேள்விபட்
கண்டதுகாகம்கணக்கமிகப்பயந்து
சொல்லுகிறதுகாகஞ்சொக்கரவர்கேள்விபட்
தங்களுக்கேயுகந்ததனித்தமாவென்றுசொல்லி
விமலருக்குகந்தவில்வமாமென்றுசொல்லி
அதனால்கடல்நீரை அள்ளிவந்துயான்தெளித்தேன்
நாடோறும்யான்தெளித்தேன்நாதருக்கேற்றதென்று
இதுதானேயெந்தனுக்குஈஸ்வரனார்கட்டளைதான்
அவ்வார்த்தைதான்கேட்டு அரனாரும் அம்மனுந்தான்
ஆனந்தமாய்ப்பூரித்து அறிவுள்ளகாகமென்று
கட்டித்தழுவிகாகத்தைத்தானோக்கி
உந்தனுக்கேத்ததொருஇந்தமாமென்றறிந்து

கலையாகவந்தவற்குகளையாற்றிவைத்தாயே
இ[illegible]சசகாயமதைஎங்களுக்குச்செய்தாயே

சொக்கர் நீர்க்காக்கைக்கு வரங்கொடுத்தது.

உனக்கொருசகாயம்உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரம்வேண்டும்இன்பமுடனுந்தனுக்கு
கேட்டவரந்தருவேனென்றார்கிருபைமிகக்கூர்ந்து
அப்போதுகாகந்தான் அரனாரைச்சேவித்து
சொல்லுகிறதுகாகஞ்சொக்கருக்குதெண்டனிட்டு
கைலாசநாதரேகண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கின்றஎண்ணத்தைச்சொல்லுகிறேன்
கன்னிப்பெண்ணுக்கெனமதுரைப்பாண்டியனை
சேரவேண்டுமென்றுசிந்தையில்நினைத்திருந்து
என்னுடையபாலனுக்குஇசைந்தபட்டந்தரவேணும்
அந்தவரமெனக்குஅருள்புகழவேண்டுமையா
காகமதுசொல்வதைக்கண்டாரேசொக்கலிங்கம்
ஆனாலொருவார்த்தைஅன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணுக்கெனமதுரைநீபோனால்
மன்னனைச்சேர்ந்தாலும்மலடியாய்ப்போய்விடுவாய்
உன்னைப்பெண்ணாக்கிஒருமாதங்கெர்ப்பமதாய்
ஆரொன்றுகேட்பான்அணிமதுரைபாண்டியனும்
ஆருமற்றபாவிநான்அண்டவந்தேனும்மையென்று
சொல்வாயாயாமாகில்தோழியாய்வைத்துக்கொள்வான்
தாதியாயிருந்தாயானால்தையலேயுந்தனைத்தான்
வசந்தநாளானாலமருவமனங்கொள்ளுவான்
ஆருமறியாமல்அணைவானேயுந்தனைத்தான்
அணைந்தாசைதீர்த்திடுவாய்அரிவையிளமாதே
உன்வயிற்றிலேபிறக்கும்உறுதியுள்ளபாலனுக்கு
பட்டந்தரிப்பான்பட்டணத்திலொருபங்கு
அந்தவரமளித்தேன்அப்படியேநடவுமென்றார்
சம்மதித்துகாகஞ்சந்தோஷங்கொண்டதுவே
காகத்தைப்பெண்ணாக்கிகருப்பமுமுண்டாக்கி
நீர்காக்கையென்றுநேரிழைக்குப்பேர்கொடுத்து
நடவுமென்றுபேர்கொடுத்துநாதாவர்போய்விட்டார்

நீர்காக்கைபெண்ணாகிப் பாண்டியனையடுத்தது.

அப்போதுநீர்காக்கையரிவையந்தபெண்ணணங்கு
மதுரைநகர்தேடிவந்தாளேபெண்மயிலாள்
பாண்டியனிடத்தில்பக்குவமாய்வந்துநின்றாள்
அப்போதுபாண்டியன்அரிவையரைத்தான்பார்த்து

சுந்தரமும்வடிவுமுள்ளதோகையரைத்தான்பார்த்து
ஆரடிபெண்ணேநீயறியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்குஏதுசொல்லுவாள்
ஆருமில்லாபரதேசிஅண்டிவந்தேனும்மையென்றாள்
ஒருமாதங்கெர்ப்பம் உத்தமியாளெந்தனுக்கு
ஆருமற்றஎன்றனைநீர் ஆதரிப்பாயென்றுரைத்தாள்
அவ்வசனங்கேட்டுயெந்தமுள்ளபாண்டியனும்
கெர்ப்பமானமங்கைகிளிமொழியாளாகையினால்
காப்பாற்றவேண்டுமென்றால்கன்னியரேயஞ்சாதே
அப்படியேசெய்வேனென்று அரிவையரேகூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டைதாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந்தாதியாய்த்தானிருந்தாள்
அழகுந்திருமேனிஅலங்காரமாயிருப்பாள்
புத்தியுள்ளகுணவதியாய்ப்பூஷணலங்கிர்தையாய்
பாண்டியன்தேவிக்குபக்ஷமாய்த்தானிருந்தாள்
சுந்தரமும்எவ்வனமுஞ்சொல்லத்தொலையாது
வாலிபமாய்ப்பெண்மயினும்மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திலிருக்கையிலே
வசந்தமானகாலம்வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால்மன்னனந்தபாண்டியம்
தன்னுடையதேவியாந்தையலாண்மனைக்கு
மாளிகைதேடிவரும்போதந்தவேளையிலே
வாசற்படியிலேமயில்போல்தாதியவள்
பொற்பதுமைபோலேபொன்னுபரணமின்ன
நின்றாளேநீர்காக்கைநேரிழையைத்தான்பார்த்து
அதிகமயல்கொண்டானே அந்தமுள்ளசுந்தரிமேல்
அவளுமிவர்பேரிலாசைகொண்டுநின்றாளே
ஒருவர்க்கொருவர்உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்செய்வதற்கு அரிவையரைத்தானழைத்தார்
அதற்கந்தநீர்காக்கைஅரிவையருஞ்சம்மதித்து
என்வயிற்றிலேபிறக்கும்இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோபாண்டியரேயென்னளும்
நாவிலொருபங்குநடத்துவேன்மங்கையரே
அப்படிக்குச்சம்மதித்தாள்அரிவையிளமாது
ஆருமறியாமல்அருகொருவர்காணமல்
கூடியணைந்தான்கோலவிழிமாதரசை

அசைக்கவிந்திருக்கையிலே ஆண்கொடுத்தவரத்தினாலே
க[illegible]துடனேசேர்த்துதுரிதமுடன்பாண்டியனும்
[illegible]பண்டைபாண்டியனுஞ்சிங்கியாபாடந்திட்டான்
இப்படிசிலகாலமிருக்குமந்தநாளையிலே
அப்போதுதீர்க்காக்கை அரிவையிளம்பிறையும்
மாதமும்பத்தாச்சுவருந்திமிகத்தவித்து

தீர்க்காக்கை நீன்முகனைப்பெற்றது.

பிள்ளையைப்பெற்றாள்பேருள்ளமதனாயிலே
மைந்தனைப்பெற்றாள்மாதந்தீர்க்காக்கை
தானிவயிற்றிற்சந்ததிபிறந்ததென்று
சந்தோஷங்கொண்டுசர்க்கரைவழங்குகிறார்
தீர்க்காக்கைபெற்றெடுத்தகோபாலனுக்கு
நீன்முகனென்றுநேர்த்தியாய்ப்பேருமிட்டார்
பிள்ளையில்லாமாளிகையிற்பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவிபட்சமாய்த்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்ததுபோரணமாளிகையில்
தாதிபின்பிள்ளையென்றுசதங்கைகொலுசமிட்டு
காப்புகடகமிட்டுகண்டசரமணிந்து
ஆடைகளிட்டு ஆபரணந்தான்பூட்டி
வயதுமைந்தாகவளர்ந்துவருநாளையிலே
ஐந்துவயதாகிஅமர்த்தினார்பள்ளியிலே
பண்ணுதமிழ்வித்தைபடிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தான் ஆயுதம்பிடிக்கறிந்தான்
சகலமுங்கற்றுசாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே ஆண்யனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்தவீரியன்நீன்முகனும்
அப்படியாயிருக்க ஆனதொருபாண்டியனும்
தமக்குப்பிள்ளையில்லையென்றுராசனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற்செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்குபாலகனில்லையென்று
விசனத்தைகொண்டானும்வேந்தனந்தபாண்டியனும்
சித்திராங்கதனுடனேசேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறுபிரம்பேர்கள் அணிதிரளம்பாண்டியர்கள்
பிள்ளைகளில்லாமற்பெருமலடாய்ப்போனோமே
ஆறுபிரவர்களைவரும்மலடானோம்
அவர்களுடன்கூட ஆரார்கள்தான்மலடு
பாண்டியர்களேறிவரும்பட்டத்தானைதான்மலடு
கொட்டாய்நிறைந்ததொருகுதிரையெல்லாந்தான்மலடு
பட்டிநிறைந்ததொருபாற்பசுக்கள்தான்மலடு

தொழுவம்நிறைந்ததொருசெவ்வாடுதான்மலடு
எறப்பிலேயிருக்கின்றஎலிகளெல்லாந்தான்மலடு
தெருவிலேகூடுகட்டுஞ்சிறுகுருவிதான்மலடு
தெருவிலேதானிருக்குமதென்னமரம்தான்மலடு
கொல்லையில்தானிருக்கும்புன்னைமரந்தான்மலடு
வாசலிலேதானிருக்கும்வாழைமரந்தான்மலடு
அழுக்கெடுக்குவண்ணானும்அம்பட்டனுந்தான்மலடு
வளர்க்கின்றநாய்சளுடன்வாழ்பூனைத்தான்மலடு
மைந்தனுமில்லாமல்மகாபாவியானார்கள்
பிள்ளையுமில்லாமல்பெரும்பாவியானார்கள்
மைந்தன்பெறவேண்டுமென்றுவருந்தியேபாண்டியர்கள்
சாலைகள்போட்டுவைப்பார்சத்திரங்கள்சட்டிவைப்பார்
நடபாவிதிருக்குளங்கள்நல்லதண்ணீர்கிணறெடுப்பார்
தவித்துவருவோர்க்குதண்ணீர்பந்தல்போட்டுவைப்பார்
பசித்துவருவோர்க்கும்பாலமிர்தஞ்செய்துவைப்பார்
ஆலயங்கடோறும்அணிமதில்கட்டிவைப்பார்
கோவில்கடோறுங்கோபுரங்கள்கட்டிவைப்பார்
காணாதகோயில்கட்குகாணிக்கையனுப்பிவைப்பார்
செங்கல்லைக்கண்டவுடன்தெய்வமென்றுகைதொழுவார்
என்னதவஞ்செய்தாலுமேதாலும்பிள்ளையில்லை
தவத்திற்குப்போகவென்றுதங்கள்மனதிலெண்ணி

நீன்முகனுக்குப்பட்டங்கட்டிப்பாண்டியர் தவம்போனது.

வெள்ளாட்டிபெற்றெடுத்தவேல்வேந்தநீன்முகனை
மதுரையையாள்வதற்குமன்னனுக்குப்பட்டங்கட்ட
நீன்முகனைத்தானழைத்துநீதியுள்ளபட்டங்கட்டி
ஆதிசிவனைநோக்கிஅருந்தபசுசெய்யவேண்டும்
மைந்தன்வரத்தைப்பெற்றுவருகிறநாள்வரைக்கும்
எல்லையரசாளுமென்றுஇனியபட்டங்கட்டிவைத்தார்
ஆறாயிரம்பாண்டியர்களையமாரனைவோரும்
ஆண்பெண்ணடங்கலும்அரியதவஞ்செய்வோமென்று
போகிறார்பாண்டியர்கள்பொன்மலையைத்தேடி
வனமாய்வனங்கடந்துவருகிறார்பாண்டியர்கள்
காடுசெடிதாண்டிகரியமலைதான்கடந்து
சிருவதபருவதத்தைச்சேர்ந்தார்கள்பாண்டியரும்
ஆறாயிரம்பாண்டியருமவருடையதேவியரும்
கண்ணிரண்டுமூடிக்கொண்டார்கையிரண்டுமேந்திக்கொண்டார்
பரமசிவனைநோக்கிப்பாரதவம்பண்ணுகிறார்
மைந்தனைவேண்டியேமாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியேபூமியைமறந்தார்கள்
பாண்டியர்களேறிவரும்பட்டத்துவெள்ளையானை

ஆறாயிரவருடன் ஆனைதவஞ்செய்கிறது
[illegible]ாலுயரெடுத்துநடுவேயோர் தும்பிக்கையில்
தும்பிக்கைநாட்டிச்செய்கிறதுபெருந்தவசு
அப்படியாகவேதானனேகதவம்பண்ணுகிறார்
அப்போதுபரமசிவன் ஆதிகயிலையிலே
ஆவணிமாதத்திற்றான் அன்பானநாளையிலே
பிட்டுதிருநாளுக்குப்புறப்பட்டார்சொக்கலிங்கம்
தேவாதிதேவருடன்தெருசுற்றிவலம்வரவே
அரகராவென்றசத்தம்அலைகடல்போல்கோஷ்டமிட
சிவசிவாவென்றசத்தம்தேவருக்கும்காதடைக்கும்
அந்தசத்தந்தான்கேட்டு அங்கயற்கண்ணேதுசொல்வாள்
என்சாமிஎன்குருவேஎன்னுடையகர்த்தாவே
அரகராவென்றசத்தம்அலைகடல்கேட்கிறது
சிவசிவாவென்றசத்தம்செவியடைந்துபோகுதையா
இந்தவனத்தில்மெத்தஇரைச்சலென்னஆண்டவனே
என்றுதான்கேட்டவளீஸ்வரனேதுசொல்வார்
ஆறாயிரம்பாண்டியர்களரியதவம்பண்ணுகிறார்
மதுரைநகராளும்வாழ்பாண்டிநாட்டார்கள்
புத்திரனைவேண்டியேபொருந்திதவம்பண்ணுகிறார்
கோவிலுக்குப்போவோம்கொம்பனையேயென்றழைத்தார்
இவ்வார்த்தைதான்கேட்டீஸ்வரியுமேதுசொல்வாள்
தவசுபண்ணும்விந்தைதான்சுவாமியேநானறியேன்
ஏதேது தவம்பண்ணுவாரீஸ்வரரேபார்ப்போம்வா
அம்மனுடனே அரனாருங்கூடிவந்தார்
ஆறாயிரவர்களருந்தவசுபார்த்தார்கள்
புற்றுமூடிப்போனதும்பெருங்கரையானெறித்ததும்
புல்மூடிப்போனதும்புழுதியடைந்ததும்
யானைதவசுநிலையருந்தவசுபண்ணுவதும்
உற்றுற்றுப்பார்த்தாளே உத்தமியாளீஸ்வரியும்
ஐயாபரனே ஆறாயிரவருக்கும்
புத்திரனளித்துவிடும்பேரானபாண்டியர்க்கு
ஆனால்கேள்பெண்மயிலேஅரசர்கொடுமையெல்லாம்
கூலிக்குறைத்தவர்கள்குறைமறக்காவிட்டவர்கள்
அங்காடிகூடைதனை அதிரவிலைபிட்டவர்கள்
பட்டடைநெற்களிலேபதரைக்கலந்தவர்கள்
பசித்தார்முகம்பாரார்பாலடைக்குப்பால்வாரார்

தவித்தார்முகம்பாரார்தாகங்கொடுத்தறியார்
ஆண்டிபரதேசியைப்போல்அங்கொருநாள்வடிவெடுத்தேதென்
பாண்டியராசர்கள்பருமுகதனைக்கையிலே
சிவதருமமென்றுசொல்லியேசேர்ந்துவந்துபிச்சையென்றேன்
பகராணமுத்தெடுத்துப்பாவிபெணக்கிட்டார்கள்
சிப்பிமுத்துபோட்டார்கள்தோஷிபந்தபாண்டியர்கள்
பதறிட்டபாவிகட்குப்பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேதென்பிரம்படியும்பட்டுவந்தேன்
என்னதவம்பண்ணினாலும்வகாலும்பிள்ளையில்லை
எழுபிறப்பிலேயுமிப்பிறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டீஸ்வரியாளேதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தாலுமீஸ்வரனேமனமிரங்கி
புத்திரனைக்கவேண்டும்புகழானபாண்டியற்கு

பாண்டியற்குஈஸ்வரிபுத்திரவரங்கொடுத்தது.

உன்-சித்தமிரங்காமற்போனாலுமீஸ்பரே
ஒருபெண்ணாகிலுமளிப்பேன்புகழானபாண்டியர்க்கு
அங்கயற்கண்ணம்மையவளதிகமனமகிழ்ந்து
கோளமதைக்கைக்கிள்ளியாமைதாரவெறிந்துவிட்டாள்
அல்லியக்கொடியுமாயடர்ந்ததொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரைசேர்ந்ததொருபொய்கையிலே
வானவருமிகதிரும்வந்திருக்கும்பொய்கைதனில்
சந்திரனுஞ்சூரியனுஞ்சிபண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலேதண்ணீர்தடாகந்தன்னில்
அல்லியிலைமேலேவந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக்கண்ணுமுகமுருவாகி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லிக்குழந்தையழுதது
சந்திரனைப்போலத்தளுப்புதுகாண்பொய்கையிலே
சூரியனைப்போலேதுலங்குதிந்தக்குழந்தை
மேகத்துமின்னலைப்போல்மின்னுதிந்தக்குழந்தை
குன்றுமேற்சந்திரனுங்குதித்தெழுந்தபாலனைப்போல்
இருண்டிருக்குஞ்சோலையிலேதிரண்டெழுந்தசூரியன்போல்
இப்படியாகவேதானிருக்கிறவேளையிலே
அங்கயற்கண்ணம்மையவளதிகமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடிதுலாவிவரக்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தனில்இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற்பார்த்தனுக்குமாலையிட்டு
நல்லரசாளவிசைந்தவரங்கொடுத்தாள்
அய்யனமூதத்தினினைந்தபதக்கமுடன்
சுவாமிசமூகத்திநாதிசபதக்கமும்
லக்ஷித்தரித்தானேவரிசையுள்ளகுழந்தைக்கு

அல்லியென்றுபேருமிட்டு அங்கயற்கண்ணம்மாள்
ப[illegible]டியனைத்தானழைத்துபார்வதிபேதுசொல்வாள்
ஆறுயிரவரே அணிதிரளாம்பாண்டியரே
அல்லியிலைமேலே அழகுதமைந்தனிருக்கிறது
ஆனுமதுபெண்ணுமது ஆறுயிரவருக்கும்
எடுத்துபோய்வாருமென்றுஈஸ்வரியுந்தானுரைத்தாள்
அப்போதுபாண்டியரும்அரனைத்தான்வணங்கி
தவசுநிலைகலைந்துதானெழுந்தார்பாண்டியர்கள்
அல்லியிலைமேலே அமைந்திருந்தகுழந்தையைத்தான்
தாங்கள்பெற்றதுபோலேதழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள்மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கிவருகிறார்பாண்டியர்கள்
ஆளோடேவிட்டார்அறிக்கைவிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பெருபெற்றுவருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பெருபெற்றுபுண்ணியர்கள்வாரார்கள்
நீன்முகராசனுக்குநீதியுடன்சொல்லுமென்று
தூதனுடன்சொல்லியேசேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றுவொருவனுந்தானுந்தமர்க்கேசேதிசொன்னான்
கேட்டந்தநீன்முகனுங்கோவமதிகமாகி
ஆரடாதூதாலோ அகங்காரமல்லர்களோ
பாண்டியராசனுடன்பாங்காகவார்த்தைசொல்லும்
நீன்முகராசனிவனிலைகொண்டானிராச்சியத்தை
நீங்கள்தரித்துவைத்தநிண்ணயப்பட்டமது
பட்டக்குறையவில்லைபாருலகம்வருவதில்லை
மதுரைக்குவந்தாலேவல்லுயிரைவாங்குவேன்

நீன்முகராசனுக்குப்பாண்டியர்கள்பகுதிகட்டதிர்மானி

நீங்களெங்கேயிருந்தாலும்எங்களுக்குப்பகுதிகட்டி
வருஷத்துக்கொருதரம்வரவனுப்பும்பாற்குடங்கள்
ஆறுயிரம்பாற்குடங்களனுப்பவேண்டுமென்னகர்க்கு
அனுப்பாமற்போனாக்கலக்கினைகள்செய்திடுவேன்
நீன்முகராசன்நிச்சயமாய்ச்சொன்னானென்று
பாண்டியராசருக்குப்பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றொருவனுமோடிஞராசரண்டை
ஆறுயிரபாண்டியர்களையருக்கேதெண்டனிட்டு
நீன்முகன்சொன்னதொருநிச்சேதிசொல்லலுற்றான்
உங்களாலவந்தவினைக்காரென்னசெய்வார்கள்
அவனைவெறுக்கவென்றாலதிகமானபாவம்வரும்
வடமதுரைபட்டணத்தில்வந்துகுடித்தனமாய்
உழவுகுடித்தனமாயுத்தமர்கள்வாசம்பண்ணார்
வருஷத்துக்கொருதரந்தானவரவிடுவார்பாற்குடங்கள்

இந்தவிதமாகவேதானிருந்தார்கள்பாண்டியர்கள்
சொக்கருளாலேசுந்தரியாளல்லியற்கு
மாணிக்கத்தொட்டில்விட்டுவளர்த்தார்கள்பாண்டியர்கள்
ஒருமாதமிருமாதமொன்றிரண்டுமூன்றுச்சு
சிற்றாடைகட்டுவாளாஞ்சிறுகப்பிலோவிடுவாள்
பாவாடைகட்டுவாளாம்பந்துவிளையாடுவாள்
அம்மானைப்பந்துகளும் அழகானபிள்ளடிப்பாள்
ஐந்தாம்வருஷத்திலழகானபள்ளிவைத்தார்
எழுபிராயமட்டும்இளங்கொடியாள்தான்படித்தாள்
ஆறுசாஸ்திரம்நான்குவேதமறுபத்துநாற்கலைக்கியானம்
அம்புவித்தைவில்வித்தைஆஸ்தானவித்தையெல்லாம்
காணலாப்பந்தியங்கள்கற்றுக்கொண்டாளல்லியரும்
பள்ளிபின்கனேறிபகற்பாடமொப்பித்து
பாலமிர்தமுண்ணுனைக்குப்பத்தினியாள்வாளுற்றாள்
அப்போதுநீன்முகன்றானாயிரவாண்டை
ஆயிரந்தூதுவனை அனுப்பினான்நீன்முகனும்
ஆயிரங்குடத்திலகப்பட்டமாண்பாலாய்
வாங்கிவாச்சொல்லியேவரவிட்டான்தூதுவனை
மலைகளூடன்றலைகொடுத்துமல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றினும்வேகமாககடுந்தூதர்வாரார்கள்
தங்கக்குடமெடுத்துத்தான்வந்தார்மல்லரெல்லாம்
பாண்டியராசரண்டைபாற்குடமேவந்தார்கள்
பருதிகளைக்கட்டுமென்றுபாற்குடங்கள்முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேணும்அனுப்புங்கள்பாலையென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டுஅஞ்சிபயந்தெழுந்து
காராவின்பசும்பாலைகறந்துமேபாண்டியர்கள்
ஆறாயிரங்குடத்திலன்பாய்நிரம்பிவைத்து
மஞ்சள்துணிமேற்கட்டிமாலைகளைசுற்றிவைத்தார்
பாற்குடங்கள்தன்னைபார்தீர்த்துவைத்தார்கள்
வரிசைவரிசையாகவைத்தார்கள்பாற்குடத்தை
பதினாயிரந்தருக்கும்பாலமுதுபோசனங்கள்
போசனஞ்சமைக்கலுற்றார்போனபாண்டியர்கள்
அரிப்பதுவும்பொரிப்பதுவும்அடிசில்சமைப்பதுவும்
இந்தவிதமாகஇருக்கின்றவேளையிலே
அந்தச்சமயத்திலல்லியம்மாள்வந்துவிட்டாள்
பதினாயிரந்தூதுவனைப்பாற்குடங்கள்பார்த்தாளே
அரிப்பதுவும்பொரிப்பதுவும்அடிசில்சமைப்பதுவும்

இந்தபகிட்சிசண்டேதுசொல்வாளல்லியம்மாள்
ஒருநாளுங்கண்டதில்லைஉச்சிதசாப்பிராணிகள்
இன்றுஅதியசமாயெந்தனுக்குத்தோன்றிற்று
இந்தவூரான்முறையாரெங்கிருந்துவந்தவர்கள்
ஒருநாளுங்கண்டதில்லைஉச்சிதமானவரை
இவ்வார்த்தைதான்கேட்டுஏதுசொல்வார்பாண்டியர்கள்
அவ்வார்த்தையுந்தனுக்கேனமுதண்ணைப்போடியம்மா
பாலமுதுண்டுநீயும்பள்ளிக்குப்போமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டுஅல்லிமனதுநொந்து
இது-சொல்லாமற்போனீரானால்சீரானபாண்டியரே
வல்லபிராணனைகல்லோடேமோதிடுவேன்
செத்துமடிந்திடுவேன்செலவழிந்துபோய்விடுவேன்
மாண்டுமடிந்திடுவேன்வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டுஆறாயிரவர்சொல்வார்
ஆறாயிரவருமேஆண்மலடுபெண்மலடாய்
மைந்தனைவேண்டியல்லோமகாதவர்பண்ணேனுமம்மாள்
என்னதவர்பண்ணினாலுமேதானும்பிள்ளையில்லை
மகாமுனிவர்தபசுபண்ணுமாமலையைத்தான்தேடி
நாங்கள்தவசுக்குநகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிபெற்றதொருவீராணநீனமுகனை
பட்டந்தரித்துவைத்துப்பார்த்தவசுபோனோம்
சிருவதபருவதத்திற்சேர்ந்துதவப்பண்ணேனுமம்மாள்
சொக்காருளாலேசிவகாமிதாயாலே
அல்லியிலேமேலேஆணங்கைப்பெற்றெடுத்தோம்
ஒருவர்-வயிற்றிற்பிறந்ததில்லைவன்கொடுமைசெய்ததில்லை
குடவிற்பிறந்ததில்லைகுலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரிலேயுள்ளமணற்சேறுமுண்டு
அடிக்கிறகாற்றதனிலலைகாற்றுருப்புமுண்டு
காலகாலகண்டருக்குகண்டத்தில்கறுப்புமுண்டு
குன்றின்மணிக்கானாலும்கொஞ்சங்கறுப்புமுண்டு
சந்திரர்க்குமாசியுண்டுசற்றேகறுப்புமுண்டு
உனக்கு-மயிரோகறுப்பொழியமற்றேகருப்புமில்லை
புருவங்கறுப்பொழியபின்னேகறுப்புமில்லை
அல்லியிலேயேலேஆணங்கேநீபிறந்தாய்
காத்திறற்பேறுபெற்றுவந்தாயம்மாதென்மதுரை
வெள்ளாட்டிபெற்றெடுத்தவீரானனீன்முகனும்
ஊரில்வராவொட்டாமலோட்டிவிட்டானப்புறத்தே
வுழவுகுடியாகவூரிற்பிழையுமென்றான்
ஆறாயிரம்பாண்டியற்குஆறாயிரம்பாற்குடமும்
வருஷத்திற்கொருதரந்தான்வாங்குகிறான்பகுதியவன்

உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மா துரைதனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மாவிப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமுமே இங்குவந்தார்மல்லரவர்
பாற்குடமுந்திரப்பிவைத்தோம்பாலமிர்தஞ்செய்கிறோம் யாம்
நீ-பாலமிர்தமுண்டல்லவோ பள்ளிக்கூடம்போயென்றார்

அல்லியம்மாள்மல்லர்களை அவமானஞ்செய்தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிகக்கோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூரியகண்சிவந்து
வெள்ளாட்டிபையனுக்குவீரியங்களுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலுமூர்க்குருவிபருந்தாமோ தான்
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோதான்
விரலிலேஉரலானால் உரலென்னகொள்ளுமையா
வெள்ளாட்டிப்பையலைதான்வெட்டிக்கலைதள்ளாமல்
பாண்டியராசர்களேபாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராசாக்கள்உலகத்தில்நானறியேன்
என்றுமிகக்கோபமுடனெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்த அல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலேயெட்டிவுதைத்தாளே
துரும்பாம்பாற்குடத்தை அகன்கொண்டோடிவிட்டாள்
ஆட்டாமல்லர்களே வழையும்பிடாரனைத்தான்
ஓடியழையுமென்றாள் ஒருநொடியில்வாருங்கள்
அக்கிருக்குமல்லர் அதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரர்தனைப்பரிந்தேயழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியற்குவந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்தவகைவதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள்கன்னிப்புற்றுமருந்தைவைத்து
கருநாகஞ்செந்நாகங்காலக்கோட்டிவிஷங்களுடன்
மண்ணுளிநாசிரியுமலையேறிவிரியனுந்தான்
ஊதுசுருட்டுபாம்புஇருதலைநாகங்களும்
நீக்கத்துக்குட்டிகளும்நீதியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளும்வகைவகையாய்த்தான்பிடித்து
ஓட்டம்நடையுமாகஒருநொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாகஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள்கன்னிபுற்றுமருந்துவைத்தார்

வல்லவன்னப்பாம்புகளை வரிசையுடன்தான்பிடித்தார்
பட்டிசன்கிரப்பலேபிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடிதாண்டிகடுகியேயோடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம்பொற்கொடியாள்முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளுமாரணங்கேதுரைப்பாள்
பாற்குடந்தன்னிலேதான்பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்னச்சிலையினாற்பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆறாயிரங்குடத்திலடையுமென்றாள்பாம்பையெல்லாம்
பஞ்சவர்னச்சிலைகட்டிப்பார்த்திருந்து முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளுமாரணங்கேதுரைப்பாள்
அம்பட்டனைத்தேடி அழையுமென்றாளல்லியருந்
ஓடியழைத்தல்லவோ ஓட்டநடையாகவந்தார்
ஆறாயிரந்தூதுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடிசிகைத்தவரைத்தலைபோடிபண்ணுமென்றாள்
கருப்புள்ளியுஞ்செப்புள்ளியுங்கலந்தழகாய்க்குத்துமென்றாள்
அல்லியம்மாள்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
ஆடாதூதுவரே அன்பானவார்த்தைகேளும்
நீன்முகராசனுக்குநீங்கள்போய்ச்சொல்லுங்கடா
பாண்டியராசனுக்குப்பட்சமுள்ள அல்லியம்பாள்
இந்தவரிசைகளையனுப்பினளென்றுசொல்லும்
உன்—தொண்டைக்குதூண்டிமுள்ளாறுதொப்புளுக்குவிராணி
அவன்-மண்டைக்குகோடாலிமார்க்குச்செப்புலக்கை
கழுத்தடியிற்கத்தியவள்காயாட்சியாளையென்று
வெட்டியறுக்கவந்த உண்மைப்பாஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பல்லோதாயாரந்த அல்லியென்று
சொல்லுங்கள்தூதுவரே துரைராசநீன்முகற்கு
வெள்ளாட்டிப்பையலுக்குவிந்தையைசொல்லுமென்றாள்
ஆறாயிரந்தூதுவர்களக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறார்மதுரையதுவடமதுரைதான்விட்டு
தேனுமதுரையதுதென்மதுரைவருகிறார்கள்
தெத்துதெருகடந்துதேரோடும்வீதிவிட்டு
மகாராசன்கொலுதனிலேவந்தார்கள்தூதுவர்கள்
அப்போதுநீன்முகனும்அப்பிங்கணமாடனைக்கு
சனிபெண்ணைமண்டபத்தில்தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணையிட்டுக்கொண்டே இருக்கிறவேளைதனில்
பாற்குடத்தைமுன்னாலேபார்மீதிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாகவைத்தார்கள்பாற்குடத்தை
வந்திருந்ததூதரெல்லாம்வரிசையாய்நின்றார்கள்
கண்ணைத்திறந்தல்லவோ சட்டமகன்பார்த்தானே
இதுவென்னவதிசயங்கள் ஆர்செய்தவண்மையிது

எட்டிப்பழம்போலேஇருவிழிகண்சிவந்தான்
கோவைப்பழம்போலேகூர்விழிகண்சிவந்தான்
உருக்கியசெம்பொனதுஉதிரம்போல்கண்சிவந்தான்
இப்படிச்செய்தவனாரெனக்கறியச்சொல்லுமென்றான்
யாரவார்த்தனுப்பாமேபாம்பையடைத்ததென்ன
ஆராதூதுவரேஅறியவுரையுமென்றான்

நீன்முகராசனுக்குத்தூதர்கள் சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்களஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேவேந்தேகேளும்அடியேனொருவார்த்தை
ஆறாயிரம்பாண்டியற்கேஅரியவொருமகளாம்
பாண்டியராசனைநாம்பகுதிபோய்க்கேட்டவுடன்
பகுதியுங்கட்டினார்பாற்குடங்கள்தானிறைத்தார்
எங்களுக்குச்சாப்பாடுஇன்பமுடனேசமைத்தார்
அவ்வளவில்லல்லிநல்லாளானந்தவாழ்மாரி
பள்ளிக்கூடத்துப்பாலமுதமுண்ணவந்தாள்
எங்களைக்கண்டவுடனென்னதான்கேட்க
பாற்குடங்களேதுவையாபாண்டியரேசொல்லுமென்றாள்
அவ்வளவிற்பாண்டியர்களஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குப்பட்டந்தரித்தப்பாலவதம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொருஅதிசயத்தைச்சொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள்அதிகமானகோபமதாய்
வெள்ளாட்டிப்பையனுக்குவிரியன்சாரண்டாச்சோ
ஆறாயிரங்குடத்தைஅரைநொடிவிலிலடிவிட்டாள்
பாம்பைபிடித்துவந்துபாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றாளம்பட்டரைமழுங்கமொட்டையடியுமென்றாள்
தலைபோடிபண்ணுங்கள்தனிப்பொட்டுமிட்டார்கள்
நையவிட்டம்வந்தவர்கள்தலைமொட்டையானார்கள்
கரும்புள்ளியுஞ்செம்புள்ளியுங்கலந்தழகாய்பொட்டுமிட்டு
உன்-தொண்டைக்குதாண்டிமுள்ளுதொப்புளுக்குவிராணி
மண்டைக்குக்கோடாலிமார்புக்குசெப்புலக்கை
கழுத்தடியில்கத்தியென்றாள்காமாட்சியம்மனென்றாள்
ஊட்டியமுக்கவந்தஉனையபரஞ்சோதியென்றாள்
உந்தனுக்குச்சொல்லுமென்றுஉகதமிபனுப்பிவைத்தாள்
தருமதுரைமகாசிதப்பிவிட்டாளெங்களைத்தான்
பிழைத்துநாங்கள்வந்ததெங்கள்பெரியோர்செய்தபுண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டெழுந்தானேநீன்முகனும்

நீன்முகராசன் அல்லியின்மேற் படையெடுத்தது.

ஆடாதூதுவரேஅழையுங்கள்மந்திரியை
இந்தட்சணமேதான்கூடாரம்போடுமென்றான்

இன்றுவெளிகூடாரம்இபனுடனேபோடுமென்றான்
பாளையங்களுள்ளதெல்லாம்பயணமிட்டுவாருமென்றான்
சண்டைக்கொடிபோட்டுச்சண்டைமுரசடியுமென்றான்
தேரையலங்கரித்துச்சீக்கிரமாய்வாருமென்றான்
ஆறுயிரமந்திரிகளைவரும்பயமென்றான்
யானைசேனைபரிவாரம்அடங்கலும்பயணமென்றான்
காலாள்பரிசேனைகடுகியேபயணமென்றான்
ஆறுயிரம்பாண்டியரை அதம்பண்ணிப்போட்டுவிட்டு
அல்லியெனும்பெண்ணரசை அரைநொடியில்பிடித்துவந்து
தலைபோடிபண்ணியேதப்பலகுசுமக்கவைப்பேன்
எண்ணெயிட்டவென்றலைக்கேஇபல்பாயரைப்பிடுவேன்
அப்போதுஸ்நானமாயாடுவேனபிஷேகம்
என்றுஎழுந்தானே இபல்புள்ளநீன்முகனும்
கட்டினதுகச்சையல்லகைதனிலேவில்லுமல்ல
முகத்தினிலேமீசையல்லமுன்கட்டுசீலையல்ல
தலையிலேபாகையல்லதரித்ததுஆடையல்ல
என்றவனுமார்பைதட்டிஎழுந்தானேநீன்முகனும்
முகத்தினுருமாலைமுகமழகாய்தான்கட்டி
அம்பெடுத்தான்வில்லெடுத்தான் அம்புறாத்தூணிமுதுகணிந்தான்
காங்குசச்சைதானணிந்தான்கத்திவாளுந்தோளிலிட்டான்
தேரைச்சுற்றிநமஸ்கரித்துத்தேரின்மேலேறினானே
ஏறினான்தேர்மேலேஎடுத்தார்நெடுங்குடைகள்
காணல்தனக்கெடுத்தார்கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள்வெள்ளைநல்லகூடாரம்
கறுப்புநிஜான்செகப்புநிஜான்கலந்துபறக்குது
அடிபடுதாணமுரசு அனைவருக்கிடுகிடென்ன
கோண்டகாலத்திடிபோலகுமுறுதேபேரிகைகள்
வெங்கலப்பேரிகைகள்விருதுமுழக்கமுடன்
அமரதருஞ்சமாதரும் அஸ்திரராய்வருகிறார்கள்
கலிங்கர்தெலுங்கருடன்கன்னடர்வருகிறார்கள்
துலுக்கர்மலுக்கருடன்சோனகரும்வருகிறார்கள்
வன்னியரும்ஜகுனியரும்மராட்டியரும்வருகிறார்கள்
வருகிறஜெனங்களதுமட்டுமிதங்களில்லை
கொக்குவெளுத்ததுபோல்குடமல்லிபூத்ததுபோல்
வானங்கவிழ்ந்ததுபோல்மல்லிகைபூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம்நெருங்கிவருகிறது
செந்தூளெழும்புவதுசிவலோகங்கப்பிற்று
கருந்தூளெழும்புவதுகதிரோனைக்கப்பிற்று
கோட்டைக்கடந்தார்கள்கொப்பெனவேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்களறிந்தார்கள்சேதிதன்னை
நீன்முகன்வருஞ்சேதிநிமிஷத்திற்றானறிந்தார்

ஐயோமகளேபெண்ணே அறநூற்றுப்பாண்டியர்கள்
தவம்பண்ணிப்பெற்றோமே தவக்குலையநாளாச்சே
பாரதவம்நோங்கள்செய்துபாலகியைப்பெற்றோமே
நீன்முகன்கையாலேநீபடியநாளாச்சே
வருகிறான்நீன்முகனும்மட்டில்லாச்சேனையுடன்
என்னசெய்வோமகளேயென்றுஇடிவிழுந்துதானழுதார்
அல்லிப்பெருமாளும்ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேஐயமாரே அவனைப்பலிகொண்டிடுவேன்
மாண்டுமடிவேனென்றுமனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்றுசிந்தைதனில்வைக்கவேண்டாம்
அரைநாழிக்குள்ளேயவன் ஆங்காரம்காணழிப்பேன்
என்சமர்த்தைப்பாருமென்றுஎழுந்தாளே அல்லியம்மாள்

அல்லியம்மாள் சொக்கரையும் அம்மனையுந்

தொழுதுவரம் பெற்றது.

அல்லிக்குளமுழுகிஅலர்தாமரைப்பூவெடுத்து
சொக்கரதுஆலயத்திற்சுந்தரியும்போய்புகுந்து
கோயில்வலம்வந்துகும்பிட்டுத்தெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால்சொம்பனையும்பூசைசெய்தாள்
ஒருவர்வயிற்றிற்பிறவாமல்வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல்குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிலேயென்னை ஆச்சியமா பிறப்பித்தாய்
பொற்றாமரையிலேதான்பிறப்பித்தாயீஸ்வரியே
நீன்முகனைக்கொல்லவேண்டும்நீலிபட்டங்கட்டவேண்டும்
மாற்றானைக்கொல்லவேண்டும்வையகத்தையாளவேண்டும்
வாழ்த்தியேகைகொடம்மாமந்திரவாள்கைகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள்
மாணிக்கச்சொக்கலிங்கமனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள் அங்கயற்கண்மனமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான்மங்கையர்கண்மணமகிழ்ந்து
மச்சரதங்கொடுத்தாள்மந்திரவாள்கைகொடுத்தாள்
வாழ்த்தியேகைகொடுத்துவண்டிருநீறள்ளியிட்டாள்
வர்ணலட்சந்தாதர்களைமகாதேவர்கைகொடுத்தார்
அல்லியர்த்துணையாகஅனேகம்பேர்வந்துவிட்டார்

அல்லியம்மாள் நீன்முகனைச்

சங்கரித்தது.

காலாளுஞ்சேனைகளுங்கெடிகேயபயணமாச்சு
தேரைசுற்றித்தெண்டனிட்டுதேரின்மீதேறினாளே

அம்புவில்லைகைபிடித்தமர்சாதந்திருப்பிவிட்டாள்
தேவனுந்தமிழுமுங்கதேன்மொழியாள்வருகிறாளே
சித்திரத்தேரும்செருக்களத்தேவருகிறதே
வந்தவளைத்தானேவல்விடிபோலல்லியரும்
வில்வளைத்துநாரிபூட்டிவில்லைகுணத்தொனிகள்செய்தாள்
மாரிச்சரம்பொழிந்தாள்மகாசேனையுள்ளவர்மேல்
தொட்டாளேவில்லதனைச்சொரிந்துவிட்டாள்பாணமது
விட்டாள்சரபாணம்மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலுங்கொல்லலுற்றாள்
யானைத்தலைகளெல்லாம் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டைத்தலைகளெல்லாம்ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லாம்கொக்கரித்துக்கீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள்அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மீதிருந்தோரோலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள்கொக்கரித்துமண்ணைக்கவ்வ
தென்னங்காய்போலாகச்சேனைதலையுருளவிட்டாள்
பனங்காயைப்போலாகபார்தனிலுருட்டிவிட்டாள்
செண்டுசெண்டாவேணதலைசெருக்களத்திலுருட்டிவிட்டாள்
அறுந்ததலைகளெல்லாம் அம்மானாடுகுது
ஆலையாடுகரும்புபோலேஅரைத்தாசபிழிந்தாள்
கரும்புக்காணைபோல்கண்டித்தாள்வேணதலை
மதப்பட்டயானைகள்தான்மடுவைகலக்கினாற்போல்
குட்டிமதயானைகுளங்கலக்கிவிட்டதுபோல்
கிண்ணியில்சந்தனத்தைக்கூட்டிவழித்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியம்மன்கோயிலுக்குப்பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோவிலுக்குஆடுவெட்டும்பாவனைப்போல்
அரைநாழிக்குள்ளேஅதமபண்ணாள்பாளயத்தை
சண்டைபண்ணமாட்டாமற்றடாந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும்பரதேசியென்பாரும்
நாமத்தைக்காண்பித்துநான்தாதனென்பாரும்
பூணூலைக்காண்பித்துபிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்றுசலாஞ்செய்தோடுவாரும்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லித்தவிக்குதுபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார்வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்றுசொல்லிப்புலம்புகிறார்
இவ்விதமாய்ப்பாளையத்தைஇறக்கடித்தாளல்லியம்மாள்
நீன்முகராசாண்டைநேரிழையும்வந்தெதிர்த்தாள்
ஆடாநீன்முகனேஅறிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிபையலேநீவிரியமுனக்கேண்டா
தம்பலவட்டிலேந்துந்தாதிபெற்றமகனோ

மதுராம்புரிபாமாலைவசாலிதையாமா
வருணபகவானெதிர்த்துவந்தால்பாண்பிள்ளாய்
உன்னைக்கொடுப்பேனேஉனக்குமொருசேவகமோ
கொசுவும்பருந்தாமோகூறப்பறக்குமோடா
உபாய்பாசந்தாலுமூர்க்குருவிபறந்தாமோ
அணிப்பிள்ளையசக்கிலுமான்குட்டிவிழுமோடா
ஒதிபெருத்தால்தூணுமாஒட்டகங்கச்சிமுலையாமா
உன்னை அதம்பண்ணும்படியாக அல்லியிலேபெண்பிறந்தேன்
பொற்றாமரையிலேபிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்தொண்டைக்குதூண்டுமுள்ளாநொதாப்புளுக்குவிசாணி
உன்மார்புக்குச்செப்புலக்கைமண்டைக்குக்கோடாலி
உன்கழுத்தையறுக்கவந்தகாமாட்சியம்மனேடா
உன்னைஊட்டியறுக்கவந்தஉண்மைபராஞ்சோதியடா
உன்குலதெய்வமடாஒங்காரஅல்லியம்மாள்
அறியாமற்போனையடாஅறிவுகெட்டநாய்தலையா
அரைநாழிக்கொள்ளையிலேயமபுறஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலேகைலாசஞ்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையிலேஉயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவுப்புமாண்டதோதெருவுபாழாச்சோ
உண்டவுப்புமாண்டதோவூறும்பாழாச்சுதோ
காலனுமவந்துகைகாட்டியழைத்தானோ
இயமனுநயாவந்துஇங்கேவாவென்றானோ
ஆசையினாலேயடாஅமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துஞ்சேவகமுமிப்போதறிவாய்பார்
தேரைத்தூரத்திவிட்டாள்செங்கையிலேவில்லெடுத்தாள்
கேட்டந்தநீன்முகனும்கெர்வமதிகமதாய்
நெற்றிக்கண்ணீஸ்வரனார்திமிர்த்துவிழிபார்த்தாற்போல்
வலதுபக்கமீசையதுவல்லயம்போலேதுடிக்க
இடதுபக்கமீசையதுஈட்டிபோலேதுடிக்க
மீசைதுடிக்கிறதும்முன்கோபமாகிறது
ஏனுண்டேபெண்ணேநீசமர்த்தாகப்பேசுகிறாய்
உன்-சவுரியத்தைநானழிப்பேன்தம்பலங்களைந்தவைப்பேன்
வல்லமையைப்பாரென்றுவளைத்துக்கொண்டான்வில்லதனை
இவ்விருவர்தேருமிருநிலத்திற்றான்சுழல
மாணிக்கச்சொக்கனையுமனதில்நினைந்தாளே
அங்கயற்கண்ணாயகியைஆதிபரமேஸ்பரியை
மனதில்நினைத்தல்லோவாங்கிவிட்டாள்பாணமது
பாவியந்தநீன்முகனும்பதறிச்சரம்பொழிந்தான்
விட்டான்சரபாணம்மெல்லிநல்லாள்மேனியிலே
கோடானகோடிபாணங்குறித்தானேநீன்முகனும்
அல்லிப்பெருமாளுக்கதிகமானகோபமுடன்

ஒன்றுக்குப்பத்தானை ஒருநூற்றுக்காயிரமாம
சாமற்சரப்பொழிந்தாள்சாமர்த்தியமுள்ளமன்னி
வாய்வினது அஸ்திரங்கள் வருணனதுவஸ்திரங்கள்
திவ்வியநல்ல அஸ்திரங்கள் தீர்க்கமுள்ள அஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாஞ்சலந்திகானஸ்திரமாம்
மகாதேவியஸ்திரமாம்பார்வதியஸ்திரமாம்
வச்சிர அஸ்திரமாம்மகுடநல்லஅஸ்திரமாம்
இடியினது அஸ்திரமாம்இந்திரனது அஸ்திரமாம்
இராமச்சந்திர அஸ்திரமாம்நவச்சந்திரவஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணியர் அஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற்கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதந்தனிலடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைகளும்சொரிந்தாற்போற்றூவிவிட்டார்
விட்டதொருபாணமதுயட்டுமிதங்களில்லை
நான்குநாள்பட்டுநல்லசண்டைபண்ணுகிறார்
விற்பிடித்தகையதுமெத்தசிவப்பேறிற்று
அம்பிழுத்தகைகளினுள்ளல்லிப்பூவருணமாச்சு
நெல்லிப்பழம்போலேநெருங்கிற்றுகொப்பளங்கள்
இந்தவிதமாகஇருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போது அல்லியம்மாள் அம்மனையேதோத்தரித்து
இடியாஸ்திரமெடுத்து இந்திரதுபம்தானுமிட்டு
மார்புளவாங்கியல்லோதோள்பிளத்தாண்டொடுத்தாள்
கைகளில்நெருப்பெரியவந்துவிழுந்தனவே
தேருமுடைந்தனவேசெப்புறவிசெத்தனவே
போட்டசட்டைவச்சிரப்பாய்பொடிபொடியாய்தானழிந்து
சட்டதமான்வச்சிரப்பாய்தவிடுபொடியாயினவே
சல்லடைக்கண்போலேசரீரங்கள்தொளையாகி
பதாதியாய்நின்றனேபராக்ரமநீன்முகனும்
கொடுத்தான்வளைதடியையெற்றினான்கேடகத்தை
கண்டாளே அல்லியம்மாள்கனத்தநல்லகோபமுடன்
கேடகமும்வாளெடுத்துகெர்ச்சித்துக்கீழ்குதித்தாள்
எலிகண்டபூனையைப்போலெழும்பினாளல்லியம்மாள்
பசுகண்டபுலியதுபோல்பாய்ந்தானேநீன்முகனும்
யானைகண்டசிங்கம்போலல்லியெழும்பினாளே
கொக்குகண்டராசாளிபோற்குதித்தானேநீன்முகனும்
யானைக்கண்டசிவிங்கியைப்போல்வருகிறாளே அல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்றுஉன்மனதிலெண்ணாதே
நீன்முகா உன்தலையைநிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியா இருவருமேசுழலுகிறார்
சக்கரமசுழல்வதுபோற்சமர்த்தர்சுழலுகிறார்
வண்டுதும்பிபோலாகவட்டமிட்டகருடனைப்போல்

முன்கந்துபாய்ந்தலவோமுதுகின்மேல்வெட்டுவாள்ரம்
தட்டியுசுறிகிற்பான்தாக்குவானல்லியரை
எபனுமியமனைப்போலிந்திரனுமிந்திரனும்
மலையுமலையோடுவந்தெதிர்த்தபாவனைபோல்
புலியும்புலியுடனேபதுங்கியெதிர்த்ததுபோல்
நான்குநாழிமட்டுப்நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலேபிறந்தெடுத்தஅல்லியரும்
ஆலவாய்ச்சொக்கரென்னுமாண்டவனைத்தானினைந்து
மதுரைமீனாட்சியரைமனதிலேதானினைந்து
முன்கந்துபின்கந்துமுப்பத்திரண்டுகந்து
பக்கவளைவாககந்துபாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலேவேறிரண்டுண்டாக
கரும்புகருணையைப்போற்கண்டித்துக்கீழ்விழுந்தான்
ஏறினாள்தேர்மேலேயெடுத்தார்பெருங்குடைகள்
நீன்முகன்விழுந்தானென்றுநீலிசங்குதான்தொனித்தாள்
தேனைதிருப்பிவந்தாள்தேன்மொழியாளல்லியம்மாள்
நீதிமுகன்மார்மீதில்நீவிரதமோட்டினாளே
செயங்கள்செயங்களென்றுசெயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள் மதுரைக்கு வந்து பட்டங்கட்டிக்கொண்டது.

ஏழுபதிசேனாதிபதிஎல்லவருமோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள்சகலசெனங்களெல்லாம்
அல்லிப்பெருமாட்டிக்குஅடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்துமிமுழங்கதேவர்பூமாரிபெய்ய
அருயிரவரென்னுமையன்மார்தாமறிந்தார்
சந்தோஷப்பட்டார்கள்தார்வேந்தரோடிவந்தார்
மகள்தன்னைப்பார்த்தல்லவோமகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்துமகுடதோரணங்கட்டுமென்றார்
அனைநாழிக்குள்ளேஅலங்கரித்தாரபட்டணத்தை
எங்குமலங்கரித்துஎத்திசையுநீர்த்தெளித்து
வாழைமரங்கமுகுமரம்வாசலெல்லாகட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவரச்செயபேரிபடித்துவர
மேளங்களார்ப்பரிக்கவெல்லிவருகிறாளே

மதுரைத்தெருவீதிமாளிகையில் வந்தார்கள்
சிங்காதனத்தின்மீதேறினாள் தேன்மொழியாள்
ஆரியப்பாண்டியராசையன்மாரானவர்கள்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியுந்த
செங்கோலுப்பட்டமுடன் ஆசைத்தனமுந்தந்தார்கள்
பொம்மைவிருதுகட்டிப் பூதத்தலைகட்டிவைத்து
அல்லிக்கொடிகட்டி அரசுநிலையாளுகிறாள்
மதுரையைப்பத்தாறுகாதப்பூமியையாளுகிறாள்
ஆண்பட்டங்கட்டியே அரசுநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகிறாள்
இந்தவிதமாகவல்லியரசாண்டிருந்தாள்
இப்படியாகவேதான் அரசாளுகையில்
அப்போதருச்சுனனும் ஆளழகுமன்னவன்
இந்திரபுரிபட்டணத்தில் அனந்தந்திருடாரவர்
பசுதிருடிப்போனசேதிபார்த்திபன்தானறிந்து
அம்புவில்லெடுக்கவென்று ஆண்மனையிற்போய்நுழைந்தான்
ஏழாநிலையின்மேல்பிசமாபேரிறுனும்
தருமருந்திரௌபதையுங்கருவிளையாடையிலே
குந்துபப்பூமேடையிலேகூடிபுறவாடினார்கள்
கலந்திருந்தவர்கள்தனைக்கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலையவன்பின்னேவாங்கினனே
மந்தாரக்குந்தியரைமாதாவைத்தேடிவந்தான்
ஆச்சியர்கன்பாதமடிவணங்கிதெண்டனிட்டான்
வாழ்த்திவிடைகொடுத்துவருஷித்துகுந்தியம்மாள்
ஆச்சியரேயென்தாயே அடியேனொருவார்த்தை
அண்ணனுந்தேவியருமன்பாகமெத்தையின்மேல்
கலந்துவிளையாடுவதைக்கண்ணாலேகண்டேனம்மா
சருவிமயலாகையிலேசடுதியிலேநான்கண்டேன்
பார்த்தபடியினாலேபாவம்வந்துசேர்ந்ததம்மா
ஆகாதபாவகத்துக்குஆளானேனாச்சியரே
பொல்லாதபாவம்வந்துபோதப்பலித்ததம்மா
இப்பாவந்தீர்வதற்குத்தலங்களைப்பார்த்து
துங்கபத்திரிகோதாவிரியமுனைசரஸ்வதியாங்
காசிஸ்நானஞ்செய்யவேண்டுங்கபாவந்தீரவேண்டும்
பாராஸ்தலங்களெல்லாம்பார்த்துவருகிறேன்யான்
சிவஸ்தலங்கள்விஷ்ணுஸ்தலந்தெரிசனமேசெய்வேன்யான்
காலகொண்டதூரமெல்லாங்கடுகத்திரிந்துவாரேன்
போகவேண்டுமென்றுபொன்னடியைத்தெண்டனிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டுஅழுதுபுலம்பலுற்றாள்
உன்னையான்பாராமல்ஒருநிமிஷம்நிற்கமாட்டேன்
பாராதிருப்பதற்குப்பாவிமனம்வாராதே

செத்துமடிவேனென்றாள்செலவழிந்துபோவேனென்றாள்
அழுதுபுலப்பலுற்றாளாணங்குகுந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டுஅத்தருமராஜர்வந்தார்
சந்தனவடிவழகன்தருமராசர்வந்துவிட்டார்
எதுக்கழுவதுதானென்றுயேசொல்லுமென்றார்
அருச்சுனன்சொன்னதெல்லாம்ஆச்சியருந்தாமுரைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அறன்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சுகேளானேசுந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேட்கானேஇளவிஜயராஜனிவன்
ஆரைநினைத்தானோ அளவற்றசிந்தைதனில்
எவரைநினைத்தானோஇன்பமுள்ளசிந்தைதனில்
அடியளந்தமாயவரோஆதிமூலம்வாருமென்றார்
இவ்வேளையிச்சமயமிங்கேவாசுவாமியென்றார்
தருமர்நினைத்ததனைச்சுவாமியதுவறிந்தார்
ஏழையழுதகண்ணீர்கூறியவாள்தைத்ததுபோல்
தருமர்நினைத்ததுதான்தப்பாமற்றுமறிந்து
வட்டமிடுங்கருடனேறிவந்துவிட்டாரெம்பெருமாள்
சிவந்தகருடனேறிஸ்ரீராமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டிகரியமலைதான்தாண்டி
ஆறுகுளந்தாண்டிஅதிகவனந்தான்தாண்டி
சந்தனவடிவழகர்தருமராண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிறங்கிவந்துசரணமிட்டார்
என்னையழைத்ததுதானேதுகருமமென்றார்
சிம்மாதனத்தின்மீதுஸ்ரீராமரைவீற்றிரென்றார்
இட்டசிங்காதனத்திலெம்பெருமாள்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர்தருமராயரேதுரைப்பார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச்சிந்தையில்நினைந்துகொண்டு
காசியாத்திரைபோகக்கருதிநினைந்தானே
ஆர்சொல்லுங்கேளானென்று அருச்சுனன்போகலுற்றான்
தனியேயனுப்புதற்குசற்றுமனந்தோன்றவில்லை
அருச்சுனர்க்குத்துணையாகஸ்ரீராமாபோய்வாரும்
கூடத்துணைபோங்கள்கோபாலப்பெருமாளே
கும்பிடுதெய்வமுநீர்குழைத்திடுநாமமுநீர்
உன்னையேநம்பிஞனுயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேனன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேனினியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையல்லாமல்வேறுதுணையுண்டோயிம்மாநிலத்தில்
அருச்சுனர்பின்சென்றுஅழைத்துமேவாருமையா
போய்வாருஞ்சுவாமியென்றார்புகழ்வேந்தன்தர்மலிங்கம்

மாதாவுங்குந்தியம்மாள்வாழ்த்திசெலவுதந்தாள்
மாயவனும்அருச்சுனனும்வணங்கியெழுந்திருந்தார்

மாயவனும் அருச்சுனனும் தீர்த்த யாத்திரை போகிறது.

காஷாயந்தானுடுத்துகடுகிவேஷங்கொண்டார்கள
சன்னியாசிவேடங்கொண்டுதவமுனிபோல்வேடங்கொண்டார்
அம்புவில்லுங்கைபிடித்து அரியமுனிபோல்நடந்தார்
தருமாபுரம்வீமாபுரந்தாணிபுறந்தாண்டி
இந்திரவனங்கடந்து இனியவனம்போகலுற்றார்
காடுசெடிதாண்டிக்கரியமலைதான்தாண்டி
காசிநதிபோய்முழுகிக்கனதீர்த்தமாடினார்கள்
விசுவநாதசுவாமியைத்தான்வேண்டிதரிசித்தார்கள்
துங்கபத்திரிகோதாவரிதொலைதீர்த்தமாடினார்கள்
யமுனைசரஸ்வதியுமின்பமுடன்ஸ்நானஞ்செய்தார்
மல்லிகார்ச்சுனம்வந்துமகேஸ்வரனைப்பூசைபண்ணார்
திருப்பதியேவந்தார்கள்தெரிசனமேசெய்தார்கள
வேடனதுஎச்சிலைத்தான்விரும்பியுண்டவித்தகனார்
கண்ணப்பன்காட்சிதந்தகாளஸ்திரிவந்தார்கள்
காளத்திநாதனையுங்கண்டுதரிசித்தார்கள்
திருப்பாலைவனந்தனிலேசிறப்புடனேவந்தார்கள்
கபாலீசநாதனைப்பணிந்துதெண்டஞ்செய்தார்கள்
வால்மீகர்பூசைசெய்தமருந்தீசனைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்துதியாகனைப்பூசைசெய்தார்
கழுக்கள்வலம்வந்துகடைநபினார்பூசித்தார்
திருக்கழுக்குன்றபதிதேடியேவந்தார்கள்
வேதகிரிலிங்கத்தைவேண்டிச்சரணமிட்டார்
வண்ணாரப்பெண்ணுக்காய்மணம்போனாரென்றுசொல்லி
அண்ணாமலையாரையாணழகர்தேடிவந்தார்
அருணகிரிநாதரைத்தானடிபணிந்துதெண்டனிட்டார்
புற்றிடங்கொண்டதொருபொன்றிருவாரூர்போனார்
தியாகனைதரிசித்துத்திரும்பினாரிருவருமாய்
சிதம்பரந்தன்னிலேதான்சபாபதியைத்தரிசித்தார்
மாயவரங்கும்பகோணம்வந்துதரிசித்தார்கள்
ஸ்ரீரங்கம்வந்தல்லவோஇரங்கனைபூசைசெய்தார்
சம்புகேஸ்வரத்திலேதான்ஜலகண்டனைத்தரிசித்தாராம்
இராமேஸ்பரத்துக்குயிருவருமாய்வந்தாராம்
சேதுபதிஸ்நானஞ்செய்துஇராமலிங்கம்பூசைசெய்து
பிட்டுக்குமண்சுமந்தபித்தனைக்காணவென்று
மதுரைநகர்தேடிவருகிறாரிருவருமாய்

வருகிறவழிதனிலேவாணியனொருவனவன்
அல்லியரசாணி ஆணைக்கு மாதினுக்கு
நித்தமவைமுக்களந்தீதியுள்ளவாணியன்றான்
அன்றுடமுத்திளவுகுறைந்ததென்று
படிமுத்துகுறைந்ததென்று பதறிப்புலம்புகிறான்
வாயிலறைந்துகொண்டு பன்னிப்புலம்புகிறான்
அழுதகுரல்கேட்டு அங்குவந்தாரிருவருமாய்
ஆடாதப்பிபமேயழுதுபுலம்புவதேன்
உன்னையக்கேடம்பண்ணவார்களும்வர்த்தகனே
அழுதுபுலம்புவதேனவ்வயணஞ்சொல்லுமென்றார்
வணக்கிரியுஞ்சன்யாசிவார்த்தையதாயுங்களுக்கேன்
இராஜாதிவார்த்தையது இனியுரைக்கக்கூடாது
சொன்னேனேயாமாகில் சுபமாகப்போறீரோ
உங்களாலாவதென்னவழியேபோங்களென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேயுரைப்பான்
சொன்னாற்குறைவுமுண்டோ காசபெறுவீர்வாணியனே
பெரியோர்க்குச்சொன்னதினாற்பிழையுண்டோவுந்தனுக்கு
உன்மனக்குறையகற்றிவகைமானஞ்செய்திடுவோம
அழுதவயணமதை அறியவுரையுமென்றான்
அதைக்கேள்சந்நியாசி அவ்வயணஞ்சொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரே கேளுமையா
வாருமதுரையதுவடமதுரைபட்டணத்தில்
தென்மதுரைவாழுகிற தேன்மொழியாளல்லியம்மாள்
ஆறுயிரபாண்டியராச்சியதுரையவளாம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
வடிவிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறகண்ணீரிலுள்ளேமணற்சேறுமுண்டு
அடிக்கிறகாற்றதனிலல்லைகாற்றறுபுமுண்டு
சங்கிராமசூரியனுஞ்செற்றகருப்புமுண்டு
குன்றிமணிக்காலும்கொஞ்சங்கறுப்புமுண்டு
புருவக்கறுப்பொழியப்பின்னைகறுப்புமில்லை
மயிரேகறுப்பொழியமற்றக்கறுப்புமில்லை
ஆறாயிரவருந்தானரியணைமந்தனிலலாமல்
மாறுவேரோமென்றுசொல்லி லேமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லிமலரிலவதரித்தாள்
பொற்றாமரைதனிலேபிறந்தாளேமாதுகன்னி
அல்லியிலேவேலையருமையாய்வந்துதித்து
அல்லியென்றுபேருமிட்டு ஆணைக்குப்பெண்வளர்ந்தாள்
எழுபிராயமதிலேதிரகுவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொண்டுவருநீலிபட்டங்கொண்டாளே
பொம்மைவிருதுகட்டிப்பூமியரசாளுகிறாள்

அவ்வார்த்தைகேட்டுஅர்ச்சுனனுமேதுரைப்பான்
அழகிலிருந்தபெண்ணோ ஆணழகாசொல்லுமென்றான்
அவளழகுபாவனையுமையாவேசொல்லுமென்றான்
எல்லார்தலைமயிருமிருமுழமொருமுழமாம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வண்டுமுதுகோடுபோல்மயிர்நிறமாயிருக்கிறது
தேயபிறைசாயலைபபோல்திருநெற்றிக்கண்ணழகும்
வேப்பிலைசாயலைப்போல்மேற்புருவமிரண்டழகும்
கூரியமூக்கழகுங்குளிர்ந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசைமுருக்கிதழ்போல்செவ்வுதடும்
நீர்முட்டைப்போற்கண்ணழகுப்கெரிந்தபுருவமுடன்
சங்குகழுத்தழகுஞ்சாதிலிங்கமேனிசரும்
காமனகடைந்ததுபோல்கலசத்திளமுலையுங்
கற்பகச்சாயலைப்போல்கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலாகயமர்ந்ததிருவயிருஞ்
சிங்கத்திடைபோற்சேர்ந்தவிடையழகும்
இளவாழைத்தண்டதுபோல்இரண்டுதொடையழகும்
முத்துசிப்பிபோலேமுழங்காலிரண்டழகும்
புத்தகஞ்சேர்ந்ததுபோல்புறங்காலிரண்டழகும்
சுவரிலெழுதலாஞ்சித்திரம்போல்பார்க்கலாகும்
படத்திலெழுதலாகும்பதுமைபோறபார்க்கலாகும்
வேரிற்பளிங்கள்மின்னுகிறகாந்தியவள்
மின்னலொளிபோலேமெல்லிநல்லாள்தன்னிறங்கள்
கொம்பனையாள்வார்த்தையதுகுயில்கள்குரலோசை
காய்க்குப்பிராயமையாகன்னிகட்டுங்காலமையா
பூற்குப்பிராயமையாபிஞ்சுவிடுங்காலமையா
அவளைப்போலழகுடையாளாருமில்லைவையகத்தில்
சட்டழகிமாதினுக்குக்கலியாணமாச்சுதடா
மாலைப்பசுங்கிளியைமணமுகூர்த்தஞ்செய்தனரோ
ஆனால்கேள்சந்நியாசி அவ்வார்த்தைசொல்லுகிறேன்
சொள்ளவருமாப்பிளைக்குகூறடாகொடுப்பேனென்றாள்
ஆளவருஞ்சம்பந்தியையடிப்பேனென்றாள்சேருபந்தால்
கல்யாணமென்பாரைக்கண்ணைப்பிடுங்கிடுவாள்
முன்வாசற்படிதனிலேமுச்சிகொட்டாகட்டிவைத்தாள்
பாலைக்கறந்துதான்பட்டணத்தில்வைத்தாக்கால்
பறக்கின்றகாகமதுபாராதுதலையெடுத்து
ஆண்காற்றடியாது அல்லியம்மாள்கோட்டைதனில்
ஏறுவதுபெண்குதிரையிருப்பதுவும்பெண்சேனை
பன்னிரண்டுவயதாச்சுபாலப்பிராயமையா
அவளுக்கு—நித்தமுங்கல்முத்தளப்பேன்நீதியுள்ளமாதினுக்கு
அன்றாடமுத்தினளவுகுறைந்ததையா

ஆசையினாலேயானமுதுபுலம்புகிறேன்
வெட்டியெறிந்திடுவாள்வீரமணிவாளாலே
கொல்லநினைப்பாளேகுடிகேடுவந்துவிடும்
ஆசையினாலேதானழுதுபுலம்புகிறேன்
அவனுக்காதரவுசொல்லியப்புறமேபோகையிலே

அற்சுனன் அல்லியின்மேலாசைகொண்டது.

அற்சுனராசனவன் அதிகமோகங்கொண்டானே
அப்புறம்நடக்கறியான் அற்சுனராசனவன்
அல்லியர்மேலாசையது அதிகமோகங்கொண்டானே
காமவிகாரத்தால்கலைதாங்கிபோனானே
மன்மதனெய்தகணைமார்பைபிளக்கிறதே
சித்தசன்றொட்டகணைசிறுமார்புருகிறதே
மோகித்துதானுமவன்மூர்ச்சைபட்டுப்போனானே
பாணங்களெந்தும்பட்டுநெஞ்சுருகிறதே
மாரன்விடும்பாணததுமார்புருகிப்போகிறதே
ஆயன்பெருமாளேஅடியேனொருவார்த்தை
சட்டினவிருதுகளைக்கடுகஅவிழ்க்கவேணும்
எந்தவிதமானாலுமணமாலைசூட்டவேணும்
மாலையிட்டாலல்லாதுமாயவனேவருவதில்லை
செத்துமடிவேனையாசெலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டுஆரிராமரேதுசொல்வார்
கட்டென்னகாவலென்னகாவலதிகாரமென்ன
ஆறுயிரவர்களாமையமார்சேனையென்ன
சேவகமிருந்தவொருதேன்மொழியாலல்லியரை
கலியாணம்பண்ணுதற்குக்காண்டீபா ஆகுமோதான்
கொல்லநினைப்பாளேகுடிகேடுவந்துவிடும்
செத்துமடிந்திடுவாய்செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துபெண்களோடேசேனபேர்கிட்டாரோ
சாதியிலொருபெண்ணைதாலிகட்டிவைப்பனடா
குலத்திலொருபெண்ணைக்கோலம்பண்ணிவைப்பானடா
யாதுடையவார்த்தையைத்தான்மறந்துவிடுவாழ்விஜயா
பெண்ணென்றவார்த்தையைநீபோட்டுமறந்துவிடு
அல்லியரைமாலையிடலாகாதுவுன்னாலே
செத்துமடிவாயேசெலவழிந்துபோவாயே
நச்சுநச்சென்றெண்ணாதேநாம்போவோம்ராசாவே
தீர்த்தயாத்திரைவந்துசேனனுளாச்சுதடா
தருமருந்தம்பியரும்தவித்துப்புலம்புவாரே
ஆரணியவாசமவந்துஅனேகனுளாச்சுதடா
என்றதுதானகேட்டேதுசொல்வான்வாழ்விஜயன்

நான் —செத்துப்பிழைந்தாலும்செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும்வைகுந்தஞ்சேர்ந்தாலுஞ்
செத்தவிடந்தனிலேசெங்கழுநீர்பூபூர்ப்பேன்
மாண்டவிடந்தனிலேமல்லிகைப்பூபூர்ப்பேன்
பஞ்சணைமெத்தையிலேபடுக்கைமலராவேன்
கொண்டைக்குப்பூவாவேன்கொசவணத்திற்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன்நேர்விழிக்குமையாவேன்
முந்தாணித்தொங்கலிலேமுள்ளாகிவொட்டுவேன்யான்
காலுக்குமிஞ்சாவேன்கைவளையல்நானாவேன்
மாலையிட்டாலல்லாதுமாயவனேவருவதில்லை
கலியாணஞ்செய்தவையுங்கரியமாலெம்பெருமாள்
உன்—புண்ணியத்தினாலேயான்பிழைக்கவழிபாருமையா
பாதம்பணிந்தானேபார்த்திபன்மாவினது
ஆயர்பெருமாளுமருளாளரேதுசொல்வார்
புத்திகெட்டுவர்ச்சுனவுன்பின்னாலேவந்தனடா
அறிந்திருந்துநானறிவழிந்துவந்தேனடா
பெண்களைப்பார்த்துநீபேதைபோற்புலம்புகிறாய்
காமக்கணைபட்டுகளையாகிக்கீழ்விழுந்தான்
ஆயன்பெருமாளுமாலோசனைபண்ணலுற்றார்
மாதுகன்னியல்லியரைவரவழைக்கவேண்டுமென்று
மாயமிருகங்களைமாயவருண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களுங்கரடிபுலியாளிகளும்
மானுமுயல்களுடன்மட்டற்றபன்றிகளும்
மயிலுங்குயிலன்னம்வண்ணவண்ணப்பட்சிகளும்
அனேகமிருகங்களையரிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிபடைகள்மகாஜெனங்களத்தனையும்
காட்டில்வரதான்பயந்துகன்னிநல்லாள்முன்னேவந்தார்
அல்லியற்குத்தெண்டனிட்டுஅடிபணிந்தேதுரைப்பார்
இத்தனைநாள்பிழைத்தோமிடுக்கமில்லையென்றிருந்தேன்
என்னகுறைசெய்தோமென்னவொண்ணாமிருகங்கள்
காட்டுக்குப்போவோமென்றால்கனத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள்புலிகள்துரத்துதம்மா
எதாற்பிழைப்போமென்றெல்லாருமழுகலுற்றார்
அல்லிப்பெருமாளுமாரணங்கேதுரைப்பாள்

அல்லியரசாணி வேட்டைக்குவருகிறது.

மிருகத்தால்மடிவமென்றுமிகவும்பயப்படாதே
வேட்டைக்குநான்போய்வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளேயதம்பண்ணிப்போவேனென்றாள்
அஞ்சாமலெல்லவருமாண்மனைக்குப்போங்களென்றாள்

அத்தண்டபெண்களெல்லாமரண்மனைக்குப்போனபின்பு
ஆசடிதாதிகளேயலங்காரச்செங்கமலம்
வேட்டையாடும்பெண்களேநீவிரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள்மறவர்பெண்கள்கூட்டிவாதாதியரே
வில்லியர்பெண்களேநீவிரைந்தோடியழையுமென்றாள்
குதிரைமேற்சீனிகட்டுங்கொப்பெனவேதாதியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டாரணங்குதாதியவள்
இலாயத்தில்கட்டிவைத்துயிருக்கின்றபுரவிகளில்
பாராசாரிபுரவிதனைப்பாங்குடனேதானவிழ்த்து
குதிரைக்குளிப்பாட்டிகொம்பெனவேகடிவாளமிட்டு
நாலுகாற்குவண்டயமாம்நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
பக்கத்திலங்குபடிபதியவைத்தாரப்போது
கண்ணாடிசல்லிகட்டிகவரிமான்குச்சுவிட்டு
முத்துத்துராகலிக்கத்துருமுன்னாலேதான்சொருகி
இமாமபட்சியிறகுவளையியலாகத்தான்சொருகி
குதிரையலங்கரித்துக்கொண்டுவந்துமுன்புவிட்டார்
அல்லிப்பெருமாளுமப்போதேதானெழுந்து
சட்டைதமான்வசிரகபாய்தரித்தாளேயல்லியரும்
அம்புவில்லுங்கைபிடித்துஅம்புறாத்தூணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழிமார்பக்கம்புடைசூழ
ஆறாயிரம்யானைகுதிரைஅல்லியுடனேபயணமாச்சு
வெள்ளித்தமுக்கடித்தார்வெண்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தமுக்கடித்துப்புறப்பட்டார்பெண்களெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும்விருதுகட்டிவருகிறார்
மானவலையும்வல்லயமும்வளைதடியுஞ்சக்கரமும்
இரட்டைக்குழற்றுப்பாக்கிஇருதோளிலிட்டார்கள்
காற்செருப்புந்தோல்சட்டையுங்கைதனிலேசில்லாக்கோலும்
அனந்தவிதப்பெண்களெல்லாமல்லியரைச்சூழ்ந்துவர
அப்போதுயல்லியருமாரணங்குதானெழுந்து
புரவியருகில்வந்தாள்பொற்கொடியாள்மாதுகன்னி
புரவிதனைச்சுற்றிவந்துபோகவேசரணஞ்செய்தாள்
கழுத்துமயிர்பிடித்துக்கடிவாளங்கைபிடித்து
தட்டினாள்புரவிதன்னைச்சடுதியிற்றானேறினாள்
அடிவயிற்றில்கால்தட்டஅபாரியாயோடிவந்து
ஆயிரம்புரவிகளும்அல்லியுடன்கூடவிட்டார்

ஆயிரங்குதிரைகளில்அல்லியம்மாள்குதிரையது
காற்றாய்ப்பறந்ததுகடுகெனவேவருகிறது
பட்டணத்தைதான்கடந்துபாரவனந்தான்வந்து
காட்டைவளைத்தார்கள்கருநாயைசூழவிட்டார்
செடியைவளைத்தார்கள்செந்நாவைசூழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள்கொப்பனவேதமுக்கடிப்பார்
ஆபன்பெருமாளும்அருச்சுனரைத்தானெழுப்பி
வருகிறாள்காணல்லியரும்வனந்தனிலேவேட்டையாட

அல்லியருக்கருச்சுனனம்பு பொருக்கித்தருவது.

அவள்-எய்கிறபாணமெல்லாமெழில்விசையாநீபொறுக்கி
அம்புகள்தான்பொறுக்கியல்லியற்குநீகொடுத்தால்
வல்லமையாய்வந்தாலேமாலையிட்டுவைப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டுஅருச்சுனனுந்தானெழுந்தான்
மாயமிருகமதுவந்ததேயல்லிமுன்பு
புள்ளிமான்றன்னைப்போற்கொடியாள்கண்டுவிட்டாள்
மானைத்துரத்தியேதான்வருகிறாளே அல்லியரும்
காற்றாய்ப்பறந்ததுவேகானகத்தில்மானதுதான்
குதிரைசவாரியிட்டுக்கொப்பெனவேதுரத்தலுற்றார்
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியரசாணியவள்அம்புகளெய்ததெல்லாம
பொறுக்கித்தருவானேபோர்விசையனருச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக்களைத்தாளேயல்லியரும்
விடுவிடுநேரமதுவெயிலானவேளையிலே
ஆலமரத்தடியில்அங்கேயிறங்கிவிட்டாள்
ஆடிதாதியரே ஆசனம்போடுமென்றாள்
அரைத்துணியைத்தானவிழ்த்து அருச்சுனனுங்கீழ்போட்டான்
குதிரைகட்டுமென்றுகொப்பனவேதான்படுத்தாள்
அல்மரந்தன்னுடனேயணைத்துவைத்தார்குதிரைதன்னை
பாக்கியமேயென்னுடையபாதப்பிடியுமென்றாள்
அருச்சுனராசனுமேயல்லியருக்கெதிரேவந்து
அல்லியம்மாள்தன்பாதமருச்சுனனும்பிடிக்கலுற்றான்
கையால்பிடிக்கையிலேகணையாழிசுற்றிக்கொண்டான்
ஆடிதாதியரேயலங்காரத்தோழியரே
நீங்கள்—கற்றகதைதனிலேகதையொன்றுசொல்லுமென்றாள்
களைகள்தெளியவேண்டும்கதையொன்றுசொல்லுமென்றார்

அருச்சுனன் அல்லிக்குக் கதைசொல்லல்.

அருளழகுமன்னனல்லியற்குக்கதையுரைப்பாள்
அல்லியரசாணி அம்பாரசாணி
குருகுலவம்மிசமாங்குதிரைக்கரைத்தேயராம்

துருவாசர்மந்திரத்தால்துலங்கவந்தநவமணிகள்
சந்திரகுலம்விளங்கவந்ததர்மாவரைந்துபேர்கள்
பாண்டுராஜன்பெற்றெடுத்தபஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிலையாண்டாக்குடையவீமராசன்
வீமனுக்குநேரிலையான்வில்வாங்குமருச்சுனன்றான்
நெருப்பிற்பிறந்தபெண்ணும்நேரிழையாள்துரோபதையை
எட்டாதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீசைமுறுக்கழகன்விழியிற்கறுப்பழகன்
நாவிதனில்நக்ஷத்திரம்நயனவிழிபார்வையுள்ளான்
தோளிலேதுளசிமாலைதொப்புளிலேயமுர்தகலசம்
பல்லிற்பாசவிணைபாதத்திறசெந்தாமரை
முதுகிலேமட்கரேகைமுழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரீமன்மதன்றான்இறுபெண்கள்மணவாளன்
முன்னிலுப்பின்னழகன்மோகன்னிமணவாளன்
பின்னிலுமுன்னழகன்பெண்களுக்குமணவாளன்
அருச்சுனனைப்போலேஅழகுடையான்யாருமில்லை
திக்குநல்லபாலகனைசெயம்பண்ணுஞ்சேவகன்றான்
இனிபிறக்கும்பெண்களுக்குமேற்றமணவாளன்
என்றசொல்தான்கேட்டுஇளங்கொடியாளல்லியம்மாள்
என்னகதைசொன்னாயென்றுயேறமுகம்பாராததாள்காண்
மீசைசட்டும்பாவனையும்விழியழகுங்கண்டுவிட்டாள்

அருச்சுனன்பேரில் அல்லியாசாணிகோபித்தது

கீ - அரடாஆண்பிள்ளையென்றாயுதத்தைத்தானெடுத்தாள்
காற்றாய்ப்பறந்தானேசட்டழகனர்ச்சுனனும்
கத்தியெடுக்கையிலேகாதவழியோடிவிட்டான்
நிற்கத்தரியாமல்நீலவர்ணர்பக்கம்வந்தான்
அங்கேகடந்தசேதியாண்டவற்குத்தானுரைத்தான்
கதைசகளுஞ்சொன்னேன்யான்காலுப்பிடித்தேனே
காலும்பிடித்தேனேசனைகள்தெளியவில்லை
கணையாழியோதிரத்தைக்கழற்றிவந்தேன்மாயவனே
மாலைப்பசுங்கிளியைமாலையிட்டுவையுமையா
உள்ளமுருகிறதேவுற்றசிவன்போகுதையா
ஆவியுருகிறதுஆனசிவன்போகிறதே
ஐந்துபாணந்தைத்ததல்லவோஅடியேனெஞ்சுருகிறதே
ஆறாநகுபாணமதுஅடியேன்மார்புருகிறதே
பஞ்சிலிட்டதீபோலேபதைத்துருகுதென்மனது
அல்லைப்போலழகுடையாளவனியிலேநானறியேன்
பார்த்துமறியேனையாபட்டத்திலேயுங்கண்டதில்லை
எழுத்துதச்சனவனெழுதிவாவிட்டானோ
மேல்நாட்டுத்தச்சனவன்மெய்யாய்ச்சிருட்டித்தானோ

ஏதாய்சிருட்டித்தானோ இபலானபிரமதேவன்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தவிலைபெண்ணையென்பான்
காமக்கணையாலேகளைதாங்கிப்போய்விட்டான்
மூர்ச்சைபட்டுவிழுந்தானேமூடமன்னனருச்சுனனும்
அப்போதுதாதிமாரத்தனைபேர்தோழிகளும்
பாங்கிமார்தோழியரும்பத்தினியாளருகில்வந்தார்
ஆடிதாதியரேயருகில்வந்தசெங்கமலம்
ஆரோவொருவனவன் ஆணைப்பிறந்தவண்டி
காலும்பிடித்தானேகதைசளுரைத்தானே
தேடிப்பிடித்துவாரும் துண்டித்தப்போடுகிறேன்
ஆங்காரப்பட்டவனை ஆக்கினைகள்செய்யவேண்டும்
ஆயிரந்தோழிகளையங்கனவேதேடவிட்டாள்
எங்கெங்குந்தேடியேயினியவிடமாராய்ந்தார்
கள்ளந்திருடனைத்தான்காணோமென்றவருரைத்தார்
பேயோபிசாசோதான்பின்றொடர்ந்துவந்ததம்மாள்
ஆணுருவாய்த்தோன்றிற்றோ ஆச்சியரேயுந்தனுக்கு
அதனாற்பழுதில்லை ஆச்சியரேயெழுந்திருங்கள
ஏறினாள்புறவியின்மேலனேகசனஞ்சூழ்ந்துவர
பாங்கியருந்தோழியரும்பக்கம்புடைசூழ
காடுசெடிதாண்டிசரியமலைதான்தாண்டி
மாளிகைவாசலென்றுமண்டபமேபோய்ச்சேர்ந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான்படமெழுதிக்கட்டியது

அருச்சுனன்தேடிவது.

அப்போதுகரியமாலாலோசனைசெய்து
அல்லியரைப்போலாகஅழகுபடமெழுதி
படங்களெழுதியேபாளந்தமாயவரும்
குளத்தங்கரையிலுற்றகோங்குமரந்தன்னில்
உயர்ந்தமரந்தனிலேவுலகளந்தார்கட்டிவைத்தார்
தண்ணீரில்நிழல்தெரியசுவாமியங்கேகட்டிவைத்தார்
அற்சுனனைத்தட்டியேயரிராமர்தானெழுப்பி
காண்டீபாருச்சுனனேகளையெனக்குவருகிறது
தண்ணீருங்கொண்டுவந்துதந்தாயேயாமாகில்
மாலைப்பசுங்கிளியேமாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டெழுந்தானருச்சுனனும்
கமண்டலத்தைதானெடுத்துக்கடுகியேயோடலுற்றான்
வனத்திற்குளந்தேடிவருகிறானேயருச்சுனனும்
தண்ணியிலிறங்கும்போதுதையலாளைக்கண்டுவிட்டான்
அல்லியரைத்தான்பார்த்து அருச்சுனனுமேதுசொல்வான்
தண்ணியில்போயிருக்கத்தையலேகாரியமேன்

என்னினுப்புநஞ்சடிஎங்கேகிடைப்பான்காண்
கட்டிலுண்டுமெத்தையுண்டுகால்பிடிக்கத்தாதியுண்டு
ஆடவென்றூஞ்சலுண்டுஅமர்ந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிச்செண்டாடப்பள்ளாங்குழியாடி
அம்மானாடியேதானமர்ந்துநீவீற்றிருப்பாய்
தேனேபசுங்கிளியேசிங்காதனம்வீற்றிருப்பாய்
உன்சொல்லுமேலாகவுத்தமியேநானினைப்பேன்
உன்னாசைகொண்டுநான்வுழன்றுதிரிகிறேனே
உன்மாயமருந்தாலேதாயைமறந்தேனே
அண்ணனைத்தம்பிமாரையனைவரையுநான்மறந்தேன்
காமக்கணையாலேகளைதாங்கிப்போகிறேனடி.
ஆசையெல்லாமுன்மேலேயலையுதடியென்சீவன்
வாயைத்திறவாயோமறுவார்த்தைசொல்லாயோ
முத்தானவாய்திறந்துவுத்தாரஞ்சொல்லாயோ
தாளைத்திறவாயோதனிவார்த்தைபேசாயோ
வாயைத்திறந்தாயானால்வச்சிரமுதிருமடி
வச்சிரமுதிர்ந்தாலேவாரியெடுக்கிறேனடி
தாளைத்திறந்தாலேதங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்தாலேதடவியெடுக்கேனடி
முத்துவுதிர்ந்துதானால்முந்தாணியேந்தாண்டி
உன் – சித்திரவாய்திறந்துசெப்பாயோஒருவார்த்தை
மார்போடுமார்பணைந்தால்மகாவிடாய்திருமடி
தோளோடுதோளணைந்தால்சுகங்கள்தெரியுமடி
நான் – எத்தனைநேரமட்டும்இதக்கங்கள்சொல்லுவேன்யான்
கல்லுங்கரையுமேமாடிகற்றாணுமிற்றுவிழும்
உன்மனதுகரையவில்லைமாலைப்பசுங்கிளியே
தண்ணீரில்நானிறங்கித்தழுவிப்பிடிப்பேண்டி
என்றுருதித்தானேஇளவிசையராசனவன்
மூச்சைப்பிடித்தவனும்முழுவிதடவலுற்றான்
சாமநேரமட்டாகததண்ணீரில்தடவினானே
தவளையுப்பாம்புகளும்தடவிவலித்தெடுத்தான்
அலுத்துச்சலித்தவனுமருச்சுனனும்வெளியில்வந்தான்
கரையின்மேல்வந்தவனும்கட்டழகனேதுசொல்வான்
என்றனைமோசஞ்செயதுஎங்கேபோனளென்றறியேன்
போனவிடமறியேன்போய்பதுங்குந்தாவரியேன்
தங்குமிடமறியேன்சஞ்சரிக்குந்தாவறியேன்
என்றுவிசாரமிட்டுஇறங்கியவன்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்புதையலைப்பார்த்துவிட்டான்
இந்நேரந்தடவினேனேயெங்கிருந்தாயேந்திழையே
என்னவித்தைசூத்திரங்களிளங்கொடியேகற்றவள்காண்
மாயமரித்தவளோமந்திரங்கள்கற்றவளோ

மலையாளவித்தைகளை மந்திரத்தைக்கற்றாயோ
வந்திழையேயுனைப்பிடிக்கவென்கையாலாகாதோ
மறுபடியுங்குதித்தானேமன்னன் துரைராசாவும்
அவ்வளவில்லமாயவனார் அங்கனேயோடிவந்து
படத்தையவிழ்த்தவரும்பாரளந்தார்போய்மறைந்தார்
நாலுநாழிகைமட்டுநல்விசையராசதுரை
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
மூழ்கித்தடவினானேமுடிமன்னராசனவன்
அல்லியரைக்காணாம லலைந்துவிசாரமிட்டான்
வந்துவெகுநேரமாச்சுமாயவரென்சொல்லுவாரோ
கனத்தவிசாரமிட்டுகமண்டலத்தில்நீர்முகந்து
மாயவனார்தன்னருகில்வந்தானேயருச்சுனனும்
வன்காணுமருச்சனரேஇந்நேரமேதுசெய்தாய்
சாமநெடுநேரமாச்சேதண்ணீர்கொண்டுநீவரப்போய்
என்னவதிசயமாயிருந்தீர்காணருச்சுனரே
ஐயாபெருமாளேஅடியேனொருவார்த்தை
தண்ணீர்மொள்ளபோனபோது தையலரைக்கண்டேனையா
தண்ணிரிலிருந்ததுபோற்றரிசித்ததெந்தனுக்கு
குதித்துத்தடவினேன்யான் கொம்பனையைக்காணாமல்
மூழ்கித்தடவினேன்யான்மொய்குழலைக்காணாமல்

ஸ்ரீகிருஷ்ணபகவான் நித்திரைசெய்யவும் அருச்சுனராஜன்
அல்லியரைத்தேடிப்போனது.

அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
அல்லியர்மேல்சித்தமது அபாவில்லையருச்சுனரே
களையாய்வருகிறதுகாண் டீபாவெந்தனுக்கு
நித்திரைசெய்தபின்புநேரிழையையுந்தனுக்கு
மாலைப்பசுங்கிளியைமாலையிட்டுவைப்பேனடா
என்று-வாள்விசையன் தொடைமேலேமாயவனார்தான்படுத்தார்
கள்ளக்குறட்டைவிட்டுகரிராமர்தூங்கினார்
அப்போதுவாள்விசையனருச்சுனனுமேதுசெல்வான்
சிரசைநழுவவிட்டுத்தேர்விசயன்தானெழுந்தான்
பாராங்கல்லைத் தூக்கிக்கொண்டுபார்த்திபன்வருகிறானே
எம்பெருமாள்மாயவரும்எண்ணுதுமெண்ணுகிறார்
தலைமேலேகல்போடத்தார்விசையன்தானினைத்தான்
என்றுகலங்கியெண்ணமிட்டுத்தானிருந்தார்
கல்லையெடுத்துவைத்துகாண்டீபனருச்சுனனும்
தலைக்குயரம்வைத்துசுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சித்தங்கொண்டுஅருச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குப்போகவென்றுமாதுதனைக்காணவென்று
காடுசெடிதாண்டிக்கடுகிவருகையிலே

அருச்சுனன்போனசெய்தியறிந்துமேமாயவரும்
அருச்சுனராசனுக்கனர்த்தம்வந்துநேர்ந்ததென்று

ஸ்ரீகிருஷ்ணபகவான்குறத்தியுருக்கொண்டுவருகிறது.

மாயன்பெருமாளும்வடிவெடுத்தாரந்நேரம்
செக்கச்சிவலையாய்ச்சிறுபெண்குறத்தியானார்
அர்ச்சுமணிகொக்குமணிஅழகானபாலமணி
பச்சைமணிபாலமணிபாங்காயலங்கரித்து
குறத்தியவைப்போலாகக் கோபாலர்வடிவெடுத்தார்
கண்டாளேகுறத்தியவைக்கட்டழகனருச்சுனனும்
ஆச்சிகுறத்தியரேயடியேன்யான்தெண்டமமமா
கைபார்த்துகுறியுரைக்கக்கட்டழகிவல்லவியோ
மனதில்நினைத்தகுறிசொல்வாயோமாதாவே
எந்தவூருங்களதுஎனக்கறியச்சொல்லுமென்றான்

குறம்.

தினதெந்தினதினதெந்தினதினதெந்தினதினன
தெந்தாதிநாதினனதினதெந்தினதினன

எந்தனதுநிருநாடுகேட்கிறையோதம்பி
எற்றமுள்ளஇந்திரனாளுமெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள்தவம்புரியும்நாடு
தவமுனிவரிஷிகளெல்லாம்வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலையெங்களதுநாடு
குமரேசர்வாழுமதுயெங்களதுநாடு
பச்சைமலைபவளமலையெங்களதுநாடு
பரமசிவன்வாழுமதுயெங்களதுநாடு
லங்காளஞ்சிங்காளமராட்டியமெங்கள்நாடு
வளம்பாடிகுறியுரைக்கவந்தேனடாதம்பி
பசிகாலமானாலேபழங்கூறிவருவோம்
பரமசிவனுமையவட்கும் கைபார்க்குங்குறத்தி
ராமக்காலட்சுமக்காள்பொம்மக்காளென்பேர்
கலைதிந்துகுறியுரைப்போம்நட்டணையாய்நாங்கள்
உண்மையாய்குறியுரைப்போம் தண்மையில்லைதம்பி
உன்னுணையென்னுணையென்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

ஆனால்கேள்கட்டுவச்சி யடியேனொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறியெந்தனுக்கு
உண்மைக்குறியுரைத்தால்வுச்சிதங்கள்தருவேண்டி
காதிலிடுங்குண்டலமுங்கையிற்பவுத்திரமும்
நான் உடுத்துமுடைமான முந்தனுக்குத்தருவேண்டி.

கைபார்த்தாகுறியுரையுங்கட்டழகிபெந்தனுக்கு
நாமக்குறத்தியவள்நலமாகவேயதுசொல்வாள்
வண்மைக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி அருச்சுனுக்கு குறிசொன்னதுகுறம்.

திணதெந்திணாதிணதெந்திணாதிணதெந்திணாதிணா
தெந்நாதிநாதிணாதிணதெந்திணாதிணா.

திங்கள்மதிபிறைசூடுஞ்சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகாசேனையருள்வேண்டும்
வனக்குறத்திவள்ளியம்மைவந்துதவவேண்டும்
மலையாளகதஞ்சியம்மைவாக்கருளவேண்டும்
அலாமேனுமங்கையரேமலைமேலுஞ்சிங்கை
அனைவோரும்வந்துகுறியன்புதரவேணும்
ஆகாசவாணிதுற்கைஐயனார்பிடாரி
அம்மைவள்ளியுமையவளுமினியகுறிசொல்லும்
பொங்கல்நயினாருகளும்பொற்கொடியேதெய்வம்
பூவாடைக்காரியமமைபுகழ்ந்துகுறிசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலேசிலிர்த்துகொள்ளுதுடம்பு
தேகமெல்லாம்மயிர்க்கூச்சிசிலிர்க்கிறதேதப்பி
வாடைமணம்வீசுதடாஐவர்வந்தாற்போலே
மயக்குகிறதென்னுடம்பைசன்னதங்கொண்டது
கூடைகொண்டுகவியுதடாகொற்றவனேயெனக்கு
கோலவிழிதுடிக்கிறதுகுறிகள்சொல்வேன்கேளு
சந்திரகுலராஜாக்கள்தருமர்தம்பிகள்
தாரணிமுழுதாளுகின்றதருமர்தம்பிதான்
சிலைநுதலன்வடிவழகன்தோவிஜயன்நீதான்
தீர்த்தயாத்திரைபோகவென்றுதோழனுடன்வந்தாய்
வடிவழகிசிலைநுதலாள்தென்மதுரைவாழும்
மாதாந்தஅல்லியின்மேல்மையல்கொண்டாய்நீயும்
ஆரியப்பாண்டியற்குஅரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண்டலையுகிறாய்நீயும்
பொய்யோடாவெங்குறிகள்பெய்யோடாபுகல்வாய்
புண்ணியனேதர்மர்தம்பிபொறுமையுடன்சொல்வாய்
என்றவனைத்தான்பார்த்திணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலேயிடைதுவளநகைத்தாள்

வேறு.

மெய்தான்காணுச்சியரேவிளம்பிறைபெந்தனுக்கு
கண்டதுகண்டாப்போல்கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாற்போல்பட்சமாய்சொல்லிவிட்டாய்
தெய்வக்குறத்திநீதெளிவானகட்டுவச்சி
உள்ளகுறியெனக்குவுத்தமியேநீயுரைத்தாய்
அல்லியரையாலையிட்டுஅழகுமணஞ்சூட்டுவேனோ

என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியவள்
என்மீதிலாசைகொண்டு இசைந்துவரப்பாருமம்மா
பாதம்பணிந்தானே பார்த்திபனருச்சுனனும்
ஆனால்கேள் தம்பியரே யல்லிவருவதற்கு
மூன்றுவிதம்குளிகையது முடிமன்னா நான் தருவேன்
அம்மருந்துநீவாங்கியல்லிபுரம் போய்ச்சேர்ந்து
தேன்மொழியாள்பட்டணத்தில் திருக்குளத்தில்போய்ச்சேர்ந்து
நான் - தந்தமருந்தெடுத்து தண்ணீரில்நீயுரைத்தால்
அல்லியம்மாள்பேரைச்சொல்லியம்மருந்தைநீயுரையும்
மருந்துகரையுமபோதவள்மனதுகரையுமோடா
குளிகைகரையும்போதவள் குணமுந்திரும்புமோடா
அல்லியனம்வந்து அழகுமணஞ்செய்திடுவாள்
பொம்மக்காள்பேரைச்சொன்னால்திம்மக்காள்நேர்ந்துவிடும்
ராமக்காள்பேரைச்சொல்லலட்சுமக்காள்நேர்ந்துவிடும்
பொய்யல்லவென்மருந்து புண்ணியனே நான் தருவேன்
உந்தனுடைமானமுடித்தியதைத்தாருமென்றாள்
காதிலிடுங்குண்டலமும்கையிற்பவித்திரமும்
கச்சைகளுந்தட்டிகளுங்கழட்டிக்கொடுத்தானே
இந்தமருந்துதான்பலியாமற்போனக்கால்
உன்னை - எங்கேகண்டுதேடுவேனச்சியரேசொல்லுமென்றான்
ஆனால்கேள் தம்பியரேயற்பமாய்ப்பேச்சுதானல்
நாலுமலைக்குநடுவேயடாவென்மலைதான
ஏழுகுடிசைகளில்எதிர்குடிசையெந்தனது
ராமக்காள்பொம்மக்காளட்சுமக்காளென்றழைத்தால்
உன்னுடைமையான்தருவேனுத்தமனே அஞ்சாதே
அருச்சுனன்றரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
பட்டுகுல்லாதட்டிகச்சைபலவிதவுடமைகளும்
கழற்றிக்கொடுத்தேதானேகட்டழகார்ச்சுனனும்
வாங்கிநடந்தாளேமலைக்குறத்திதனைப்போலே
ஆணழகராசதுரை அர்ச்சுனன் வழிநடந்தான்
உள்ளேமனமகிழ்ந்துவுத்தமனும்போகலுற்றான்
காடுசெடி தாண்டிகடுகிவந்தான் தென்மதுரை
அல்லிப்பெருமாளவள்பிறந்தபொய்கைகண்டான்

அருச்சுனன் அல்லிபிறந்த திருக்குளத்தில்மருந்துரைத்தது.

பவளக்கட்டுப்பொய்கைதனில்படியிலிறங்கியவள்
வண்ணமருந்தெடுத்துதண்ணீரிலுரைக்கலுற்றார்
அல்லியென்பான் மெல்லியென்பானந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்றுவாய்திறந்துபெண்ணேயென்பான்
மருந்துகரையுமபோதவள்மனதுங்கரையாதோ
குளிகைகரையிலே குணமுந்திரும்பாதோ
சித்தமிரங்கியேதேடியேவருவாளோ

எட்டிப்பாமனம்வருமோவென்னருகில்வாராயோ
காமன்கணையாலேகலைதாங்கிப்போறேனே
மன்மதபாணமதுமார்பைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணைசிறுமார்புருகுதடி
உன்னைக்கொண்டுநான்வழன்றுதிரிகிறேனே
அல்லியென்பான்பெல்லியென்பானவனந்தனிலேபெண்ணேயென்பா
வருவாளோ அல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான் (ன்
அல்லி அல்லியென்றுசொல்லி அலைகிறானருச்சுனனும்
வண்ணமருந்தெடுத்துதண்ணீரிலுறைக்கலுற்றான்
அல்லிப்பெருமாளவளுடையதாதியர்கள்
ஆயிரந்தாதிமார்களாரணங்குதாமெழுந்து
தங்கக்குடமெடுத்துத்தண்ணீர்க்குவருகிறாள்
பவளக்கட்டுதிருக்குளத்தின்படியோரம்வந்தார்கள்
மருந்துரைக்கும்வண்ணமைகளும்வார்த்தைகள்சொல்கிறதும்
அல்லியரைவைகிறதும்யவ்வார்த்தைகேட்டார்கள்
இடிவிழுவான்சொன்னதெல்லாமெல்லவருங்கேட்டார்கள்
அல்லிப்பெருமாளைமரசாளுநாயகியை
வய்புதப்புஞ்சொல்வார்கள்மண்டலத்திலாருமில்லை
அல்லியென்றுபேர்சொன்னால்அழுதபிள்ளைவாய்மூடும்
ஆகிடுப்புவார்த்தையெல்லாமமாச்சியற்கேசொல்லவென்று
ஓட்டப்நடையுமாசஓடிவந்தார்தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னாலேஅடிபணிந்துதெண்டனிட்டார்
ஆர்பணிதாதியரேஅறியவுரையுமென்றாள்
ஆர்பணியுமல்லநானடியேன்திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்துத்தண்ணீர்க்குப்போனோமம்மா
பவளக்கட்டுக்குளந்தனிலேபடியிலொருவனம்மா
வண்ணமருந்துகளைத்தண்ணீரிலுரைக்கின்றானே
ஆகடியஞ்சொல்லுகிறான் அழுப்புகளும்பேசுகிறான்
வய்புதப்பும்பேசுகிறான் வாய்பழுதுஞ்சொல்லுகிறான்
காதாரக்கேட்டோயமமாசனக்குலைந்துவந்தோமம்மா
அவ்வார்த்தைதான்கேட்டுஅல்லிவெகுகோபமதாய்
எட்டிப்பழம்போலேஇருகண்கள்தான்சிவந்து
செந்தலைநாகம்போற்சீறியவள்கோபமதாய்
எழுபிராயந்தனிலெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொன்றுநான்கீலிபட்டமாளுகிறேன்
அடிபெண்ணேயல்லியென்பார்ஆருமொருவரில்லை
பொம்மைவிருதுகட்டிப்பூமியரசாளுகிறேன்
பாலைக்கறந்துதான்பட்டணத்தில்வைத்தாலும்
பறக்கின்றகாகமதுபாராதுதலையெடுத்து
ஐம்பத்தாறுகாதமுமென்னாக்கினைகள்பெத்தவுண்டு
அஞ்சாமல்வந்துமிங்கேயழுப்புசொன்னாரடிதான்

பாங்கியிலும்நல்லவளேபவளசேனைநீகேளும்
என்னவிதமாயவனையாக்கினைகள்செய்திடுவோம்
என்றுமவள்கேட்கஏதுசொல்வாள்பவளசேனை
கட்டுப்விறுதறுத்துக்கலியாணஞ்செய்வதற்கு
மண்டலதுராசாவோவானவரோதேவரோதான்
மணஞ்சூட்டுவந்தவன்போல்மாதாவேகாண்கிறது
எண்ணுதயோசனைகளெண்ணியவள்தன்மனதில்
அல்லிப்பெருமாள்தனக்காலோசனையேதுசொல்வாள்
விடுவிடுநோத்திலேவெயிலாணவேளையிலே
வெண்பாமணலிலேதானம்பாகக்கூருகைக்கு
ஆகொடும்பாவிதனைஆற்றில்புறட்டினாலே
செண்மமுருகியவன்செததுபடிந்திடுவான்
ஆடிதோழியரேஆயிரம்பேர்வாருங்கள்
ஆற்றுமணல்தனிலேஅவனைப்புரட்டுங்கள்
வெம்பாமணல்தனிலேயிழுத்துப்புரட்டுங்கள்
கட்டியுருட்டுங்கள்கள்ளன்திருடனைத்தான்
செத்துபடிந்தபின்புசேதிவந்துசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டாயிரந்தோழியர்கள்

அருச்சுனனுக்கு அல்லியரசாணி முதல்தண்டனையிட்டது.

ஓட்டநடையுமாகஓடிவந்தார்மாதியர்கள்
ஆயிரந்தோழிமார்களருச்சுனனைத்தானெடுத்தார்
ஆற்றுமணலிமேல்அருச்சுனனைப்போடவந்தார்
காண்டீபனர்ச்சுனர்க்குகணமோகம்வருகுதென்று
ஆயன்பெருமாளும்யாரைநினைக்கலுற்றார்
சூரியபகவானைதிருமாலுந்தானினைந்தார்
கானலுறைகவேண்டாம்காண்டீபனருச்சுனற்கு
பெண்ணானேயால்பாரிபோதமணற்சுடாமல்
அருச்சுனனைக்காருமென்றுஆயருந்தோத்தரித்தார்
அப்போதுதோழியர்களாற்றோரம்வந்துநின்று
ஆற்றுமணலிற்போட்டருச்சுனனைப்புரட்டினார்கள்
கொற்றவனாருச்சுனற்குகுளிர்ந்தசலம்போலிருக்கும்
ஆயிரந்தோழியற்குமணல்கொண்டுவீசுதங்கே
நெல்லிப்பழம்போலேநெருங்கிற்றேகொப்பளங்கள்
சங்கப்பழமதுபோற்சரீரமெல்லாங்கொப்பளங்கள்
அத்தண்டதோழிகளும்அலைகுலைந்துஓடுகிறார்
அப்போதுஅருச்சுனரும்ஆணழகரேதுசொலவான்
அல்லியரும்நானுமாயமர்ந்துவிளையாட
மருவிவிளையாடுதற்குமண்டபந்தானில்லையோ
ஆற்றிலேவந்துநீயமர்ந்துவிளையாடிருப்பாய்
எப்போதுதான்வருவாளென்றாசைதீர்வதற்கு

மனதாவருவதெப்போ மருவியணைவதெப்போ
சித்தமிரங்காதோ சற்றேமனம்வருமோ
என்றுபுலம்புகிறானிபலானவர்ச்சுனனும்
அப்போதுதாதிமாரோரணங்குமேவோடிவந்து
அல்லிபக்கத்தெண்டனிட்டு ஆரணங்குமேதுரைப்பாள்
வெம்பாமணல்தனிலேவேகவேபுரட்டினோம்யாம்
யாற்றுமணலிற்போட்டு அர்ச்சுனனைப்புரட்டும்போது
எங்கள்சரீரமெல்லாஞ்சங்கபழம்போலச்சுக
நெல்லிப்பழம்போலேநெருங்கிற்றேகொப்பளங்கள்
அவனுக்கு—வாட்டமில்லைவதக்கமில்லைமாபாவியானவர்க்கு
அல்லி அல்லியென்றுசொல்லியலைகிறான்மாபாவி
உன்மேலேசிந்தையாய்உருகிப்புலம்புகிறான்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
வானஞ்சுழலவேதான்மருந்துண்டோபாவிகையில்
என்னமருந்தறிவான் இடிவிழுவான்பாவியவன்
எந்தவிதத்தினாலேஅவனைநாங்கொல்கிறது
பாங்கிகளில்நல்லவளாம்பவளசேனையேதுசொல்வாள்
தூக்குமரத்திற்போட்டுத்தூக்கிவிடச்சொல்லுமென்றாள்
செங்கமலத்தாதியரைத்தோழியரைத்தானழைத்து
ஊருக்குமேற்காகஒருகாதவழிதனிலே
தூக்குமரஞ்சொப்பனிட்டுத்தோழியரேபோடுமென்றாள்

அருச்சுனனுக்கு அல்லி இரண்டாவது

தெண்டனையிட்டது.

அவ்வார்த்தைதான்கேட்டருகிருந்தசெங்கமலம்
திக்கென்றெழுந்திருந்துதோழியருந்தானுமாக
தச்சன்மகளாரைத்தையலருந்தானுமாக
தூக்குமரஞ்சொப்பனிட்டுசோடித்துவந்தார்கள்
ஊருக்குமேற்காகஒருகாதவழிதனிலே
கொண்டுவந்துதூக்குமரங்கொப்பெனவேகட்டினார்கள்
ஏணியுஞ்சாத்திஇனியகயிற்போட்டார்கள்
அர்ச்சுனராசாவைஅங்கேயெடுத்துவந்தார்
சுற்றிவளைந்தார்கள்சூழ்ந்தார்கள்தாதியர்கள்
ஏணிமேலேறுமென்றார் இயலானமன்னவனை
அப்போ அருச்சுனனுமானழகனேதுசொல்வான்
பார்த்துமறியேனடிபாருலகிற்கண்டதில்லை
கண்டுமறியேனடிகாதாரக்கேட்டதில்லை
போட்டுமறியேன்காண்பதிதாகதோணுது
எனக்குத்தெரியும்வகைஇன்பமாய்க்காண்பியுங்கள்

ஏணிமேலேறியெடுத்துக்கயிற்பூட்டிக்கொள்ளு
இந்தவிதமென்றுசொல்லிஎந்தனுக்குகாண்பியுங்கள்
அறியாதவெந்தனுக்குஅறியப்படுத்துங்கள்
தெறியாதவெந்தனுக்குத்தெரியப்படுத்துங்கள்
இவ்வார்த்தைதான்கேட்டெழுந்தாளேசெங்கமலம்
சாணகெட்டபாதகனேதெரியாதோவுத்தடத்தை
இதோபாருமென்றுசொல்லிஏணிமேலேறினளே
கயிற்றையெடுத்தவளுங்கழுத்திலேபூட்டிக்கொண்டாள்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளிரூபங்கொண்டு ஏணியைத்தள்ளிவிட்டது.

அதுசமயம்பார்த்தாரேஅரிராமசெம்பெருமாள்
பெருச்சாளிபோலேவந்துபுரட்டிவிட்டாரேணிதன்னை
சுருக்குவலித்துக்கொண்டுதொங்குகிறாள்தோழியவள்
காலையுதறிக்கொண்டுகண்விழிபிதுங்கிக்கொண்டாள்
நாவைபிழுத்துக்கொண்டுநல்லுயிர்தான்போச்சுதங்கே
செத்துமடிந்தாளேசெங்கமலத்தோழியவள்
காண்டீபனருச்சுனனும்கட்டழகர்வதுசொல்வார்
காலையுதறுவதுங்கண்பிதுங்கிநிற்பதுவும்
நாக்கைப்பிதுக்கிக்கொண்டுநல்லவுஞ்சலாடுவதும்
இவ்வளவேசூஸ்திரங்களெனக்குததெரியவரும்
இனிமேல்தெரியவரும்மிரங்கிவாதோழியரே
ஐயோதெய்வமெனறழுகிறார்தோழியரும்
ஓட்டநடையுமாகஓடிவந்தாரரசியண்டை
மகுடத்துறைச்சியம்மோமாதாவேநீர்கேளும்
தூக்குமரத்தினிலேதோழியவள்போடபோண
செங்கமலதோழியவள்தூக்கிலமடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டுஅல்லிமனதுநொந்து
பாங்கியிலும்நல்லவளேபவளசேனைநீகேளும்
என்னவிதமாகஅவனைநாம்கொன்றிடலாம்
ஆடிமந்திரியேஆலோசனைசொல்லுமென்றாள்
அப்போதுபவளசேனையாலோசனைசொல்லுகிறாள்

அர்ச்சுனனை மூன்றாந்தாங்காளிக்குப் பலியிடச்செய்தது.

வடவாசல்செல்லியம்மாள்மாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள்பொலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டுபாயிரந்தோழிமார்கள்
சிக்காயுமெண்ணெயுடனேதேங்காயுமிளநீரும்
புதுபானையசிசிகளும்புட்பமுஞ்சந்தனமும்
கருப்பூரஞ்சாம்பிராணிகாளிக்குக்கொண்டுவந்தார்

ஆரடி காதிகளே அழைத்துவா ஓசப்பெண்ணை
இவ்வளவில்தாதிமார்களிவர்முடுகியோடுகிறார்
ஆரான்பெருமாளுமவ்வார்த்தைதானறிந்தார்
கார்மேகவர்ணருங்காளியண்டையோடிவந்தார்
வாருமம்மாள்தங்கையரேவார்த்தையொன்றுநீர்கேளும்
அல்லிப்பெருமாளை அழகுமணஞ்சூட்டவென்று
காளையந்த அர்ச்சுனனுங்கனவேஷங்கொண்டுவந்தான்
அர்ச்சுனராசனென்றறியாமலல்லியம்மாள்
காளியம்மாவுந்தனுக்குகாவெடுக்கச்செலவுதந்தாள்
ஓச்சப்பெண்போலாகஉத்தமியேவருவேனம்மா
பூசையானபிற்பாடுபொங்கலிட்டுத்தீர்ந்தபின்பு
என்மேலேசந்ததமாயிந்தபெலிவேண்டேனென்பேன்
என்வார்த்தைவேண்டாமென்றுன்வார்த்தைகேட்பார்கள்
நானுரைத்தபாவனைபோல்நாயகியேநீயுரையும்
அர்ச்சுனராசனுக்கழிவுவந்ததானக்கால்
வெற்றிமதயானைவீமனுன்னைப்பிழைக்கவொட்டான்
வச்சிரகோபகெதையால்மண்டிபோட்டுதலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்துத்தாக்குடையவீமராசன
துண்டந்துண்டமாகவுன்னைத்துணித்திடுவான்வீமராசன்
கத்தியெடுத்துன்னைக்கழுத்தையறுத்திடுவான்
காளியென்றும்பாராமல்கனத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குத்தாமுரைத்துக்கரிராமர்தானடந்தார்
ஓச்சப்பெண்போலாகவுலகளந்தாரவடிவெடுத்தார்
ஓகத்திவாசலிலேஉட்கார்ந்திருந்தாள்காண்
ஓட்டம்நடையுமாகஓடிவந்தார்தாதியர்கள்
கோவிலுக்குப்போகவேண்டும்குச்செடுத்துவாருமென்றார்
திறவுகோல்தானெடுத்துதேன்மொழியாள்போகலுற்றாள்
கடுகிமுடுகியேகாளிகோவில்வந்தார்கள்
கோயில்கதவுதன்னைக்குச்சிட்டுதான்திறந்தாள்
குளத்தில்மூழ்கிவந்துகொம்பனையைபூசைசெய்தாள்
அபிஷேகஞ்செய்துவைத்தாளாங்காரககாளியற்கு
சென்னலரிசிகொண்டுதேவியர்க்குபொங்கலிட்டார்
கோயில்திருவிளக்குக்குறைவில்லாமலேற்றினார்கள்
தேங்காய்உடைத்தார்கள்தீபதூபந்தான்கொடுத்தார்
அருச்சுனனைகூட்டிவந்துஅம்மனுக்கெதிரேவைத்தார்
மண்பிறக்கும்முன்பிறந்தவழக்காடுபநல்லசெல்வி
யுகம்பிறக்குமுன்பிறந்தவுத்தண்டபத்திரகாளி
காய்ந்தமழுவேந்துங்கர்த்தனிடதேவியரே
எரிந்தமழுவேந்துமீஸ்வரனார்தேவியரே
வடவாசல்செல்லியம்மாள்மணிதபலியோர்வைகொள்ளும்
வசனிக்கும்போதையிலேவந்துவிடுஞ்சந்ததங்கள்

ஒச்சைப்பெண்பலியிலேயுதறுதுதெய்வம்வந்து
ஆங்காற்றடியாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையயெல்லைகாக்குமாங்காரக்காளியல்லோ
மதுரையைக்காத்திருக்குமம்மன்னுப்பிடாரியல்லோ
அல்லிபருக்காகாததெர்சனுக்குமாகாது
இப்பலியான்வேண்டேனோர்வையில்லையெந்தனுக்கு
பெண்பலியீந்தாலேஇப்பவேயோர்வைகொள்வேன்
யாண்பலியீந்தாலேயனர்த்தம்பண்ணிபோட்டிடுவேன்
மதுரைக்குடிபடையைமாளபலிபோட்டிடுவேன்
இவ்வார்த்தைதான்கேட்டேதுசொல்வார்தாதிகள்
நீசொன்னவாக்கியங்கள்நிச்சயமுமாகாது
காளியம்மன்வாயாலேகடுகியுரைத்தாலே
ஈஸ்வரியாள்வாக்குரைத்தால்எல்லார்க்குநிச்சயங்காண்
என்றுபணிந்தார்கள் இயலானதாதியர்கள்
அப்போதுகாளியம்மன் அப்படியேவாக்குரைத்தாள்
அஞ்சிப்பயந்தார்களல்லியிடமோடிவந்தார்
மகுடத்துரைச்சியர்க்குவந்துதெண்டன்பண்ணினார்கள்
காளியற்குப்பூசைபண்ணிக்கனத்தபொங்கலிட்டோமம்மா
யாண்பலிவேண்டுமென்றாடினாள்சந்தமாய்
அவளைநம்பாமல்அம்மன்சொல்லவேண்டுமென்றாள்
அப்படியேகாளியம்மன்யாண்பலிகொள்ளேனென்றாள்
அல்லிபெருமாட்காண்காற்றுமாகாது
எந்தனுக்குமாகாதுஎன்றாளேகாளியம்மன்
யாண்பலிதந்தாலேயனர்த்தம்பண்ணிவிடுவேனென்றாள்
மதுரைக்குடிபடையைமாளப்பலிகொள்வேனென்றாள்
இவ்வார்த்தைகேட்டவுடனேதுசொல்வாளல்லியம்மாள்
வானஞ்சுழல்வதற்குமாந்துவித்தைகற்றவனே
பூமிசுழல்வதற்குப்பொடிசளறிந்தவனே
என்னமருந்தறிவானிடிவிழுவானென்றறியேன்
எந்தவிதத்திலேயேந்திழையேசொல்லமடி
பாங்கியிலுமநல்லபவளசேனையேதுரைப்பாள்
பூதக்கிடங்கிலேபோட்டடையும்பாதகனை

அர்ச்சனனுக்கு நான்காவது தெண்டனையிட்டது.

யாரடிதாதிகளேயலங்காரத்தோழிகளோ
பூதக்கிடங்குதனிற்போட்டடையுமென்றுசொன்னார்
எம்பெருமாள்மேகவர்ணர்இவ்வபணந்தாமறிந்தார்
பூதங்கள்தன்னருகேபெருமாளுமோடிவந்தார்
மாயவரைக்கண்டவுடன்மயங்கிற்றேபூதமெல்லாம்
யாரடாபூதங்களேயாங்காரமாட்சதலோ
அருச்சுனனைக்கொண்டுவந்துஅடைக்கவருவார்கள்

பார்த்திபனருச்சுனனுக்குப்பணிவிடைசெய்திடுங்கால்
சங்கீதந்தன்னுடனேசந்தோஷமாய்வைத்திடுங்கள்
அருச்சுனராசனுக்கு அழிவுவந்ததானார்கள்
வெற்றிமத்யானைவிமராசன்தானறிந்தால்
வச்சிரகோபகெதையினாலேமண்டியிட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்துதாக்குடையவிமராசன்
அஞ்சுதுண்டாகஅறுத்திடுவான்வீமராசன்
பூதத்துக்குச்சொல்லிபின்பெருமானாயபோய்நடந்தார்
அப்போதுகாதிமார்அருச்சுனரைக்கூட்டிவந்தார்
பூதக்கிடங்கதனிற்போட்டடைத்தாரருச்சுனரை
ஆர்காணும்பூதங்களேஅல்லியம்மானுததாரம்
பொல்லாதபாதகனைபலியதுகொண்டிடுங்கள்
இவனைப்பலிகொண்டெடுத்துப்புசித்திடுங்கள்
தள்ளிகதவடைத்துச்சங்கிலியைப்பூட்டினார்கள்
முதுகிலேமச்சரேகைகண்டேபூதமெல்லாம்
பஞ்சணைமெத்தைபோட்டுப்பார்த்திபனையிருக்கவைத்து
அததண்டபூதமெல்லாம்அர்ச்சுனற்குப்பணிகள்செய்யும்
கைபிடிக்கும்சிலதுபூதம்காலபிடிக்கும்சிலகணங்கள்
பாதம்பிடிப்பதுவும்பாட்டுகளைப்பாடுவதும்
கூத்துகளாடுவதுங்கொண்டாணடிப்பதுவும்
தார்விசையனருச்சுனர்க்குசங்கீதம்பாடுவதும்
ஆடாதகேளிகையும்அரும்பவனிநாடகமும்
சங்கீதம்பார்த்துமேதார்விசையன்தானிருக்க
கண்டார்கள்தாதியர்கள்கணமானபேய்க்கூத்தை
அல்லிபெருமாளின்அருகாகவோடிவந்து
சாஷ்டாங்கமாகசரணமுடனேதுசொல்வார்
பூதக்கிடங்குதனில்போட்டடைத்தோர்பாதகனை
பூதப்பிசாசனைத்தும்போதப்பணிசெய்கிறதும்
பாதப்பிடிக்கிறதும்பணிவிடைகள்செய்கிறதும்
கூத்துகளாடிக்கொண்டாணடிக்கிறதும்
பார்த்துவந்தோமாச்சியென்றுபாதம்பணிந்தார்கள்
அல்லிபெருமானுமாரணங்குமேதுசொல்வாள்
என்னமருந்தறிவானிடிவிழுவானென்றறியேன்
வானஞ்சுழல்வதற்குமருந்தறிவான்சண்டாளன்
பூமிசுழல்வதற்குப்பொடியறிவான்சண்டாளன்
எனறுவிசாரமாயிருந்தாள்யல்லியம்மாள்
மாயன்பெருமானும்பலராமரேதுசொல்வார்
அர்ச்சுனராசாவைஅழைத்துவரவேண்டுமென்று
என்னவடிவெடுத்தார்யெம்பெருமாள்மேகவர்ணர்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரூபங்கொண்டு அருச்சுனனையழைத்துப்போனது.

தெய்வப்பெண்போலேஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைபோலேதீவுக்கிளிபோலே
மின்னுகிறகாந்தியைப்போல்வேரிற்பவளம்போல்
காய்க்கும்பிராயம்போற்கன்னிகட்டும்பிராயமவள்
பூர்க்குபிராயமவள்பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதுகாண்கொழுந்தெல்லாம்பிஞ்சுவிடும்
பாதிப்பிராயமவள்பக்கமெல்லாம்பிஞ்சுவிடும்
இருண்டெழுந்தசோலையிலேசெவந்தெழுந்தசூரியன்போல்
குன்றுமேற்சந்திரன்குதித்தெழுந்தபாவனைபோல்
ஈழத்துதச்சனவன்எழுதிவாவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன்விளைந்துவாவிட்டதுபோல்
அஷ்டாபரணமெல்லாம்அலங்காரஞ்செய்தவளும்
பட்டுபளபளென்னபாடகக்கால்சோதிமின்ன
தெய்வபெண்போலேஸ்ரீராமர்வருகிறாரே
அழகுகுலுங்கவும்மானந்தங்கொஞ்சவேதான்
உடல்குலுங்கமாயவனார்ஓடிவருகிறாரே
காடுசெடிகள்தாண்டிக்கடுகியேவந்துவிட்டார்
மதுரைதெருவிலேவந்தாரேஎம்பெருமாள்
அக்கமாரேதங்கையாரேஆடிதாய்மாரே
செக்கைசெவலையம்மாள்சிறுவயதென்கணவன்
வெரிபிடித்தமன்னவன்காண்வீதிதிரிவாண்டி
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
தண்ணீர்கண்டவிடத்தில்தன்கைமருந்துவைப்பான்
எட்டுநாளாச்சுதம்மாள்என்கணவன்வீடுவிட்டு
ஆரோதெரியாதடக்கிவசங்கொண்டார்கள்
என்கணவனைக்காணமல்கதறிதிரிகிறேனே
புருஷனைக்காணமல்புலம்பித்திரிகிறேண்டி
அறிந்தாலுரையுங்கள்அக்கமாரேயென்றழுதாள்
மாதுபுலம்புவதைமதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்கள்தோழியர்கள்தானறிந்தோடிவந்தாள்
அல்லிப்பெருமாட்கறிக்கையிட்டார்தாதியர்கள்
பூதக்கிடங்குதனில்போட்டடைத்தபாதகனை
அவனைமாலையிட்டதேவியாம்வந்தாளொருத்தியிங்கே
வானத்துரம்பையம்மாள்மயிலனையாம்தோற்றுகிறாள்

அனகனைக்காணேனென்றுகதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறதுதுக்கம்பெருகுதம்மா
அவ்வார்த்தைதான்கேட்டாரணங்குயேதுசொல்வாள்
ஆரணங்குமாதரைநீதனழைத்தோடிவாருமென்றாள்
ஓட்டம்நடையாகவோடிவந்தார்தாதியர்கள்
ஆரடிகன்னியரேயழுதுபுலம்புவதேன்
எங்கள்ஆச்சியருமுன்னை அழைத்துவரச்சொன்னார்காண்
அல்லிபெருமாளுமழைக்கிறாள்வாருமென்றாள்
எதுக்கழைக்கிறாளிளங்கொடியாள்பாவியென்னை
என்றுநடந்தாளேயம்பெருமாள்மாளிகைக்கு
வாசலும்வாசலதுபடியேறுந்தாளகடந்து
அல்லியர்க்குமுன்னேவந்துஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிடக்கன்னியரைத்தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களதுஎங்கிருந்திங்குவந்தாய்
ஏதுக்கழுகிறாயெனக்கறியச்சொல்லுமென்றாள்
என்னுடையஆச்சியரேஎன்பாவங்கேளுமம்மா
தூரவடக்கேயம்மாதுவாரகாபுரிதேசம்
திருமலைநாயக்கன்பெற்றசீமானபெண்ணிருவர்
என்பேருமெல்லியர்காணென்தங்கையோஅல்லியம்மாள்
என்னைமணஞ்சூட்டிஎன்தங்கையேவிச்சைகொண்டான்
பெண்டுமேல்பெண்டுமெல்லோகொடுப்பாரோபூமியிலே
அல்லியர்மேலாசையாய்ஆணழகன்வெறியெடுத்து
பித்தம்பிடித்தவன்போற்பிதற்றித்திரிகிறானே
தண்ணீரைக்கண்டாலேதன்னைகமருந்துனைப்பான்
அல்லியென்பா மெல்லியென்பானலைந்துதிரிகிறானே
வீடுவாசல்தங்காமல்வெளிப்பட்டுபோய்விடுவான்
தேடித்திரிகிறேனேசீரானமன்மதனை
கண்டுபிடித்தவனைக்கடுகியனேகொண்டுபோவேன்
எட்டுநாளொருவாயிருப்பான்மனம்பிடித்து
மாதுமேல்நினைவெடுத்துமாளிகையில்நிற்கரியான்
பந்தாடும்பட்டணத்தில்பாவியொருபெண்பிறந்தேன்
செல்வத்தலையிலேசெப்போடெழுதினதும்
கதியைத்தொலைப்பேண்டிகாவேரிநீந்திடுவேன்
விதியைத்தொலைப்பதற்குவிதியற்றுளானேண்டி
வடிவழகாயிருந்தார்மன்னனென்றனையென்கணவன்
ஆரோதெரியாதடக்கிவசங்கொண்டார்கள்
என்புருஷன்றன்னையம்மாயினிகாணப்போறேனோ
என்றதுதான்கேட்டேதுசொல்வாளல்லியம்மாள்
என்பேரைச்சொல்லியவனெடுத்துமருந்தனைத்தான்
ஆகடியஞ்சொன்னதிருடனைத்தேன்கிடங்கிலேதான்

பயித்தியக்காரனென்றான்பழுதில்லையென்றனுக்கு
ஆனாலழைத்துப்போமனுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆரடிகாதியரேயலங்காரத்தோழிகளே
கிடங்கைத்திறந்தவனைக்கொப்பெனவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட்டலங்காரத்தோழியர்கள்
ஓட்டம்நடையுமாகவோடிவந்தார்கிடங்கருகில்
கிடங்கைத்திறந்தார்கள்கொப்பெனவேபோகவிட்டார்
அப்போதுதெய்வகன்னிஆளன்முகம்பார்த்து
வாடாகுடும்பாநீமதியழிவனென்றழைத்தான்
அல்லியென்பாள்மெல்லியென்பாளழகன்தான்வருவானே
எப்போவருவாளோஎன்னாசைதீருமென்றான்
மன்மதபாணமதுமார்புருகிப்போகுமென்பான்
சித்தசன்தொட்டகணைசிறுமாபுருகுதென்பான்
ஆறருகுபாணமதுமார்புருகிப்போகுதென்பான்
அஞ்சருகுபாணமதுநெஞ்சருகிப்போகுதென்பான்
அருச்சுனனைக்கூட்டியேயரிராமர்போகலுற்றார்
மதுரையைத்தாண்டியேவந்தார்கானகத்தில
மாயன்பெருமானுமாய்கையாய்ப்போகலுற்றார்
ஆலமரத்தடியிலரிராமர்பள்ளிகொண்டார்
கள்ளக்கொறுக்கையிட்டுக்கரியமால்தூங்குகிறான்
ஆயனருகாகஅருச்சுனனார்வந்துநின்றார்
பாரளந்தார்பாதத்தைப்பார்த்திபன்பிடிக்கலுற்றார்
அலண்டுபுரண்டதுபோலரிராமர்கண்விழித்தார்
ஆனாலழகுமன்னாஅருச்சுனரேகேட்டீரோ
காணாதசொற்பனத்தைக்கண்டேன்காணருச்சுனரே
என்னைத்தனியேவிட்டுஎங்கேயோபோனதுவாய்
வானக்குறத்திகைபார்த்துச்சொன்னதுவாய்
கண்மருந்தனக்குமலைக்குறத்திதந்ததுவாய்
நீதரித்தபூஷணத்தைச்சேரிழைக்குத்தந்ததுவாய்
அம்மருந்தைநீவாங்கியல்லிபுரம்போனதுவாய்
வண்ணமருந்தெடுத்துக்கண்ணீரிலுரைத்ததுவாய்
அல்லியிடாதிமாராயிரம்பேரோடிவந்து
அருச்சுனரையுனையெடுத்துஆற்றிலேபோட்டதுவாய்
தூக்குமரந்தனிலேதேர்விஜயாபோடக்கண்டேன்
காளியம்மன்கோயிலிலேகாவுகொடுக்கக்கண்டேனப்பா
பூதக்கிடங்கிலேதாபோட்டடைக்கக்கண்டேனப்பா
ஆரோவொருதெய்வகன்னிவளைந்துவரக்கண்டேனப்பா
என்னருகேவந்திருக்ககண்டேன்கனவாக
என்னகாண்மைத்துனரேயிப்படிகனவுகண்டேன்
வாள்விஜயன்கோமானும்மாயவனுக்கேதுரைப்பான்
பித்தமியர்ந்ததினாற்போதக்கனாக்கண்டீர்

அல்லியர்மேற்சிந்தையது ஆசைமறக்கவில்லை
மாலையிட்டு அல்லியனை மருவியணைவதெப்போ
கோபாலமைத்துனரேகூட்டிவைப்பதுன்பாரம்
அப்போதுமாயவருமருச்சுனன்முகம்பார்த்து
ஏறமுகம்பார்த்தெம்பெருமாளேதுசொல்வார்
பட்டுக்குல்லா குண்டலமும்பவுத்திரமே திரமும
பட்டுசுட்டியொட்டியாணம்பசும்பொன்னூற்சமுதாடும்
தாமரைப்பூச்சல்லடமும்சந்திரகாந்திதட்டிகளும்
உத்தரசம்வல்லவாட்டுஉத்தமனேயெங்(்)கயென்றார்
அஞ்சிப்பயந்தவன்யருச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமாளேநீர் அனந்தரித்தினைபோதையிலே
மாதினதுபட்டணத்தைமதுரை யைப்பார்ப்போமென்று
மாதுமேல்தன்னினைவாய்வழிபிடித்துப்போனேனையா
வழியிலொருகுறத்திவந்துகுறிசொன்னாளையா
வண்ணமருந்துதந்துதண்ணீரிலுரையுமென்றாள்
மருந்துரைக்கும்போதவள்மனதுகரையுமென்றாள்
குளிகைகரையும்போதுகுணமுந்திநம்புமென்றாள்
மருந்துபலியாமல்மாயவரேபேச்சுதையா
நாலுமலைக்குள்நடுவிலவள்குடிசையென்றாள்
இராமக்காள்பொம்மக்காள்இலட்சுமக்காளாள்போம்
அங்குவந்துகேட்டாக்காளாபாணங்(க)ருவேனென்று
மருந்தைக்கொடுத்துவிட்டுவாங்கிப்போனாளுடைமையெல்லாம்
அவள்கொடுத்தபடியேதான்குணமாச்சோவருச்சுனனே
சொன்னபடியாகச்சேர்ந்தாளோ அல்லிநல்லாள்
ஒருலாபங்கண்டறியேன் உழன்றுநான்வந்தேனையா
பொம்மக்காள்பேரைச்சொல்லித்திம்மக்காள்நேர்ந்ததையா
உடைமைபறிகொடுத்துதுழன்றுநான்வந்தேனையா
அவ்வார்த்தைதான்கேட்டரிராமரேதுசொல்வார்
குறத்தியிருப்பிடத்தைக்கொற்றவனேதேடிப்போய்
உன்னுடைமையுள்ளதெல்லாம்உத்தமனேவாங்கிவாரும்
கடுகியேவாங்கிவாரும்கட்டழகாவென்றுரைத்தார்

அருச்சுனன்குறத்தியிடஞ்சென்றுதான்கொடுத்ததைவாங்கினது

ஆபாதுசொற்கேட்டுஅருச்சுனருந்தானடந்தார்
குறத்தியைத்தேடிக்கொப்பெனவேவருகிறாரோ
நாலுமலைநடுவேநல்விசையன்தேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்காள்லட்சுமக்காளென்றழைத்தார்
மாயன்பெருமாளுமலைக்குறத்திபோலேவந்தார்
யாரடாதம்பியரோயழைத்தகருமமென்ன
அப்போதருச்சுனனுமாணழகரோதுசொல்வார்
நீகொடுத்தமருந்துதனிற்குணமில்லையாச்சியரோ
நீதந்தமருந்துதனிற்சற்றும்பலனில்லைபோடி

பொம்மக்காள்பேரைச்சொல்லத்திம்மக்காள்நேர்ந்திதம்மா
உன்பேச்சைக்கேட்டுநானுனைநம்பட்டுவந்தேனடி
நான்கொடுத்தஉடைமையெல்லாகொப்பெனவேதாருமென்றான்
என்வார்த்தைநீர்கேளீர இயலானசுப்பியரே
கட்டழகாஉன்னுடைமைகடையிலேவிற்பானேன்
எச்சுக்கடைதனிலேகண்டசலையாரிசேனை
கனனமிட்டுவந்தேனென்றுகட்டியடித்தார்கள்
திருடிவந்தேனென்றுசொலவித்துணியும்பறித்தார்கள்
இடியும்பட்டேனுதையும்பட்டேனலைச்சல்களும்பட்டுவந்தேன்
அடுமைபறிகொடுத்துஉடுத்தினதுணியிழந்தேன்
எங்கிருந்துநானகொடுப்பேன்இனியஉடைமையது
அவ்வார்த்தைதான்கேட்டருச்சுனனுமேதுசொல்வான்
உடைமைகொடுக்காமலுன்னைவிடேன்கட்டுவசி
மடியைப்பிடித்திழுத்தான்மாதுகுறத்தியனை
குய்யோமுறையோவென்றுகூவினாள்குறத்தி
புற்றீசல்போலவேதான்புறப்பட்டார்சிறுகுறவர்
சில்லுபொல்லென்றுசொல்லிச்சிறுவராய்க்கூடினார்கள்
யாருக்கொருகுத்துவைத்துஅடித்தாரேயருச்சுனனை
அருச்சுனர்தரித்திருந்தஆபரணமுள்ளதெல்லாம்
கொண்டுவந்துதந்தாளேகொம்பனையாள்குறத்தியரும்
அல்லியர்க்குப்பட்டகளையர்ச்சுனர்க்குப்போதுமையா
பெண்ணாலேபட்டகளைபோதுமென்றாருச்சுனரை
அருச்சுனமகாராசனையரிடம்வந்துவிட்டான்
வாங்கிவந்தேனுடைமையென்றுவணங்கியேதெண்டனிட்டான்
அப்போதுமாயவனாருச்சுனருக்கேதுசொல்வார
மாளிகைக்குப்போகவேமனமுண்டோ அருச்சுனரே
தருமர்தவிப்பாரோதம்பியார்புலம்புவாரோ
காணாதேயுன்னைச்சிகலங்கித்தவிப்பாரோ
வந்துவெகுநாளாச்சேவாழ்விசையா அருச்சுனரே
பெண்ணாசைகொண்டுநீபுலம்பித்தவிக்கிறாயே
மாதர்மேலாசைகொண்டுமயங்குகிறாயருச்சுனரே
யானாலழகுமன்னனர்ச்சுனனுமேதுசொல்வான்
என்தவிதமானாலு மிலங்கொடியாளல்லியனை
தாலிகட்டிவையுமையாசுவாமிபெருமாளே
மாலையிட்டுவையுமையாமாயன்பெருமாளே
மாயன்பெருமாளுமரிராமரேதுசொலவார்
யானாலழகுமனனேர்ச்சுனரேநீர்கேளும்
யாண்டிவடிவாகஅல்லியின்றன்வாசலிலே
மடலூர்ந்துவந்தையாகில்மாலையிட்டுவைப்பேண்டா
அப்படியேபோய்வருவேனய்யாசெலவருளும்

அருச்சுனனாண்டிவேடங்கொண்டு படை ஊர்ந்தது

மாயன்பெருமாளுமரிராமப்பொழுது
ஆண்டியைப்போலாகஅர்ச்சுனற்குசெல்வு தந்தார்
ஆணலழகுமன்னனர்ச்சுனனுமேதுசொல்வான்
தொண்ணூறும்பத்துஞ்சென்றதுவண்டக்கிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலேபழுத்தகிழவனைப்போல
நாணற்பூப்போலேநரைத்தகிழவனைப்போல்
தோலும்நரம்புகளும்தொங்கிற்றுகிழவனுக்கு
பழுத்தபழம்போலேபார்த்திபன்வடிவெடுத்தார்
காவிகஷாயமுடன்கைதனிலேமாத்திரையும்
திருநீருந்தாமணிந்துதிரிகண்டமாலைசுற்ற
உருத்திராட்சத்தாவடமும்ருத்திராட்சமாலைகளும்
அன்றுரித்தமான்தோலுஅழகானபுலித்தோலும்
கொட்டமிதியடியுமசோளிபைவைத்தகின்னரியும்
மாத்திரைக்கோற்பிரம்புகளும்மயிற்குச்சுகண்டமூலம்
வேலாயுதம்சூலாயுதம்விருதகண்டகோடாலி
செவுரிகல்லபாத்திரமும்கேசாக்கங்கணமும்
திருவேகடிபாத்திரமும்திருநீறுகோபிசளும்
சங்குஞ்செயகண்டிகையுந்தரித்தாரேபூஷணங்கள்
சடையுமுடியுமாகத்தம்பிரானைப்போலானார்
ஆதிசிவனைப்போலாகஅருச்சுனனார்வேடங்கொண்டார்
கைலாசநாதனைப்போலகாண்டீபர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டானேவீராதிவீரனுந்தான்
ஆயர்பெருமாளுமங்கனவேயேதுசெய்தார்
அல்லியைப்போலாகஅழகுபடமெழுதி
பாங்கியிலும்நல்லபவளசேனைநாயகியை
கூடவெழுதினாரங்கோவிந்தராயபெருமான்
படத்தைமடித்தவரும்பார்த்திபன்கைகொடுத்தார்
அல்லிதிருவாசலிலேயங்கேபடம்விரித்து
அவள்உடுத்தியபாவாடையிலேஒருமுழமும்பிச்சைவாங்கி
வந்தாயேயாமாகில்மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லிப்பெருமாளனுப்பிவைத்தார்
வண்ணப்படமெடுத்துவாழ்விசையன்வழிநடந்தார்
தள்ளாடித்தள்ளாடித்தளர்ந்துமெள்ளவழிநடந்தானே
தெத்துதெருக்கடந்துதேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையாய்ஆசாரவாசல்வந்தான்
ஆடிதாதியரோயரண்மனைக்கிப்போகவேணும்
காசியிலிருந்தலவோயிராமசுரம்போகவேணும்
பிச்சைகேட்கவந்தேனம்மாபோகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலேபோய்வருவேனச்சியரே
ஐயாபெரியவரோயறிவுபடைத்தவரோ

திரப்படித்தவரோதெளிவரிந்தசங்கமமோ
ஆண்காற்றடியாது அல்லியதுகோட்டையிலே
போனாற்பழுதுவரும்போகாதேசாமியென்றாள்
ஆண்டிபரதேசியையமென்றுவந்தவனை
வழியும்மறிப்பார்வையகத்திலாருமில்லை
தொண்ணூறுஞ்சென்றதம்மாதுவண்டக்கிழவண்டி
தேவலுடநாயபுகளுங்கொங்குதேசெங்கனுக்கு
என்னைப்பார்த்தவர்களெல்லாரும்பணிந்திடுவார்தப்பாது
போகச்செலவுகொடும்புண்ணியந்தப்பாது
தருமத்திலேயம்மா தாழ்வொருநாளுமில்லை
போகச்செலவுகொடும்போய்வருவேனச்சியென்றான்
வாசற்றடைக்காரர்வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசல்வாசலது அருச்சுனனுந்தாண்டிவந்தான்
முந்துசெம்பொற்படிவாசல்மூன்றுகட்டுந்தாண்டிவந்தான்
ஐந்தாம்படுதளத்தில் அர்ச்சுனனார்வந்துவிட்டார்
புலியாசனம்போட்டுப்பொற்படத்தைமுன்னேவைத்தான்
ஆசனத்தின்மேலிருந்து அல்லிபடம்தான்விரித்து
மான்செவியுங்கண்ணையுமறைந்தாரோமாயவனார்
கண்ணிரண்டுந்தெரியாமற்காதிரண்டுங்கேளாமல்
அல்லிமேற்சிந்தையாயருச்சுனன்புலம்பலுற்றான்
அல்லியென்பான்மெல்லிபென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான்
உன்னைக்கொண்டேனடியூராசைபோமறந்தேன்
தாயாரையான்மறந்தேன்தமயனதுபேர்மறந்தேன்
தம்பிதமயனைச்சகலரையும்யான்மறந்தேன்
உன்னைக்கொண்டுநானுழன்றுதிரிகிறேனண்டி
மன்மதபாணமதுமார்பைப்பிளக்குதடி
சித்தசன்விட்டகணைசிறுமார்புறுகுதடி
காமக்கணையாலேகளைகாங்கிப்போறேனண்டி
அஞ்சுருதுபாணமதுநெஞ்சுறுகிப்போகுதடி
ஆறுருகுபாணமதுமார்புருகிப்போகுதடி
மார்பாடேமார்பணைத்தால்மகாவிடாய்தீருமடி
என்றுதெளியுமோவெக்காலஞ்சொல்லுமடி
அல்லிமேற்சிந்தையாயருச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்றஆயிரந்தோழியர்கள்
அவ்வார்த்தைதான்கேட்டதிகவிகாரங்கொண்டார்
இதுவென்னக்காலக்கேடோவதறிவோம்தோழியரோ
பாங்கியிலும்நல்லதொருபவளசேனைதன்னருகில்
ஓட்டம்நடையுமாகஓடிவந்தார்தாதியர்கள்
பவளசேனைபக்கத்திலேபணிந்தவர்களேதுசொல்வார்
ஆரோஒருகிழவனாண்டிபரதேசியவன்

பிட்சையென்றுவந்தான்காண்போகவழிதான்விட்டோம்
அஞ்சாங்கட்டுவாசலிதுஅரண்மனையில்தான்வந்தான்
அல்லியைப்போலாகஅழகுடனெழுதி
உன்னையுங்கூடவேஒருமையாய்வைத்தெழுதி
வண்ணப்படம்விரித்துவல்லமையாய்ப்படிக்கின்றான்
அல்லியர்மேலாசையாயலைந்துபுலம்புகிறான்
வாடியென்றும்போடியென்றுமலம்புதும்புஞ்சொல்லுகிறான்
ஆடியும்பேசுகிறானழும்புகளுஞ்சொல்லுகிறான்
சொல்லுகிறவார்த்தையதுசெவிகேட்கமுடியாது
இவ்வார்த்தைகேட்டேதுசொல்வாள்பவளசேனை
அல்லிப்பெருமானைஅழகுயணைஞ்சூட்டவென்று
மாறுவேடங்கொண்டவனும்மாலையிடவந்தான்காண்
ஆண்டிபரதேசிபானலழும்புகளுஞ்சொல்வானோ
எல்லாமறிந்திடுவோயாரடிதோழிகளே
ஓரைந்துதாதிமார்கள்ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஒருநிறமாய்குழல்முடித்துஒருநிறமாய்ப்பட்டுடுத்தி
ஒருநிறமாய்க்குழல்முடித்துஒருநிறமாயலங்கரித்து
ஐந்துவிதப்பட்டுகளையலங்காரமாயெடுத்து
பொன்னொருகட்டிலேயும்பூவொருகட்டிலேயும்
ஆடையொருகட்டிலேயுமாபரணமொருகட்டிலேயும்
ஒன்பதுரத்தினமுமொருகட்டில்தானெடுத்து
பண்டாரமுன்னாலேபாங்கியரேகொண்டுபோய்
ஐயருக்குமுன்னேவந்துஅடிபணிந்துதெண்டனிட்டு
ஐந்துபெண்களிலேயார்வேண்டுஞ்சொல்லுமென்று
ஆபரணமுத்துவஸ்திரமாசையென்றெடுத்துக்கொள்ளும்
பெண்களின்மேலாசையென்றால்பின்தொடர்ந்துவருவோமென்று
ஐயருகேட்பதற்குவாரணங்கேபோங்களென்றாள்
அவ்வளவிலதோழிமாரதிகமுடனோடிவந்து
ஐந்துபேர்தோழிமார்களலங்காரஞ்செய்துகொண்டு
ஐந்துவிதக்கட்டினிலேயாபரணபூஷணங்கள்
முத்துகளும்வஸ்திரமும்முன்னாலேகொண்டுவந்தார்
ஐயாதுமுன்னேவைத்தடிபணிந்துதெண்டனிட்டார்
ஐயாபெரியவரேயடியேன்சரணமென்றார்
ஆச்சியருநானுனக்குஅனுப்பிவைத்தார்பூஷணங்கள்
ஐந்துபேருநானுனக்குஅனுப்பிவைத்தார்சங்கமரே
ஆசையுள்ளபெண்களைநீரழைத்தால்வருவோமையா
வேண்டுமென்றரத்தினத்தையெடுத்துக்கொள்ளுஞ்சங்கமரே
என்றந்தப்பெண்களுமேயிறங்கியேதெண்டனிட்டார்
ஆணலழகுமன்னனருச்சுனனுமேதுசொல்வான்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தலிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான்

எப்போவருவாளோஎன்னாசைதீர்ந்திடுமோ
மன்மதபாணமடிமார்புருகிப்போகுதடி
சித்தசனவிட்டகணைசிறுமார்புருகுதடி
காமக்கணைபாலேகணைதாக்கிப்போறேனடி
அல்லியல்லியென்றுசொல்லியலைகிறான்சங்கமனும்
கேட்டந்ததாதியருங்கிலேசங்கொண்டுதானடந்தார்
பவளசேனைதன்னருகில்பக்கத்தில்வந்தார்கள்
ஆச்சியுன்சொற்படிக்கைக்குப்பெண்கள்போனோமம்மா
அலங்காரத்தன்னுடனேயாபரணமுன்புவைத்தோம்
ஏதொன்றுங்கேட்கவில்லைஏறமுகம்பார்க்கவில்லை
அல்லியின்மேற்சிந்தைகொண்டலைகிறான்சங்கமனும்
அனேகநெடுநேரமதினாலலைந்துமேவந்துவிட்டோம்
இவ்வார்த்தைதான்கேட்டிளங்கொடியாள்பவளசேனை
எண்ணாதஎண்ணமெல்லாமெண்ணியிளங்கொடியும்
ஐயமென்றுவந்தவொருயாண்டிபரதேசியல்ல
கட்டினவிருகறுத்துக்கலியாணம்பண்ணவந்தான்
தேவனென்றுநாமறியோம்சிவனாருமென்றறியோம்
தன்மனதிலேயடக்கித்தானடந்தாளென்றறியோம்
அல்லிநல்லாள்பக்கம்வந்துயாணைக்குத்தெண்டனிட்டாள்
ஏதுபவளசேனையின்னாமவந்ததென்ன
வேர்க்கவிரிவிரிக்கவெண்துயிலுஞ்சோர்ந்துவிழ
உச்சியுருமத்திலுக்கமியங்குவந்தாய்
ஆச்சியரேகேட்டாபோஅதிசயமானந்தங்கள்
நாடுசுகப்படவேகாளச்சயாச்சியமோ
உனக்குவரும்பாக்கியங்களொருவருக்குந்தெரியாது
ஆதிசிவப்போலாண்டியின்கொருவர்வந்தார்
மடம்படிக்கும்பண்டாரம்பரமசிவன்போல்வந்தார்
மாணிக்கச்சொக்கலிங்கம்வந்தாற்போற்காணுதம்மாள்
சடையுஞ்சடைமுடியுந்தம்பிரான்போற்காணுதம்மா
கண்டுமறியேனம்மாயுலகத்தில்நானறியேன்
தோலுநரம்புகளுந்தொங்குங்கிழவனுக்கு
அஞ்சாங்கட்டுவாசலிலேஐயர்வந்திருக்கிறார்
தெரிசனம்பண்ணோமானாலதோஷவினைதீருமம்மா
பார்த்தாற்பசிதீரும்பண்டாரமானவரை
ஆச்சியெழுந்திரம்மாஐயனைப்போய்பாரு
என்றதுதான்கேட்டேதுசொல்வாளல்லியரும்
ஆண்காற்றடியாதவரண்மனைவாசலிலே
ஆண்டியிங்கேதான்வரவேபதிதமாச்சுதடி
ஆண்டிபரதேசியையமென்றுவந்தாலும்
கொடுத்தனுப்பலாகாதோகொம்பனையேயென்தோழி
எத்தனுடன்சொல்வானேனெழுந்திருந்தாதியென்றாள்

பாங்கிழியிலும்நல்லபவளசேனையேதுசொல்வாள்
பிட்சைகொடுக்கிறதுபெருமையென்றுபாராதே
நல்லோர்பெரியோரைநடந்துபோய்சேவித்தால்
காசிபோகவேண்டுமோகருமந்தொலையாதே
பெரியோரைச்சேவித்தால்பிழையொருக்காலுமில்லை
கைலாசநாதனைப்போற்காண்கிறதேன்ஆச்சியரோ
என்வார்த்தைதள்ளாதேயெழுந்திருப்போமென்றாள்
மருடத்துறைச்சியவள்வாழ்வரசியேதுசொல்வாள்
ஆண்டியனைப்பார்ப்பதற்குஅழைக்கிறாயென்தோழி
ஆணுமழகுமல்லாஅரிகிழவனானாலும்
என்னைக்-கண்டானேயாமாகில்காமங்கொளுத்திடுமே
பரிகாசஞ்செய்தாலேடாங்கியரேயென்னசெய்வேன்
வீரமணிவாளாலேவீசியெறிந்திடுவேன்
அப்படியேயாகுதம்மாஆச்சியெழுந்திருங்கள்
சிங்காசனத்தைவிட்டுதேன்மொழியாள்தானெழுந்தாள்
பட்டுபளபளென்னபாடகக்காற்சோதிமின்ன
நெற்றிசுட்டிகனிமின்னநீலவிழிமைதுலங்க
காற்பீலிகலகலென்னகைவளையல்பளபளென்ன
மூன்றானைகிலம்புரளமோதிரக்கால்சத்தமிட
தோழியரைத்தோளணிந்துதோகைநல்லாள்தானடந்தாள்
பாங்கியர்கள்தோழிமார்கள்பக்கம்புடைசூழ்ந்துவர
வாசலும்வாசலதுபடியேழுந்தான்தாண்டி
ஆண்டியிருக்குமந்தஅஞ்சாங்கட்டுவாசல்வந்தாள்
அல்லிவரும்போதுஅர்ச்சுனருமேதுசொல்வார்
என்னகாணல்லியரோஎப்போமனதிரங்கும்
என்றைக்குக்காணுவேனென்றுசைதிருமடி
மாரனவனெய்தக்கணைமார்பைபிளக்குதடி
சித்தசன்தொட்டகணைசிறுமார்புருகுதடி
மாலையிடுவதெப்போமருவியணைவதெப்போ
கூடியணைவதெப்போகுறைகளெல்லாந்தீர்வதெப்போ
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான்
கட்டழகியல்லியவள்காதாரக்கேட்டுவிட்டாள்
உருகியசெம்பொனதுஉதிரம்போற்கண்சிவந்து
பிறந்துவளர்ந்துநான்பூமியரசாண்டிருந்தேன்
நீண்முகனைக்கொன்றுநீலிபட்டமாண்டேனே
வாடியென்றழைத்தவர்கள்வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்களவனியிலொருவரில்லை
ஆண்டியதுவாயாலேஅலைச்சல்படாளாச்சே

எடுத்துவாபெரியகத்திஇருதண்டம்போடவென்றாள்
எடுபெரிசைபெரியகத்திஎடுத்துவாதாதியென்றாள்
பாங்கிலும்நல்லபவளசேனையேதுசொல்வாள்
பாண்டிப்பெருமாளேபதறாதேயாச்சியென்றாள்
அப்படியேகொண்டுவந்து ஆச்சியருகேவைத்தாள்
கண்ணாடியெதிர்வைத்துக்கண்டாள்படத்தழகை
தன்னழகும்படமழகும்சரியாகத்தோன்றியது
என்னழகும்பாவனையும் எங்குகண்டெழுதினானோ
உச்சிசுழியழகும்ரோமத்தின்பேரழகும்
மயிரழகுபாவனையும்மாபாவியெங்குகண்டான்
முகத்தின்திருவழகைமூதேவியெங்குகண்டான்
கண்ணின்விழியழகைகழுசிறையெங்குகண்டான்
பவளம்போல்வென்னிதழும்பல்லழகுமெங்குகண்டான்
இடையழகுந்துடையழகும்யேனாதியெங்குகண்டான்
ஆபரணந்தன்னழகுமாடைத்துயிலழகும்
வடிவழகுமொப்பனையுமாபாவியெங்குகண்டான்
என்னையெழுதிவந்ததல்லாமலென்றோழி
உன்னையுங்கூடவவனுடனாயெழுதிவந்தான்
எடுத்துவாபெரியகத்தியிருதுண்டாய்ப்போடவென்றாள்
பக்கச்சதைகளெல்லாம்பதைக்கிறதேயல்லியற்கு
பாங்கியிலும்நல்லதொருபவளசேனையேதுசொல்வாள்
ஐயமார்பட்டதொருஅடைவுபோலாகுமிது
பாண்டியர்கள்பட்டதொருபகலம்போலாகுமிது
ஆண்டியைவெட்டினாலேயாரார்தலைபோமோ
அந்தக்கதையையெனக்காரணங்கேசொல்லுமென்றாள்

பவளசேனைபாண்டியர்களடைந்ததுன்பத்தை

அல்லியரசாணிக்கு கதையாக்கூறினது.

வைகைப்பெருக்கெடுத்துமாவெள்ளம்போகையிலே
ஆராலும்வைகைதனையடைக்கமுடியாமல்
பாண்டியராசாக்கள்பகுந்துக்கைபோட்டார்கள்
ஆணாய்ப்பிறந்தவர்களரைநாண்கயிர்கட்டினவர்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள்புடவையுடுத்தினபேர்
அவரவர்க்கொருபங்கு அளந்துகளைபோட்டார்கள்
அவரவர்பங்குக்கு அடைத்தார்கள்வைகைதன்னை
அண்ணாடம்பிட்டுசுட்டுஔவையார்வீற்றிருப்பாள்
அவளுக்கொருபங்குமல்லோ அளந்துகளைபோட்டாகள்
பங்குக்காளில்லாமல்பரதவித்துத்தானழுதாள்
மண்ணுஞ்சுமக்கறியாள்மனஸ்தாபப்பட்டழுதாள்
வாணியக்கிழவியவள்மனத்துயரமாகையிலே
மாணிக்கச்சொக்கலிங்கம்மகாதேவர்தாமறிந்தார்

அட்டாளும்சொக்கலிங்கம் ஆதிசிவன் தானறிந்தார்
ஔவையார்மனத்துயரமாயாசந்தீர்க்கவென்று
ஒட்டனைப்போலாகஉலகளந்தார்மைத்துனரும்
கன்னங்கருத்தவர்போற்கர்த்தாவடிவெடுத்தார்
தட்டுத்தலையில்வைத்துசெகக்கோலைக்கைபிடித்து
மண்வெட்டிதோளில்வைத்துமகாதேவர்வாராரோ
மதுரைத்தெருவீதியிலேவந்தாரோசொக்கலிங்கம்
அப்போதுசொக்கலிங்கம்மாதிசிவன்கூறிவாரார் [ளாய்
மண்ணெடுப்பேன்சுவர்வைப்பேன்வைப்பீரோகூலியா
மண்ணெடுப்பேனுறடைப்பேன்வைப்பீரோகூலியாளா
என்றுசொல்லியல்லோயீஸ்வரனார்கூறிவாரார்
கூறியவர்வந்தாரோகொடிமதுரைவீதியிலே
ஔவையார்தன்னருகிலாதிசிவன்வந்துவிட்டார்
ஆரடாவொட்டாநீயன்புடனேகேளுமென்றாள்
அன்னுடைம்பிட்டுசுட்டுஅங்காடிவிப்பேனடா
நூற்றொருபிட்டுசுட்டாலொருபிட்டுதிருடமடா
உதிர்ந்ததோர்பிட்டுனக்குவுத்தமனேநான்றருவேன்
மண்ணெடுத்தாறடைச்துவருவாயோமன்னவனே
உதிர்ந்துபோகும்பிட்டையெல்லாம்உத்தமனேநான்றருவேன்
சத்தியந்தப்பாமல்தருகிறேன்போமென்றாள்
பிட்டுகுலைகட்டுமம்மாபோயடைத்துவாரோனென்றான்
ஔவையாருந்தாமெழுந்துஅடிப்பூதிதீமூட்டினாளே
பிட்டுக்குலைகட்டியல்லோபோதச்சமைக்கலுற்றாள்
இருபதுபிட்டுசுட்டெடுத்தாளேகூன்கிழவி
இருபதுபிட்டுகளுமெல்லாமுதிர்ந்தனவே
ஓட்டம்நடையுமாகஓடிவந்தார்சொக்கலிங்கம்
காலாறடைத்துவந்தேன்கன்னிபசிக்குதென்றார்
சுட்டீராபிட்டுகளைச்சொல்லுமுதிர்ந்ததுண்டோ
இருபதுபிட்டுசுட்டேனெல்லாமுதிர்ந்ததடா
எனக்கென்றெங்கிருந்தாயிடழிவாணொட்டாநீ
இந்தாருமென்றுசொல்லியீந்துவிட்டாள்பிட்டதனை
குறையாறடைத்துவாறேன்கொப்பெனவேபிட்டுசுடும்
புறக்கடையிற்போவாரும்புன்னைமரத்தடியிருந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம்கொப்பெனவேயுண்டுவிட்டார்
ஒருநாழிகைதரித்தோடிவந்தார்சொக்கலிங்கம்
அறையாறடைத்துவந்தேனுச்சிபசிக்குதென்றார்
சுட்டீரோபிட்டுகளைசொல்லுமுதிர்ந்ததுண்டோ
ஐம்பதுபிட்டுசுட்டேனனைத்துமுதிர்ந்ததடா
இந்தாருமப்பாவென்றெடுத்துகொடுத்துவிட்டாள்

வாங்கியந்தபிட்டதனை வழிநடந்தார்சொக்கலிங்கம்
கொன்றைமரத்தடியிற்கொண்டுவந்துதான்புசித்தார்
ஈறரைநாழியென்றெழுந்தவருமோடிவந்தார்
மார்மேலுந்தோள்மேலும்மண்வாரிபோட்டுக்கொண்டார்
முக்காலாறடைத்துவந்தேன்மெத்தபசிக்குதம்மா
சுட்டீரோபிட்டுகளுஞ்சொல்லுமுதிர்ந்ததுண்டோ
நூற்றொருபிட்டுகளுஞ்சுட்டாளேகூன்கிழவி
ஒருபிட்டுத்தான்தவிரமற்றபிட்டுதிர்ந்தனவே
உதிர்ந்திருந்தபிட்டையெல்லாம்உத்தமனார்கைகொடுத்தார்
வாங்கியந்தசொக்கலிங்கம்வழிநடந்தார்மெல்லெனவே
குருந்தமரத்தருகேகொப்பெனவேவந்தமர்ந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாங்கொப்பெனவேயுண்டுவிட்டார்
தலைக்குயரந்ததட்டுவைத்துச்சங்கரனார்பள்ளிகொண்டார்
ஆனந்தநித்திரையாயாதிசிவன்போனாரோ
ஒருபிட்டுவிற்றாளேஉத்தமியாள்கூன்கிழவி
நூறுபிட்டுலாபமதைநேருடனேகண்டுகொண்டாள்
ஆறாயிரம்பாண்டியருமையமார்வந்தார்கள்
வையைக்கரைபார்த்துவருங்கையிலேபாண்டியர்கள்
கொஞ்சமாய்சலம்பெருகிக்குறையாறுவருகிறது
கண்டந்தப்பாண்டியருங்கடிதானகோபமுடன்
ஆருகடாபங்கிதுதானடைக்காமல்போனதென்ன
எவருதடாபங்கிதுதானே துக்கடைக்கவில்லை
பிட்டுவிற்கும்வாணிச்சிபொற்கொடியாள்பங்கிதுதான்
ஆள்பேரும்சேவகரும்அதிவிரைவாயோடிவந்தார்
ஒளவையாரைத்தானுமங்கேயழைத்துவந்தாராசரண்டை
வந்துமேதெண்டனிட்டான்வாழ்பாண்டிராசருக்கு
வாடிநீகூன்கிழவியாசக்கன்னிஒளவையாரே
அவரவர்கள்பங்குதனையடைத்தார்கள்வைகைதனை
உன்பங்கையடையாமற்போனதென்னகூன்கிழவி
ஆரோஒருவொட்டனையாறடைப்பேனென்றுசொல்லி
நூறுபிட்டுவாங்கித்தின்றுநேராயடைப்பேனென்றான்
பிட்டுதின்றபாவியைத்தான்பின்வரக்காணேனே
ஆறடைத்தானென்றிருந்தேனன்னீதம்பண்ணிவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறாயிரம்பாண்டியர்கள்
ஆரடாசேவகரோஅவனைப்பிடியுமென்றார்
தேடிப்பிடியுமென்றார்சீரானஒட்டனைத்தான்
அப்போதுசேவர்களாராய்ந்துதேடலுற்றார்
மதுரைத்தெருவுகளும்வனங்களும்தோப்புகளும்
தேடிவருகிறார்கள்சீரானஒட்டனைத்தான்
மரத்தடிப்பள்ளிகொண்டமன்னவனைக்கண்டார்கள்

கண்டுபிடித்தவர்கள் கடுகெனவேகூட்டிவந்தார்
பாண்டியராசாக்கள் பார்த்தவருங்கோபமதாய்
வாணியக்கிழவியைநீ வகைமோசம்செய்தாயோடா (டு
ஆறடைப்பேனென்றுசொல்லிப்பிட்டெல்லாந்தின்றுவிட்
மண்ணெடுத்துப்போட்டுநீ வைகையையடையுமென்றார்
தட்டிலேமண்வரத் தலையிலெடுத்துக்கொண்டு
அடிமேலடிவைத்துமல்லோ அஞ்சிநடைநடக்க
ஆதிசிவனென்றறியாமற்பாண்டியர்கள்
பிட்டுதின்றமயக்கத்திறற்போகமனம்வல்லையடா
என்றுசொல்லிபாண்டியர்ஈஸ்வரனைதானடித்தார்
பாரம்பிரம்பாலேபாண்டியரடித்துவிட்டார்
அடிபட்டுசொக்கலிங்கம் அம்மண்ணைப்போட்டுவிட்டார்
ஆறுமடைத்தவரரூபியாய்ப்போய்மறைந்தார்
ஆறாயிரம்பாண்டியர்க்குமடிதுடையிற்பட்டதுவே
ஆறுமாதம்பிண்டத்துக்குமந்தவடிபட்டதுவே
எறும்புகடையானவுயிரொண்ணாயிரசீவனுக்கும்
அத்தண்டசீவனுக்குமந்தவடிபட்டதம்மா
அப்படிபோலாகுமிது அல்லியம்மாமிஞ்சாதே
ஆண்டியனைக்கொன்றாக்காலாரார்தலைபோமோ
உன்கையாலேகொல்லாதேகட்டழகிசங்கமனை
கொல்வானைவிட்டுமல்லோகொல்லவிடுசங்கமனை

ஆண்டியை சர்ப்பங்களால் கொல்ல நினைத்தது.

பாம்புகளைக்கொண்டுவந்துபகரவிஷமேற்றி
சர்ப்பங்களைவிட்டுநீசங்கமனைக்கொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டல்லிப்பெருமாளும்
ஆரடிதாதிகளேயலங்காரத்தோழிகளே
பாம்புப்பிடாரர்களைப்பார்த்தோடியழையுமென்றாள்
ஓட்டம்நடையுமாகஓடியழையுமென்றாள்
பாம்புப்பிடாரப்பெண்ணேபத்தினிமாரானோர்களே
அல்லிப்பெருமாளுமழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களென்றுசொல்லிவரவழைத்தார்தாதியர்கள்
அவ்வார்த்தைதான்கேட்டந்தப்பிடாரப்பெண்கள்
மகுடிக்குழலூதிமகாவிருதுகட்டினார்கள்
பாம்புபெட்டிதோளில்வைத்துப்பிடாரப்பெண்கள்வாரார்கள்
வீதியும்வீதியதுதெருவும்பலகடந்து
அல்லியம்மாள்வாசலிலேஅனைவோரும்வந்தார்கள்
மகுடத்துரைச்சியர்க்குவந்துதெண்டம்பண்ணினார்
எங்களையழைத்தவகையேதுவகைசொல்லுமென்றார்
உங்களையழைத்ததுதானென்றார்குறைவுமில்லை

காட்டுக்குப்போங்களடிகன்னிபுற்றுமருந்துவைத்துங்
கருநாகஞ்செந்நாகங்கார்க்கோடகம்பாம்புகளை
மண்ணுளிபாம்புகளும்மலைவிரியன்தாசிரியும்
மட்டில்லாப்பாம்புகளைவகையாய்ப்பிடித்துவாரும்
ஆண்டியைக்கொல்லவேணுமதிதுரிதாய்வாருமென்றாள்
உச்சிதங்கள்வேணமட்டும்உங்களுக்குயான்றருவேன்
பாம்புப்பிடாரப்பெண்கள்பாங்குடனேபோகலுற்றார்
அத்துவானகானகங்களாரணியம்வந்தார்கள்
புற்றுக்குமருந்துவைத்தார்பெரும்பாம்புதான்பிடிக்க
மந்திரத்தைச்சொல்லியவர்மகுடிக்குழலூதினார்கள்
புற்றீசல்போலாகப்புறப்பட்டதுபாம்புகளும்
கருநாகஞ்செந்நாகம்கறுத் நிறப்பாம்புகளும்
ஆடிவரும்பாம்புகள்தானமர்ந்ததேபெட்டியிலே
சீறிவருகின்றசெந்நாகமுள்ளதெல்லாம்
மட்டில்லாப்பாம்புகளைவகையுடனேதான்பிடித்தார்
காவடியைத்தோளில்வைத்துக்கடுகியேவாரார்கள்
விருதுகளைக்கட்டிக்கொண்டுமகுடிக்குழலூதிவாரார்
காடுசெடிதாண்டிகடுகிவந்தார்தென்மதுரை
செட்டித்தெருதாண்டிதேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடையஅரண்மனைக்குள்வந்தார்கள்
வாசலும்வாசலதுஎழுகட்டுந்தாண்டி
பத்தினிக்குத்தெண்டனிட்டுப்பாம்புகளைமுன்னேவைத்தார்
வகைக்கொருபாம்பாகமாதேநாம்கொண்டுவந்தோம்
கொண்டுவந்தோமாச்சியென்றுகொம்பனைக்குத்தெண்டனிட்டார்
மகுடத்துரைச்சியவள்மாதருமேதுசொல்வாள்
ஆர்பெண்கள்தாதிகளேயலங்காரத்தோழியரே
பாலும்பழமுமாபாம்புகட்குவையுமென்றாள்
அபினிமருந்துக்குமன்பானசாராயமும்
முட்டையுடைத்துமல்லோமுன்னாலேவையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள்கொம்பனைமார்பாம்புகட்கு
அத்தண்டபாம்புகளும்ஆகாரமுண்கிறது
கண்கள்செவக்கிறதேகாந்தாளமாயினதே
அவ்வலரிகண்களெல்லாம்செவ்வலரிப்பூத்ததங்கே
பாம்புகளைப்பார்த்துமல்லோபத்தினியாளேதுசொல்வாள்
அங்கயற்கண்ணம்மையருளாலேயான்பிறந்தேன்
பட்டமுஞ்செங்கோலும்பாதிநாடாளுகிறேன்
வாடியென்றும்போடியென்றும்வம்புசொன்னாருமில்லை
ஆண்டியிடவாயாலேயலைச்சல்படுகிறேனே
சாதிகெட்டபண்டாரந்தாறுமாறும்பேசுகிறான்
என்-அங்கமுருகிறதேயாவிதணலாகிறது
சென்மமுருகிறதுசிந்தைதணலாகுதம்மா

பண்டாரமானவனைப்பத்தினியேசொல்லுமென்றாள்
கும்பிட்டுதெண்டனிட்டாள்குளமுள்ளபாம்புக்கு
அல்லியுரைகேட்டதண்டபாம்புகளும்
செந்நாகமுள்ளதெல்லாம்சீறியெழுந்தனவே
கருநாகமுள்ளதெல்லாம்கதறியெழுந்தனவே
இருதலைப்பாம்புகள்தானெழும்பிவருகுதங்கே
மூன்றுதலைநாகமல்லோமூடிவருகிறதே
ஐந்துதலைநாகமெல்லாம்மதிர்ந்துவருகிறதே
சீறிவருநாகமெல்லாம்தேர்விஜயனைப்பார்த்து
ஓடிவரும்பாம்பனைத்துமர்ச்சுனனைக்கண்டதுவே
ஆணழகுமன்னனருச்சுனராஜனென்று
மின்னழகும்பின்னழகும்முதுகிலேமச்சங்களும்
பல்லிற்பரசவிணைபாதத்தில்செந்தாமரைப்பூ
மீசைமுறுக்கழகும்விழிநல்லபார்வைகளும்
அவரழகைதான்பார்த்துஅருச்சுனனென்றறிந்து
நாககன்னிமணவாளன்நல்விசையராசனெல்லோ
தருமராதம்பியரும்தனஞ்செயனர்ச்சுனர்காண்
வெற்றிமதயானைவீமருக்குதம்பியல்லோ
மாயராதுமைத்துனர்காண்வாள்விசையனிவர்காணும்
அல்லியரைமாலையிடஆண்டிகோலமானாரே
மாலையிடவேணுமென்றுவேடங்கொண்டுவந்தாரோ
மாப்பிள்ளையைக்கொல்லவென்றுமருந்திட்டாளல்லியரும்
கணவனைக்கொல்லவென்றுகட்டழகிமருந்திட்டாளே
அல்லியதுவார்த்தைக்கேட்டு அர்ச்சுனனைக்கொன்றுவிட்டால்
பொற்கொடியாள்நாககன்னிபோகச்சிறையாவாள்
கனமோசம்வந்துவிடும்கன்னிசெய்தகாரியங்கள்
செல்வமருமகனுக்குச்செங்கானல்வீசுதென்று
வெய்யலுறைக்குதென்றுவெங்கானல்வீசுதென்று
ஐந்துதலைநாகம்வந்துஅருச்சுனர்க்குகுடைபிடிக்கும்
மூன்றுதலைநாகம்வந்துமுடிமேற்குடைபிடிக்கும்
தோள்மேலேயேறுவதும்தும்பிப்பறப்பதுவும்
கீதங்கள்பாடுவதும்கொண்டானடிப்பதுவும்
அரும்பவனிகூத்துகளுமாடுஞ்சிலநாகம்
மகுடத்துரைச்சியவள்மாதரும்பார்த்துவிட்டாள்
பாம்புமயங்கவேதான்பாவிமருந்துவைத்தான்
வானஞ்சுழல்வதற்குமருந்துண்டோஇவன்கையில்
பூமிசுழல்வதற்குபொடியுண்டோமிவன்கையில்
என்னைமயக்கவொருமருந்தறியமாட்டானோ
யார்காணுந்தாதிகளேயலங்காரத்தோழிகளே
வெள்ளிப்பிரம்பாலேவீசுங்கள்பாம்புகளை

யாரப்பிரம்பாலேடாம்பையடியுமென்றாள்
அப்போதுசர்ப்பமெல்லாம்அல்லியணாப்பார்த்துணாக்கும்
தாதிமாரப்பொழுதுசவுங்கெடுத்துவீசலுற்றார்
மாறியடிக்கலுற்றார்வண்ணவிதப்பாம்புகளை
மாப்பிள்ளைநீயுமாமணமுகூர்த்தஞ்செய்கையிலே
அன்னவுஞ்சலாடுதற்கழைத்தால்வருவோமோ
என்றெந்தப்பாம்புகள்தானெகிரிப்பறந்ததுவே
பாங்கிலும்நல்லதொருபவளசேனைநீகேளு
எந்தவிதத்தினாலேகொன்றிடுவோமென்றோழி
பண்டாரந்தன்னைக்கொல்லப்பக்குவஞ்சொல்லுகிறோம்
ஆனால்கேளாச்சியரோ ஆலோசனைசொல்லுகிறேன்
நீபிறக்கத்தவசுபண்ணநீதியுள்ளகாட்டானை
யானையையழைத்துவந்து அனந்தமயக்கமேற்றி
கொல்லவிடலாமோகொம்பனையேசங்கமனை
அவ்வார்த்தைதான்கேட்டல்லிமனமகிழ்ந்து

யானையினாலாண்டியைக் கொல்லவகைதேடினது.

*

ஆரடிதோழிகளேயலங்காரத்தாதிகளே
காட்டானைதன்னைநீங்கள்கடுகஅழையுமென்றாள்
ஆச்சியரோநீர்கேளுமடியேனொருவார்த்தை
நீபிறக்கத்தவசுபண்ணநீதியுள்ளகாட்டானை
வெறித்துத்திரிகிறதேவெங்கானகந்தனிலே
கன்னிழலைத்தான்பார்த்துதன்மதம்பொழிகின்றது
கொம்பினால்மலையையல்லோகுத்திப்பிளக்கிறது
மலைகள்பர்வதங்கள்மண்ணோடேசாய்த்துவிடும்
மனிதனைக்கண்டாலேவாரியறைந்துவிடும்
மதப்பட்டுத்திரியுதம்மாயிலணையேயவ்வானை
எங்களைக்கண்டாலேயெடுத்துஅறைந்துவிடும்
செத்துமடிந்திடுவோம்சிவலோகஞ்சேர்ந்திடுவோம்
சென்றோமேயாமாகில்திரும்பிவருவதில்லை
இவ்வார்த்தைதான்கேட்டேதுசொல்வாளல்லியரும்
கணையாழிமோதிரத்தைக்கழற்றிக்கொடுத்தாளே
முத்திரைமோதிரத்தைமொய்குழலேகொண்டுநீங்கள்
யானையின்முன்னேவைத்துஅடிபணிந்துதெண்டனிட்டு
நீ-பெற்றமகளல்லியம்மாள்புலம்பியழுகிறாளே
உன்னைப்-பார்க்கமனதாகப்பத்தினியாளிருக்கிறாளே
அழைத்தோடிவாருமென்றுசொன்னாளேயல்லியம்மாள்
கணையாழிகாட்டியல்லோகடுகவழைத்துவாருமென்றாள்
ஓட்டம்நடையுமாகஓடுங்கள்தாதியென்றாள்
மத்தகஜந்தான்பிடிக்கும்மாவெட்டிப்பெண்கள்வர
கணையாழிவாங்கியவர்கடுகநடந்தார்கள்
தங்களதுமாளிகையிற்சடுதியிற்போய்நுழைந்து

புத்திரரானவர்க்குப்புத்திமிகவுரைத்து
மத்தகீஜந்தான்பிடிக்கமகாவனம்போனுமே
சாவோமோபிழைப்போமோசாமிசெயலெப்படியோ
பிழைத்துவந்தோமானல்பிள்ளைமுகம்பார்ப்போம்
இல்லாமற்போச்சுதானல்ஈசன்பதஞ்சேருகிறோம்
பிள்ளைகளைகூட்டிவந்துபெரியோர்கையிலொப்பிவித்து
வாய்க்கரிசிவாங்கிமலைதனிற்போகலுற்றார்
மதுராபுரந்தாண்டிமலைதனிற்போகலுற்றார்
காடுசெடிகளெல்லாங்கடிகியேதேடலுற்றார்
இருண்டவனங்களெல்லாமெங்கெங்குந்தேடலுற்றார்
மலையோரம்படுத்திருந்தமதயானைகண்டதுவே
யானையதுவீறிட்டலங்காரமாயெழுந்து
சன்னிமலைதான்பார்த்துதரையில்நடக்குமது
கொம்பால்மலையைக்குத்திக்கிளம்பிற்றுயானையது
கண்டுபயந்தார்கள்கட்டழகிப்பெண்களவர்
யானையைக்கண்டுமெவரடிபணிந்துதெண்டனிட்டார்
கணையாழிமுன்போட்டுக்கன்னிமாரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளுமாரணங்குநாயகியாள்
நீங்கள்-தவசுபண்ணிபெற்றதொருதையனல்லாளல்லியரும்
உன்னைக்காணவிருப்பமாகிகலங்கித்தவிக்கிறாளே
பார்க்கமனதாகிப்பதைத்துப்புலம்புகிறாள்
போசனம்பண்ணாமற்புலம்பித்தவிக்கிறாள்காண்
உண்ணாளுடுக்காளொருபொழுதுநீராடாள்
படுக்கைப்பொருந்தாளேபத்தினியாளல்லியம்மாள்
அழுதக்கண்சிந்தையுமாயழைத்தோடிவருமென்றாள்
நீ-வாராமற்போனுக்கால்மாண்டுவிடுவேனென்றாள்
செத்துமடிவேனென்றாள்செலவழிந்துபோவேனென்றாள்
கடுகெனவேவாருமென்றுகையெடுத்துதெண்டனிட்டார்
கேட்டந்தமதயானைகெர்ச்சித்துதான்வருமாம்
யானைவரும்போது அழகானதாதியர்கள்
தெத்துத்தெருதாண்டிதேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னருகேயாரணங்குமோடிவந்து
யானைவருகுதென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
மதுரைத்துரைச்சியவள்மாதுகன்னிதான்கேட்டு
கரும்புசுமைகளைத்தான்கட்டுகட்டாய்வையுமென்றாள்
தென்னமட்டைவாழமட்டைதோழிகளேவையுமென்றாள்
பச்சரிசிதேங்காயும்பாங்கிகளேவையுமென்றாள்
ஐங்கலச்சாராயமுமருகலமெட்டிகொட்டை
கெஞ்சாவபினிகளும்கொண்டுவந்துவையுமென்றாள்
இடிமருந்துபாஷாணமிளங்கொடியேவையுமென்றாள்

கொண்டுவந்துவைத்தார்கள்கொம்பனையாள்முன்னிலே
வாழ்மதுரைபட்டணத்தில்மத்தகசம்வருகிறதாம்
யானைவருகுதென்று அம்மதுரைபட்டணத்தார்
மதுரைக்குடிபடைகள்மாளிகையிற்போய்நுழைந்தார்
ஓடியொளிப்பார்களுத்தமரானவர்வள்
அப்போதுமத்தகஜம் ஆங்காரமாய்நடந்து
தெத்துதெருகாண்டிதேரோடும்வீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவும்கருமாரவீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடையஅரண்மனையில்வந்தார்கள்
யானையைக்கண்டவுடனல்லியெழுந்திருந்து
மத்தகஜமுன்னேவந்துவணங்கியேதெண்டனிட்டாள்
யானைக்குமுன்பாக ஆகாரம்வைத்தார்கள்
வயிராரவுண்டதுவேமயக்கம்பெரிதாச்சே
கண்கள்செவந்தனவேகனமயக்கம்கொண்டதுவே
அல்லிபெருமாளுமடிவணங்கியேதுசொல்வாள்
நான்பிறக்கவேணுமென்றுநல்லதவஞ்செய்தார்களே
நீங்கள்-தவசுபண்ணிபெற்றமகள்தடுமாறிநின்றுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலேயெதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலையறுத்துவீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான்நீலிபட்டமாளுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள்வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்கள்யாருமில்லைபூமியிலே
ஆண்டியுடவாயாலேயலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரந்தாறுமாறாய்ச்சொல்லுகிறான்
சொல்லாதுஞ்சொல்லுகிறான்சென்மமுருகுதம்மா
பொருத்துமுடியவில்லைபெரும்பாவிசொன்னதெல்லாம்
செல்வம்குலைந்துதம்மாசீரழிந்துநின்றுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்குஅழைப்பித்தேனுச்சியென்றாள்
அல்லியதுவார்த்தைகேட்டுஆங்காரக்கோபமுடன்
கண்சிவந்துமத்தகசங்காளையரைக்கொல்வதற்கு
தும்பிக்கையைதூக்கியல்லோசுற்றியறையவரும்
முதுகில்மட்சரேகைகளும்முன்னழகுங்கண்டதுதான்
மட்சவடிவுகண்டுமயங்கிற்றுஅப்போது
மட்சரேகைப்படைத்தவர்கள்மண்டலத்திலாருமில்லை
அருச்சுனனொருவனல்லால்அவனியிலேயாருமில்லை
வாழ்விசையனல்லாமல்மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகன்காண்திருமாற்குமைத்துனன்காண்
துரௌபதையைமாலையிட்டநேர்விசையன்யிவர்காணும்
அல்லியரைக்கண்ணமிட ஆண்டிகோலமாகிவந்தார்
மாப்பிள்ளையைக்கொல்லவென்றுமருந்துயிட்டாள்மாபாவி

கணவனைக்கொல்வதற்குக்கனத்தமருந்திட்டாளே
அல்லிதீன்வார்த்தைகேட்டுஅர்ச்சுனனைக்கொன்றுவிட்டால்
ஆயர்பெருமாளும்அறிந்தால்பழுதுவரும்
வீமனறிந்தாலேவெகுமோசம்நேர்ந்துவிடும்
அல்லியர்க்கேற்றதொருஅழகுள்ளபுருஷனிவன்
மகளானைமாலையிடவையகத்திலாருமில்லை
செல்வமருமகன்தானலேச்சல்படுவானேன்
அருமைமருமகன்தானலேச்சல்படுவானேன்
தும்பிக்கையாலேதான்சுழற்றியெடுத்துக்கொண்டு
கும்பஸ்தனத்தில்வைத்துகூத்தாடும்யானையது
கண்டாளேயானைதன்னைகண்கொள்ளாகோபமுடன்
மதயானைத்தான்மழுங்கமருந்தரிவான்பாவியிவன்
காட்டானைதான்மயங்ககனமருந்தறிவாண்டி
என்னைமயக்கும்வகையிவனறியமாட்டானே
ஆரடிதாதிகளேயடியும் ஏள்யானைதனை
மாறியடியுமென்றாள்மதயானைதன்னையவள்
அப்போதுமத்தகஜம்அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாப்பிளையுநீயுமாகமணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும்வந்திழையேவருவேனே
வேண்டியழைத்தாலும்வருவேனேமெல்லியரே
என்றுநடந்ததுவேஇருண்டவனங்களுக்கு
மதயானைபோனபின்பு மாயவரோதுசெய்தார்
மான்செவியுங்கண்கள்ரெண்டுமாயவனுர்தெரியவைத்தார்
கண்ணுந்தெரிகிரதே காதிர்ண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளுமாரணங்கேதுசொல்வாள்
பாங்கியிலும்நல்லவளேபவளசேனைநாயகியே
இந்தக்கிழவனைத்தான்என்னசெய்வேன்தோழியென்றாள்
செல்வங்குலையுதடிதேன்மொழியேயென்னசெய்வேன்
பாண்டிப்பெருமாளேபதறுதேசற்றேநில்லும்
அறிந்துநான்வந்துஆச்சியரேசொல்லுகிறேன்
தெரிந்துநான்வந்துமல்லோசொல்லுகிறேனுந்தனுக்கு
திடுக்கென்றெழுந்துதோழியரும்வருகிறாளே
சங்கமனரருகில்வந்துதையலருமேதுசொல்வாள்
ஐயாபெரியவரேஅறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரேதெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தவசுபண்ணிபுத்திமிகக்கற்றவரே
எங்கிருந்துவந்தீர்காணிங்கேபுலம்புகிறீர்
ஏதுவகையாகஇங்கேவந்தீர்சொல்லுமையா
ஆர்காணுமாச்சியரேயருகில்வந்துகேட்கிறது
மல்லிகார்ச்சுனமிருந்துவந்தேனிதுவழியாய்
துங்கபத்திரிகோதாவரிதுய்யகிருஷ்ணாநதியுடனே

கேதாரஞ்சரஸ்வதியும்ஸ்தானங்களாடிவந்தேன்
பாராஸ்தளங்களில்லைபணியாதகோவிலில்லை
முழுகாததீர்த்தமில்லைமிதியாதகோவிலில்லை
புண்ணியகோடிதீர்த்தமாடிப்போரேனம்மாராமேசுரம்
மதுரைநகரம்வந்துவைகைதீர்த்தமாடினேன்யான்
பிட்டுக்குமண்சுமந்தபித்தரையுந்தெரிசித்தேன்
நூறுபத்துஞ்சென்றதம்மாஙிகரானஎன்வயது
தோலும்நரம்புகளும்தொங்குதுபாரெந்தனுக்கு
இப்போதுபின்னையோஇன்னமறைநாழிகையோ
எப்பவோயென்சடலம்பிறப்பதுயானறியேன்
அல்லிப்பெருமாளும்அரசாளும்நாயகியாள்
கன்னிகையென்றார்கள்கட்டழகியல்லியரை
பத்தினியாளென்றுவெகுபேர்களுஞ்சொன்னார்கள்
ஆகையினாலேதாஆரணங்கைதேடிவந்தேன்
எங்கள்-முப்பாட்டனாளையிலேதைத்தபழஞ்சோளி
அட்சயபாத்திரந்தானடிப்பீறலாச்சுதென்று
சோளிக்குபழஞ்சேலைகேட்கவந்தேன்சுந்தரியே
உடுத்திக்கிழித்திருக்குமுள்ளாடையொருமுழந்தான்
எனக்குமவள்தந்தாலேஎழுந்திருந்துபோவேனம்மா
அவ்வார்த்தைதான்கேட்டுஆரணங்குவந்துவிட்டாள்
அல்லியர்க்குதெண்டனிட்டுஅன்புடனேதுசொல்வாள்
ஐயாபெரியவரேஆயாசப்பட்டவரே
அவர்-முப்பாட்டனாளையிலேதைத்தபழஞ்சோளியம்மா
அட்சயபாத்திரந்தானடிப்பீறலாச்சுதம்மா
சோளிக்குப்பழஞ்சேலைகேட்கிறார்சுந்தரியே
பிச்சைகொடுத்தனுப்பும்போய்விடுவான்சுவாமியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டுஅரசிதுரைநாயகியாள்
அறுபதுமுழப்புடவைஅழகானபச்சைவடம்
எடுத்துக்கொடுங்களடிஇரக்கமில்லாபாவியர்க்கு
நச்சுநச்சென்கிறதுநரைக்கிழவன்போராட்டம்
எப்போதுதான்தொலையும்எடுத்துக்கொடுங்களென்றாள்
ஓட்டம்நடையுமாகஓடிவந்தார்தாதியர்கள்
சேலைவடங்கொண்டுவந்துபண்டாரமுன்னேவைத்தார்
ஐயாபெரியவரேயறிவைப்படைத்தவரே
சோளிக்குப்பழஞ்சேலைசுந்தரியைக்கட்டீரே
முப்பதுமுழம்புடவைமுன்னேவைத்தோமெடுத்துப்போம்
ஆர்காணுமாச்சியரேஆரங்குநீர்கேளும்
இப்படிக்குவேணுமானால்எனக்குமநேகமுண்டு
நாட்டிலேநான்குலட்சம்நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாள்கட்டினதோர்பாவாடையுள்ளாடை
உள்ளாடைசேலைதனிலொருமுழம்வேண்டுமென்றார்

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருங்கோபங்கொண்டு
இப்படிக்குபிச்சைகேட்டோருண்டோவுலகுதனில்
பாங்கியிலும்நல்லதொருபவளசேனையேதுசொல்வாள்
ஆச்சியரோயுந்தனுக்கு அதனாற்பழுதுமில்லை
கொடுப்பதினாலேயம்மாகுறைவொன்றுவருவதில்லை
அழுக்கில்நசுங்கினதோர் ஆடைதந்தாற்பேதமென்ன
கொடுக்காமற்போனாலென்கொஞ்சத்தில்விடுவதில்லை
சனியன்தொலையவேணும்சற்றேகொடுத்தனுப்பும்
அப்படியேநான்கொடுத்தால் ஆண்டியன்போவானோ
கேட்டுவாதாதியரோகேடுகெட்டசங்கமனை
பாங்கியிலும்நல்லவளாம்பவளசேனையோடிவந்து
ஐயாபெரியவரோஅறிவைப்படைத்தவரே
திரப்படித்தவரேதெளிவறிந்தசங்கமரே
உள்ளாடைசேலையதுவொருமுழந்தந்தாலே
போகிறீரோபெரியவரேபுண்ணியரேசொல்லுமென்றார்
ஆனால்கேளாச்சியரேஅதிலுமொருவசனம்
ஏந்திழையாள்பிச்சைதந்தால்இருகையால்வாங்கிகொள்வேன்
தேன்மொழியாள்கைதலத்தைநீட்டியேயான்பிடித்து
அள்ளியேநீரிடுவேன்ஆணங்குமாரியர்க்கு
இருகையினால்வாங்கிஏந்திழையாளளிக்கவேண்டும்
உலகத்திலுள்ளபடிஉத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதான்கேட்டுஅழகானதாதியரும்
மகுடத்துரைச்சியர்க்குவந்தவளுந்தெண்டனிட்டாள்
ஆச்சியரேநீர்கேளும்அடியேனொருவார்த்தை
ஐயருக்குப்பிச்சையது ஆரணங்கேதந்தபின்பு
உன் கைத்தலத்தைத்தான்பிடித்துக்கடுகியேநீரிடுவார்
உலகத்திலுள்ளபடிவுனக்குகுறைவுமில்லை
தலையிலெழுத்திதுவோதையலரேயென்தோழி
உடுத்தியசேலையதுஉள்ளாடைதான்கிழித்தாள்
இந்தாருஞ்சாமியென்றுஈய்ந்தாளேயல்லியம்மாள்
வாங்கியந்தசங்கமனும்வாழ்வரசிமுகம்பார்த்து
அள்ளியேநீருமிட்டார்ஆரணங்குகைத்தலத்தில்
பத்தினியைவாழ்த்தியவர்பல்லொளிவைக்காட்டினாரே
அடிவானமின்னலைப்போலல்லியர்க்குதோன்றினது
கண்டுமயங்கினாளேகட்டழகியல்லியவள்
காண்டீபனருச்சுனருங்காற்றாய்ப்பறந்துவிட்டார்
தெத்துதெருதாண்டிசிரானகாட்டில்வந்தார்
மாயன்பெருமாளிடம்வந்துவிட்டானருச்சுனனும்
அல்லியின்வாசலிலேஅதிசயங்களுள்ளதெல்லாம்
மாயருடன்சொல்லியல்லோமனஸ்தாபப்பட்டழுதான்

மாலைதரிப்பதெப்போமனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போகுறைகளெல்லாந்தீர்வதற்கு
மன்மதபாணமதுமார்புருகிப்போகுதென்முன்
அப்போது அல்லியரும்அவள்சோபந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்களாயிரம்பேர்வாங்களடி
ஆண்டியைக்கொண்டுவாரும்ஆக்கினைகள்செய்யவேணும்
பாங்கியிலும்நல்லபவளசேனையேதுசொல்வாள்
சந்திரனோசூரியனோசதுர்முகப்பிர்மாவோ
மாணிக்கச்சொக்கலிங்கம்வடிவுகொண்டுவந்தாரோ
எங்கென்றுதேடுவோம்எழிலானசங்கமனை
போனாலும்போய்ப்போமுன்போவோமரண்மனைக்கு
அல்லியரைக்கூட்டிக்கொண்டுஅரண்மனையில்வந்தார்கள்
மாளிகைவாசலதுமண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான்பாம்புப்பிடாரனாகவும்அருச்சுனன் பாம்பாகவும்வடிவுகொண்டது.

அப்போதுபெருமாளும்ஆயவொன்னவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்றதுவண்டக்கிழவனுனூர்
பண்ணைப்பூப்போலாகப்பழுத்தகிழவனூர்
பத்துவிதப்பாம்புகளைப்பாரளந்தாருண்டுபண்ணூர்
வாள்விசையனருச்சுனனைமாணிக்கப்பாம்பாக்கி
போர்விஜையனருச்சுனரைபெட்டியிலேதானடக்கி
முப்பதுவிருதுகட்டிமுகடிக்குழலெடுத்து
பாம்புப்பெட்டிக்காவடியைப்பாரளந்தார்தோளில்வைத்து
மகுடிக்குழலூதிவாராரேயெம்பெருமாள்
அல்லியவள்பிறந்தஅழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில்அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள்நானூறுகன்னிகளும்
பாற்குடங்கள்தாமெடுத்துப்பத்தினிக்குக்கொண்டுவாரார்
காராம்பசும்பாலைக்கப்பங்கட்டிவைத்தார்
ஆலமரநிழலிலேஅணைவரும்வந்தமர்ந்தார்
பெண்ணரசுமாதரெல்லாம்பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரேஅழகானபிடாரனேநீர்
எந்தவூரெந்தநாடுஎங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்னஉத்தமரேசொல்லுமென்றார்
கோங்குமலையாளம்கொச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும்பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளையாவேஅடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம்எடுத்துதாருட்டுமென்றார்
பசியாயிருக்குதம்மாபாம்பாடமாட்டாது
ஐந்துநாளாச்சுதம்மாஆகாரந்தான்புசித்து

போசனங்களில்லாமல்புல்லாடல்பட்டுதம்மா
பாலிதுதான்குடித்துபசியதுதீர்ந்துதானல்
அப்போவிளையாடும்அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைதான்கேட்டுஅங்கிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம்குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போதுபிடாரன்ஆயரவரேதுசொல்வார்
ஒருவர்-கண்பார்க்கமுடியாதுகனமுள்ளபாம்பிதுதான்
பக்கத்திரைவளைத்துப்பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டுபசியாறும்உத்தமியேயிப்பாம்பு

பாற்குடங்களனைத்திலுள்ளபால்களையெல்லாம்

பாம்புகுடித்தது.

அத்தண்டபெண்களெல்லாம்அவ்வார்த்தைதான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம்பார்தீர்த்துவைத்தார்கள்
சுற்றித்திரைபோட்டுசிரானபாம்பைவிட்டார்
பக்கந்திரைவளைத்துபாம்புகளையுள்ளேவிட்டார்
ஆணுலழகுமன்னன்அருச்சுனவீரியனும்
பாலைக்குடித்துவிட்டுபானையையுருட்டிவிட்டான்
திரையெடுத்துப்பார்த்தார்கள்திகிலடைந்தார்பெண்களெல்லாம்
ஐயையோதெய்வமென்றுஅரைந்துகொண்டாரெல்லவரும்
பாவிகெடுத்தாயேபாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலையதுஎத்தாய்குடித்துதடா
அல்லியறிந்தாலேஆக்கினைகள்செய்வாளே
தாமணிப்போட்டல்லவோதலையைத்தறிப்பாளே
கொல்லவினைப்பாளேகுடிகேடுவந்திடுமே
ஆரடாபாதகனேஅறிவுகெட்டபிடாராநீ
கொஞ்சம்பால்குடிக்குமென்றுகுடமெல்லாம்வைத்தாயே
நரைத்தலையைநாய்பிடுங்கிடத்தலைக்குக்கேடுவர
எங்களைக்கெடுத்தாயடாஎங்கள்பாவங்கொண்டாயடா
என்றுபுலம்புகிறாரிளங்கொடிமாரெல்லவரும்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய்போறார்கள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல்அரண்மனையில்வந்தார்கள்
அல்லியர்க்குமுன்புவந்துஅடிவணங்கித்தெண்டனிட்டார்
ஆச்சியரேயென்தாயேஅதிசயத்தைநீர்கேளும்
மதுராபுரியருகேவைகைக்கரையோரம்
ஆலமரத்தடியில்அங்கேயொருகிழவன்
பாம்புப்பிடாரனவன்பாருலகில்யாமறியோம்
பத்துவிதப்பாம்புகளின்பஞ்சரத்தினப்பாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத்தளும்புதேஎன்னச்சி
சூரியனைப்போலேயல்லோதுலங்குதேஎன்னச்சி
வேறிற்பவளமதுமின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோலேவிளங்குகிறதப்பாம்பு

பாம்புபசியாயிருக்கிறதுபால்வார்த்துபோங்களென்றான்
பாற்குடத்தைக்கீழிறக்கிப்பாலதுவார்க்கவந்தோம்
கண்ணாலேபார்த்தாலேகரண்டிபால்குடியாதென்றான்
அத்தனைபாலையுந்தானப்பாம்புஉண்டுதம்மா

அல்லியரசானிபாம்புப்பிடாரனை வரவழைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமென்னசொல்வாள்
இந்தவதிசயத்தைஎங்கிலும்நான்கண்டதில்லை
பாம்புகளைப்பார்க்கவேண்டும்பிடாரனை அழையுமென்றாள்
அந்தக்கிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தாதியர்கள்
ஐயாபெரியவரே ஆச்சியழைக்கிறாள்காண்
பாம்புகளையாட்டிவைத்தால்பாக்கியங்கள்தந்திடுவாள்
வேணுமென்றஉச்சிதங்களுந்தமியாள்தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லிவருந்தினார்தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தாமெழுந்து
காவடியைதோளில்வைத்துக்கடுகிவழிநடந்தார்
மகடிக்குழலூதிவந்துவிட்டார்தென்மதுரை
கடையுங்கடைத்தெருவுங்கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும்அரண்மனைத்தெருதாண்டி
அல்லியம்மாள்தன்வாசலரண்மனையிற்போய்புகுந்தார்கள்
வாசலும்வாசலதுபடியேழுந்தான்தாண்டி
சிங்காதனத்துக்குமுன்பாகவந்துநின்றார்
உத்தமியைக்கண்டவனும்ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும்வணங்கியேநிற்கலுற்றார்
ஐயாபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணப்பாம்பெடுத்துவிதம்விதமாயாட்டலுற்றான்
ஆடாதகூத்துகளையாட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனோ அன்பானபிடாரனேநீ
வேரிற்பவளம்போலேமின்னுகுதுபெட்டியிலே
சந்திரகாசம்போலேதளும்புகுதுபெட்டியிலே
சூரியன்போலேதுலங்கிறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறதுஎடுத்துநீயாட்டுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளும்அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்தஎனக்கிளையதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்ததயவானபாம்பிதுதான்
எப்பாம்பெடுத்தாலும்இப்பாம்பெடுக்கறியேன்
பெண்டுகளைகண்டாலேபிரியமுடனோடிவரும்
மார்மேலுந்தோள்மேலும்மடிமேல்புரண்டாடும்
தோளின்மேலேறுவதுந்தும்பிப்பறப்பதுவும்
மார்பின்மேலேறுவதும்மடியிலிருக்குமது
முகத்தோடேமுகமணைந்துமுத்தங்கொடுக்குமது

மார்பின்மேலேறியல்லோமருவிவிளையாடும்
கீதங்கள்பாடுமதுகொண்டாணடிக்குமது
ஆடாதகூத்துகளும்அரும்பவனியாடுமது
வெட்டும்பிளகெடுத்துமெத்தெனவேவாயில்விடும்
வெற்றிலைச்சுருளெடுத்துவிரும்பியதுகொடுக்கும்
பஞ்சாத்தினபாம்பிதுதான்பத்தினியேநானெடுக்கேன்
உன்னையிதுகண்டாலேஓடிவந்துமயிலேறும்
இப்பாம்பைநானெடுக்கேனென்றானேபிடாரநீ
ஆனால்கேளையாவேஅன்பானபிடாரநீ
அப்பெரியபாம்பினதுஅதிசயத்தைப்பார்க்கவேணும்
சற்றேயெடுத்துவிடும்சந்தேகம்படவேண்டாம்
உச்சிதங்கள்வேணதெல்லாமுந்தனுக்குயான்றருவேன்
மெத்தவருந்தினாளேமெல்லினல்லாளல்லியரும்
அப்போபிடாரனவன்அப்பாம்பைதானெடுத்தார்
பெட்டிதிறக்கையிலேபோனவாழ்விசையன்

அர்ச்சுனன்பாம்புருக்கொண்டு அல்லியம்மாளைமருவியது.

அல்லிமடிமேலேஅருச்சுனனேறினானே
மார்மேலுந்தோள்மேலும்மருவிவிளையாடுகிறான்
முகத்தோடேமுகமணைத்துமுத்தங்கொடுக்கிறானே
போதுமையாமைத்துனரேபோய்வாருஞ்சுவாமியென்றான்
மாயவனைக்கண்காட்டிவழிபிடித்துப்போங்களென்றான்
தும்பிபறக்கிறதுஞ்சேர்ந்துவிளையாடுவதும்
கொண்டாணடிப்பதுவுங்கூத்துகளாடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்துமெல்லியர்க்குக்கொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தாளேபத்தினியாளல்லியம்மாள்
ஐயாபிடாரனேநீஅன்பானவார்த்தைகேளும்
இன்றையராத்திரிக்குஇருக்கட்டுமிப்பாம்பு
நாளைக்குவந்துநீதான்வாங்கிப்போம்பாம்பையென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டுஅன்புடனேயதுசொல்வான்
என்னுடையதங்கையவள்இன்பமுள்ளநாயகியாள்
பஞ்சணைமெத்தையிலேபடுத்திருக்கும்போதையிலே
கூடப்படுத்துக்கொண்டுகுலாவிவருகிறபாம்பிதுதான்
பக்கத்திற்பிரிந்ததில்லைபத்தினியாள்தங்கையவள்
காணாமற்போனாலேகலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலேபடுக்கைபொருந்தாளே
உண்ணாள்குளியாளேஉறக்கம்வந்துதூங்காளே
அல்லவென்றுஉன்னிடத்திலாச்சியேநான்விட்டுபோனால்
பாம்புகரைந்துபோகும்பத்தினியேயேதுசெய்வேன்
அரைப்பலங்குறைந்துபோகும்அழகானவிப்பாம்பு
கரைந்துகுறைந்தாலும்கனந்தருவேனென்றான்

தாசுகிலையாககிறுத்திப்போம்பாம்மைபயென்றாள்.
அப்படியேசம்மதித்தான்ஆயன்பிடாரனவன்
எடுத்துத்தாசில்வைத்துஇடைபார்த்துதந்துவிட்டான்
பாலும்பழங்களுமேபசியாமல்வையுமென்றான்
நாளைவருகிறேனேநாயகமேபோகிறேன்யான்
பாஷையினாலேயல்லோபார்த்திபனேதுசொல்வன்
எட்டொருநாள்போனபின்புஇங்கேவாமைத்துனனே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்றான்
போங்காணுஞ்சுவாமியென்றுபுகழாகத்தெண்டனிட்டான்
பாம்மைகொடுத்தல்லவோபாரளந்தார்போய்கடந்தார்
பாலும்பழங்களுமேபாமபுக்குவைத்தார்கள்
பார்த்திபனருச்சுனனும்பசியாறித்தானிருந்தார்
அந்திகாலமாச்சுதங்கேஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன்தான்மறையஅல்லியம்மாளேதுசொல்வாள்
அந்தியனுஷ்டானம்அனைத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம்செய்தாளேயல்லியம்மாள்
சொக்கரைப்பூசைசெய்துசெவிதனிலேபூச்சொருகி
போசனச்சாலையிலேபுகுந்தாளேயல்லியம்மாள்
சருக்கரைப்பாற்போசனமும்சாதங்கறிவகையும்
உண்டுபசியாறிஉத்தமியாள்கையலம்பி
பஞ்சணைமெத்தையதுபள்ளியறைசோடியென்றாள்
தோழிமாரானவர்கள்சுருக்காயெழுந்திருந்து
கண்மூன்றுடையதொருசனவயிரக்கட்டிலிட்டார்
மெத்தைமடித்துஇட்டார்மேலேதலையணைபோட்டார்
காம்பரிந்தஇங்கலப்பூகட்டிலின்மேல்தான்சொரிந்தார்
தங்கத்தலையணையுஞ்சார்பணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும்ஒய்யாரத்தண்டுவைத்தார்
அருகுதலையணையும்வைத்துஅலங்காரஞ்செய்தார்கள்
அத்தர்புனுகுகளும்அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரிகளைத்துதெளித்தார்கள்
சந்தனமும்பன்னீருஞ்சாடினொத்திசையும்
சந்தனம்புகைகொடுத்துசாம்பிராணிதூபமிட்டார்
குத்துவிளக்குகளைக்கொழுந்துபடிவேற்றினார்கள்
மாடங்கள்தோறுமங்கேமணிவிளக்குமேற்றினார்கள்
சன்னவிலேபன்னீரைச்சாடினொத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டைபாக்குப்படிகம்வைத்தார்
மூத்துச்சுட்டசுண்ணாம்பும்மோரங்கிவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும்அழகுநல்லவெற்றிலையும்
காய்ச்சாக்களிப்பாக்கும்கம்யாறுவெற்றிலையும்
வாகாய்ச்சுருள்மடித்துமாணிக்கத்தட்டில்வைத்தார்
கிண்ணியிற்பாலைவைத்துகெண்டிகையில்தீர்த்தம்வைத்தார்

சோடித்தோமாச்சியென்று தெண்டனிட்டார் தாதியர்கள்
பாம்பெடுத்துமடியில்வைத்து பத்தினியாள் தானடந்தாள்
பஞ்சணைமெத்தையிலே படுக்கையறை போய்ச்சேர்ந்தாள்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள் பூட்டினாளே
அத்தண்ட தாதிகளும் அங்கங்கே பள்ளிகொண்டார்
பஞ்சரத்னப்பாம்பெடுத்து பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பைங்கிளியாளல்லியம்மாள் பள்ளிகொண்டாள் மலரணையில்
அப்போதருச்சுனரும் ஆயனைத்தானினைந்து
மாயன்பெருமாளை மனதிலே தானினைந்து
என்சோயந்தெளியவேண்டும் ஸ்ரீராமர் தயவுசெய்யும்
காமவிகாரமதுகளை தீரவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மூதேவியை யழைத்து அல்லியின்மேல் பிரவேசிக்கச்செய்தது.

அருச்சுனன்தன் துயரமறிந்தாரே யெம்பெருமான்
ஸ்ரீதேவிக்கு முன்பிறந்த திருவிணையாள் மூதேவி
மூதேவிநாயகியை முகில்வண்ணர் தாமழைத்து
மகுடத்துரைச்சியர்க்கு மாதரதனித்திரையை
விடிந்து மூன்றுசாமம் மெல்லவிசித்திரை தெளியாமல்
மாராகித்திரை கொள்ளுமென்று வரவிட்டார் மாயவரும்
வந்துவித்திரை கொண்டாள் வளம்பெரிய மூதேவி
அணந்தல் தெளியாமல் அசந்துநித்திரைபோகலுற்றார்
பாம்புவடிவைவிட்டு பார்த்திபனருச்சுனனும்
எப்போதும்போலாக இளவிசையன்வடிவுகொண்டான்
சங்கரரும்பார்வதியும் கருவியிருந்ததுபோல்
சிவனுடனே பார்வதியாள் சேர்ந்திருந்தபாவனைபோல்
தென்னசரிராமனுக்குச் சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாணாயுஞ்சர்ப் பமும்சருவியயலானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினனே குங்குமப்பூமெத்தையிலே
கண்ணாடியேலேயல்லோ கடுகுருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டுறைந்துவாய்ந்ததுபோல்
மருவியணைந்தானே மகாவிடாய்தீர்ந்தானே
ஆறாதபோகமெல்லாம் ஆறினனருச்சுனனும்
தீராதசோபமெல்லாம் தீர்ந்தானருச்சுனனும்
மங்கையடைப்புல்கியல்லோ மருவினனர்ச்சுனனும்
வெள்ளிமுளைக்கையிலே வெடிகோட்டான் கூவும்போது
பாம்புவடிவெடுத்து பக்கம்படுத்திருந்தான்
எப்போதுஞ்சர்ப்பம்போலெழில்விசையன் வீற்றிருந்தான்
பொழுதுவிடிந்ததங்கே பொற்கொடிமார் கண்விழித்தார்
தோழியர்கள் தாதியர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்

அல்லிப்பெருமாளும்அசந்துநித்திரைபோகலுற்றாள்
கொம்பனையைத்தோழிமார்கள்கூவியெழுப்பினார்கள்
தட்டியெழுப்பினார்கள்காமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்துப்பொற்கொடியாள்தானெழுந்து
அலைகுலையத்தலைகுலைய ஆடைகலைந்திருக்க
கதவைத்திறந்தாளேகட்டழகிஅல்லியம்மாள்
பாங்கியர்கள்சூழவேதான்பவளவந்துவிட்டாள்
அல்லிப்பெருமானை ஆரணங்கைத்தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்தவளும்உத்தமியைக்கேட்கலுற்றாள்
ஒருநாளுமில்லாதஉச்சிதங்கள்காணுதம்மா
வாரிமுடிந்ததலையிருங்கலைந்ததென்ன
கோதிமுடித்ததலைகூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்னமார்பழிந்துபோனதென்ன
பொட்டுக்கலைந்ததென்னபூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாங்கரையவந்தகாரணமென்ன
கோவைப்பழம்போல்குமரியின்செவ்வுதடும்
குமரியின்செவ்வுதடும்நோகியிருப்பானேன்
படுக்கைகலைவானேன்பஞ்சணைகலைவானேன்
காம்பரிந்தஐங்கலப்பூகசங்கிசுங்குவானேன்
மங்கையரேயுந்தனுக்குவாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளுமாரணங்குயேதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தைபொய்யல்லதாதியரே
மனிதருடன்கூடவேமருவினபாம்பிதுகாண்
பஞ்சணைமெத்தையிலேபக்கத்தில்வைத்திருந்தேன்
ஏதாய்விளையாடிற்றோஇளங்கொடியேயென்தோழி
என்றுமுகத்தின்மிதியடியைதொட்டெடந்தசைந்தாள்
பூங்காவனத்திற்போய்ப்புனல்கங்கைநீராடி
பாளைகொண்டுபல்விளக்கிஇலைகொண்டுநாவழித்து
கன்னியிளங்கொடியாள்கமலமுகஞ்சுத்திசெய்து
வாயோடுபல்லும்மதிமுகஞ்சுத்திசெய்து
சிவனுக்கருளென்றுதிருநீற்றுக்காப்பணிந்து
சிங்காரமெத்தையின்மேல்தேன்மொழியாள்வந்தமர்ந்தாள்
ஆரடிதாதியரேஅலங்காரத்தோழியரே
பாம்புதனக்குப்பாலும்பழங்களும்வையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள்குடநிறைந்தபாலதுவை
பஞ்சரத்தனப்பாம்பதுதான்பாலைக்குடித்ததுவே
அப்போதுபெருமாளும்ஆயரவர்தாமெழுந்து
பிடாரனைப்போலாகப்பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளவாசலதுபடியேழுந்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்துஅடிபணிந்துதெண்டனிட்டார்
ஆச்சியரேநீர்கேளும்அடியேனொருவார்த்தை

இப்பாம்புஇல்லாமல்என்னுடையதங்கையவள்
அழுதுகண்ணுஞ்சிந்தையுமாய்அமுதுண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளும்கலங்கியழுதாளே
கேளாதவார்த்தையெல்லாம்கேட்டேனம்மா உன்னாலே
உன்னாலேபட்டகளை உத்தமியேபோதுமம்மா
என்னுடையபாம்பதுதான்எத்தனைகரைந்துபோச்சோ
எவ்வளவுதேய்ந்துதோஎடுத்துவாகிறுப்போமென்றார்
கொண்டுவந்துநிறுத்தினார்கள்கொப்பனவேதிராசனில்
பாரமிகக்குறைந்துபாம்புநட்டெழும்பியது
அரைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்பிதுதான்
இன்னமரண்டுநாளிருந்தால்இங்கேதான்சாகுமம்மா
அறியாமல்விட்டுப்போனேன்அனர்த்தம்வரலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குத்தான்கொண்டுவாரும்ரத்தினத்தை
என்றுசொல்லத்தான்கேட்டுஇளங்கொடியாளல்லியம்மாள்
வச்சிரமும்மாணிக்கமும்வைநடைக்கட்டிதந்தாள்
பாம்பெடுத்துப்பெட்டியிலேபாரளந்தார்வைத்துக்கொண்டார்

ஸ்ரீகிருஷ்ணபகவானருச்சுனனுடைய பாம்பைஎடுத்துப்போனது.

போகிறேனுச்சியென்றுபோய்நடந்தான்பிரானவன்
கோட்டைக்கட்டந்தவரும்கொத்தளமுந்தான்தாண்டி
தெத்துத்தெருக்கடந்துதேரோடுவீதிவிட்டு
ஆரணியந்தன்னிலேஅரிராமர்வந்துவிட்டார்
ஆணழகுமன்னன்அர்ச்சுனனேதுசொல்வார்
வாழ்வரசிஅல்லியம்மைமாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போசுவாமிபெருமாளே
கட்டினவிருதறுத்துக்கலியாணஞ்செய்வதெப்போ
என்றுதெளியுமோஎக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேற்சிந்தையாயலைகிறானருச்சுனனும்

ஸ்ரீகிருஷ்ணபகவான்மறுபடியும் மிருகங்களை உண்டுபண்ணினது.

அன்றுபோய்மற்றநாள்அரிராமரேதுசெய்தார்
மாயமிருகங்களைவனத்திலேயுண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களும்கரடிபுலியாளிகளும்
ஏனங்கடம்பைகளும்எருமைக்குரங்குகளும்
புள்ளிமான்றுள்ளம்பன்றிபுனுகுபூனைமுயல்களுடன்
மயில்குயிலன்னமும்வண்ணவண்ணபட்சிகளும்
அனந்தமானமிருகமெல்லாம்அரிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிபடைகள்வனத்தில்வரஅஞ்சினார்
கண்டவரையெதிர்க்கிறதுகாட்டானைசிங்கந்தான்
ஓடிபதுங்கியல்லோஒளிப்பார்சனங்களெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய்அல்லியண்டையோடிவந்தார்
அழுதழுதுதோடேஅல்லியெதிரில்வந்தார்

இத்தனைநாள்பிழைத்தோம்இடுக்கமில்லா திருந்தோம்
என்னகுறைசெய்தோமோ இயலானமிருகமம்மா
காட்டானைத்துங்கரடிபுலிகண்டு துரத்துதம்மா
எந்தவிதம்நாம்பிழைத்து இடுக்கமில்லா திருப்போம்
மிருகபன்றிமானினமும்வியமி துரத்துதம்மா
பிறுதேசம்போய்நங்கள்வாகாய்பிழைப்போமம்மாள்
மதுரையிலுள்ளஜனம்வலசைகுடிபோறோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டுவலங்காரத்தாதியர்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியர்கள்
மருடத்துரைச்சியவள் வார்த்தையதுகேட்டு
வேட்டைகாரபெண்களைவிரைந்தோடியழையுமென்றாள்
மறவர்பெண்கள்குறவர்பெண்கள்கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களைநீவேட்டைக்கழையுமென்றாள்
கேட்டந்ததாதியர்கள்கொப்பனவேஓடிவந்தார்
வேட்டைக்காரப்பெண்களைத்தானோடியழைந்தார்கள்
அப்போதுவில்லியர்மெல்லியர்வாரார்கள்
காற்செருப்புத்தோற்குல்லாவுஞ்சைதணிமேல்சிலாக்கோலும்
இரட்டைகுண்டுதுப்பாக்கிஇருதோளில்வைத்தார்கள்
பன்றிகுத்தும்வல்லயங்கள்பாங்குகளுந்தானெடுத்தார்
மான்வலையுமுயல்வலையும்வகையுடனேதானெடுத்தார்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ்சுங்காணிவில்லெடுத்தார்
வேட்டைபெண்களுள்ளவர்கள்விருதுகட்டிவருகிறார்கள்
வெள்ளிச்சமுக்கடித்துவெண்கலக்கொம்பூதிவாரார
பொன்னின்சமுக்கடித்துப்புறப்பட்டார்பெண்களவர்
வேட்டைநாயுஞ்சங்கிலியும்விருதுகட்டிவாரார்கள்
கருநாயுஞ்சங்கிலியும்கடுகெனவேகூட்டிவாரார்
அல்லியம்மாள்வீதிமேல்அனைவரும்வந்துநின்றார்

அல்லியம்மாள் மறுபடியும் வேட்டைக்குப்போகிறது.

ஐயாயிரந்தோழியர்களடங்கலும்பயணமென்றான்
பல்லக்கைசோடியென்றாள்பத்தினியாளல்லியரும்
கனகதண்டிசொப்பனிட்டுக்கன்னியர்கள்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவர்அழகுள்ளகுதிரையேறி
பாண்டிப்பெருமாளும்பல்லக்கிலேறினாளே
பாராசாரிபுரவியதுபஞ்சகல்யாணியது
விடுகுதிரைசோடித்துமெல்லியர்கள்கொண்டுவந்தார்
ஏறினாள்கனகதண்டிஎடுத்தார்கொடிவிருது
யானையின்பேரிகைதானடிபடுதேகுமுகுமென்று
வெண்கலபேரிகைகள்விருதுமுழங்குதங்கே
மேளமுழங்கிறதுமும்மண்டலமதிர
மதுரைத்தெருக்களெல்லாமண்தூளெழும்புகிறது
மதுரைத்தெருதாண்டிவந்துவிட்டார்கானகத்தில்
காடுசெடிபுகுந்துகனவேட்டையாடுகிறார்

கனகதண்டிவிட்டிறங்கிகட்டழகிஅல்லியம்மாள்
ஏறினாள்புரவியின்மேலெடுத்தாளே அம்புவில்லு
தட்டினாள்புரவிதன்னைச்சவாரிவிட்டாள்கானகத்தில்
வளைத்தாளேவில்லதனைவாங்கிவிட்டாளஸ்திரத்தை
இழுத்துவிட்டாள்பாணங்களைஇமைகிரிநடுங்க
தொட்டாளேவில்லதனைச்சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானைசிங்கங்களைக்கண்டுநாதனுற்றார்
புலிகள்கரடிகளைப்போடுகிறாள்பாணத்தாலே
கலைமானும்பன்றிகளும்கண்டமிருகங்களை
மட்டில்லாமிருகங்களைவகைவண்ணிப்போட்டிடுவாள்
புள்ளிமான்றன்னைக்கண்டுவோட்டாளேபாணத்தாலே
மதயானைமிருகங்களைஅதமாக்கிப்போடுகிறாள்
அனேகமிருகங்களைஅதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமானும்மலைசோகிபேதுசெய்வார்
இந்தவனந்தனிலேஅதிகசலமில்லாமல்
தண்ணீர்கிடையாமல்சுவாமியவர்யுண்டுபண்ணார்
தண்ணீர்களையல்லோதாகவிடாயானாளே
நெஞ்சுலர்ந்துபோகிறதேநினைவுதப்பிபோகிறதே
உண்ணாக்குத்தொண்டையதுஉலர்ந்துமேபோகிறதே
காதையடைக்கிறதேகளைபாய்வருகிறதே
தண்ணீர்களைபாலேதான்விழுந்தாள்பூமியிலே

அர்ச்சுனன்காசிபிராமணனாகவந்துகாசிதீர்த்தங்கொடுத்தது

சாண்டிபனருச்சுனனுங்கட்டழகாப்போறு
காசிபிராமணன்போலகடுகவடிவெடுத்தார்
தொண்ணூறுபத்துஞ்சென்றவண்டகிழவனைப்போல்
நாணப்பூபோலேயல்லேநரைத்தகிழவனானார்
காசிநல்லதீர்த்தமதுகாவடியைத்தோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தாளேமெய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாகஅர்ச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள்பொற்கொடிமார்தோழியர்கள்
ஐயாபெரியவரேஅழகானவேதியரே
மெத்தப்பெரியவரேமேல்நாட்டுவேதியரே
பாருலகையாளுமொருபத்தினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத்தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்மிகுந்துதளர்ந்தாள்கண்ராசகன்னி
காதைபடைத்தவளுங்களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தம்வாருமையாகளைகள்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுதையாபிராமணரேதீர்த்தங்கொடும்
என்றுதான்கேட்டுஇறக்கினானகாவடியை
இறக்கினேகாவடியைதீர்த்தகுப்பிதானெடுத்து

மாதுகளைத்தெளியவார்க்கலுற்றான்தீர்த்தத்தை
தாகந்தெளிவதற்குத்தண்ணீரும்தான்கொண்டு
களைகள்தெளிந்தாளேகட்டழகிஅல்லியம்மாள்
கடுகஅந்தஅர்ச்சுனனுங்காவடியைத்தோளில்வைத்து
காற்றாய்ப்பறந்துமல்லோகரியமால்பக்கம்வந்தான்
ஆயன்பெருமாளேவார்த்தையொன்றுநீர்கேளும்
களைபட்டிருந்தாளேகன்னியிளங்கொடியாள்
தண்ணீரையான்கொடுத்துதாகவிடாய்தீர்த்துவந்தேன்
மாலைதரிப்பதெப்போமணமுகூர்த்தஞ்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போசுவாமிபெருமாளே
என்றுதெளிந்திடவேஎக்காலஞ்சொல்லுமோதான்
அல்லியின்மேலிச்சைகொண்டலைகிறானருச்சுனனும்
மாதுமேற்சிந்தையாய்மயங்குகிறானருச்சுனனும்
மாயன்பெருமாளுமலைசாயமோதுசெய்தார்

ஸ்ரீகிருஷ்ணபகவானும் அருச்சுனனும்யாதுவேடங்கொண்டு

தண்ணீர்ப்பந்தல்வைத்தது.

அத்வானைகானகத்திலாரணியந்தன்னிலேதான்
தண்ணீர்ப்பந்தல்போடுகிறார்சுவாமிபெருமாளும்
வெந்நீர்குளிர்ந்தநீர்மோர்களும்வைத்தாராம்
கொள்ளுதண்ணீர்வைத்தார்குளிர்ந்தசலம்வைத்தாராம்
தண்ணீர்ப்பந்தல்வைத்தபின்சுவாமிஎன்னவடிவெடுத்தார்
தெய்வப்பிராமணத்திசிறுபெண்வடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள்கன்னிகட்கும்பாவனையாய்
பூக்கும்பிராயமவள்பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதல்லவோகொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டீர்
சோலையிலேசந்திரனைச்சுற்றிப்பிடித்ததுபோல்
ஈழத்துதச்சனவனெழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன்விளைந்துவரவிட்டானோ
வேரிற்பவளமதுமின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோலயேகவர்னர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவதுஆனந்தங்கொஞ்சுவதும்
வடிவுதுலங்கிறதும்பாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாகஎம்பெருமாள்வடிவெடுத்தார்
அருச்சுனராசனதைஅவரென்னவடிவானார்
தொண்ணூறும்பத்துஞ்சென்றதுவண்டகிழவனைப்போல்
பன்னைப்பூபோலாகபழுத்தகிழவனானார்
நாணற்பூபோலாகநரைத்தகிழவனானார்
தோலுங்கம்புகளுந்தொங்குதுகிழவனுக்கு
ஒருகண்ணுதொள்ளைக்கண்ணொருபக்கங்கோண்டிக்கால்
ஒருகையுமொண்டிக்கைஒருபக்கஞ்சாய்ந்தவுடல்

இந்தவிதமாகஇளவிசையன்வடிவெடுத்தான்
தண்ணீப்பந்தலுக்குள்ளாகத்தானிருந்தாரிருவர்களும்
பிடிசொம்புகைபிடித்துபிராமணத்திமுன்னிருந்தாள்
அல்லிப்பெருமாளும்அவளுடையசேனைகளும்
அத்வானகானகத்தில்அந்தவழிவாரார்கள்
மிருகவேட்டையாடியல்லோவெளிப்பட்டுவாரார்கள்
தண்ணீபந்தல்வழியாகத்தையலர்கள்வாரார்கள்
கண்டாளேதண்ணீபந்தல்கன்னியுள்ளேவந்தாளாம்
வந்துஇரங்கினார்கள்வர்னலட்சம்சேனையெல்லாம்
அத்தண்டசேனைகளும்அனைவோரும்வந்தமர்ந்தார்
தாகக்களைகளுமேசகலருந்தான்தெளிந்தார்
அல்லிப்பெருமாட்குஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாகயமர்ந்தாளேயல்லியரும்
பிராமணக்கன்னியென்னும்பெண்ணரசைதான்பார்த்து
ஆர்காணுங்கன்னியரேஅலங்காரப்பெண்மயிலே
எந்தவூரெந்ததேசம்எங்கிருந்துவந்தீர்காண்
அத்வானகானகத்தில்ஆர்வைத்தார்தண்ணீர்பந்தல்
இந்தவனத்திலேஎவர்வைத்தார்தண்ணீர்பந்தல்
பிராமணப்பெண்ணழகிபொற்கொடியாளேதுசொல்வாள்
என்பாவம்தெரிதுகண்டீர்பத்தினியேயேதுசெய்வேன்
தெய்வலோகம்வாழுகின்றதெய்வப்பிராமணத்தி
நான்வாழும்பெருமையதுமகிட்சிகள்மெத்தவுண்டு
அண்டிபரதேசிஅமுதுக்குவந்தார்கள்
அள்ளிப்பதரைவிட்டுஅனியாயம்பண்ணதோஷம்
சாணிதிரட்டிவந்துசாணங்கள்போட்டதோஷம்
ஆதிசிவன்சந்நிதிமுன்அழகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன்மலையாய்வளர்ந்ததுகாண்
சாணிகலையதுதான்சதிராய்வளர்ந்ததுகாண்
பிட்டுதிருநாளுக்குப்புரப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடிமுனிவர்களும்தேவர்களும்
வானவருமிந்திரருமகாதேவர்தான்முதலாய்
கைலாசஞ்சுற்றியல்லோவருகிறவேளையிலே
சாணிமலையதனைச்சங்கரனார்கண்டுவிட்டார்
என்னாலேவந்ததொருஇடருகளைத்தாமறிந்தார்
பொல்லாதசாபமிட்டுப்பூமியிலேபோங்களென்றார்
சாபந்தொலைவதற்குதண்ணீர்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனில்லைதம்பியில்லைஅனுசரிக்கயாருமில்லை
தாம்வீட்டுசெனங்களில்லைதாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுசெனங்களில்லைமட்டுமெனிதரில்லை
தாண்டிநுழைவதற்குதாழ்வாரமில்லையம்மா

எட்டிநுழைவதர்க்குளரவாணந்தானுமில்லை
வாவென்றழைப்பதர்க்குமணிதனொருவரில்லை
தோலும்நரம்புமாளும்கொங்குகிறகிழவனுக்கு
மாளுங்கிழவனுக்குமாலையிட்டனென்னாச்சி
இந்தக்கிழவனுந்தானிறந்துமடியவில்லை
பாவந்தொலையவில்லைபத்தினியேயென்னசெய்வேன்
ஏவல்பணிசெய்துஎங்கேயாகிலிம்பிழைப்பேன்
அவ்வார்த்தைதான்கேட்டுஅல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குந்தோழியாகஎன்னருகில்நீயிருந்தால்
சகலமானபாக்கியமுஞ்சம்பத்துதருவேனென்றாள்
கூடவருவாயோகொம்பனையேயென்றழைத்தாள்
எப்படிவருவேனம்மா இளங்கொடியேயுன்பிறகே
இலக்குமிநோன்பதுதான்நாளைவருகுதம்மா
நோன்புமுடிக்கவேணுநீதியுள்ளதாயாரே
என்றனக்குமுன்னடிமையாகவிருக்கிறேன்காண்
மகுடத்துரைச்சியவள்மாதருமேதுசொல்வாள்
எந்தனரண்மனையிலுந்தனிட்டநோன்புதன்னை
குறையாமற்செய்துவைப்பேன்கொம்பனையேயென்தோழி
வேணுமென்றசாமான்கள்மெல்லியரேயான்தருவேன்
வாருமம்மாவென்றுசொல்லிவருந்தியழைக்கலுற்றாள்
இந்தமுடவனைநான்எங்குபோட்டுவருவேனம்மா
டோலிமேலேபோட்டவரைத்தூக்கிவரச்செய்யுமென்றாள்
பல்லக்கிலேறினாள்பத்தினியாளல்லியம்மாள்
கிழவனைத்தூக்கிவந்துடோலிமேலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள்தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டிகடுகவருகிறார்கள்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
மதுராபுரிபட்டணத்தில்மகிழ்ச்சியுடன்வந்தார்கள்
தெத்துதெருதாண்டிதேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலேவந்தாளேஅல்லியம்பாள்
கனகதண்டிவிட்டிறங்கிகன்னியரும்போகலுற்றாள்
இந்தக்கிழவனையுமிவ்வாசலில்வையுமென்றாள்
ஐந்தாங்கட்டுவாசலிலேஆரியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்திஅரிராமனேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போகதறிக்குமோவென்மனது
முடவனைநான்விட்டுவிடமுறையல்லவெந்தனுக்கு
அவராலேஎன்னகுற்றம்ஆச்சிவரட்டுமென்றாள்
அல்லிப்பெருமாளும்அரண்மனையிற்போம்புகுந்தாள்
முத்துசெம்பொன்வாசலதுமுன்றுகட்டுந்தான்தாண்டி
ஆசாரவாசலதுஅரண்மனையிற்போய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டானம்அனைத்துமேதான்கழித்து

போசனச்சாலையிலேபுகுந்தாளேமாதுகன்னி
பிராமணகன்னியற்கும்அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசிஆனதெல்லாங்கொடுங்களென்றாள்
அந்திகாலமாச்சுதங்கேஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டவர்கள்பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றநாள்காலையிலேகதிரோனும்வந்துதித்தான்
திங்கட்கிழமையதுதசமிபுனர்பூசம்
அன்றையதினம்மதிலேஅரிராமரேதுசொல்வார
அல்லிப்பெருமாளேஅணிமதுரைநாயகமே
விரதமுடியவேண்டும்என்னோன்புதீரவேண்டும்
சாலுங்கரகமதுதையலரோவேண்டுமென்றாள்
வேணுமென்றசாமானைவாங்கிக்கொண்டாள்பிராமணத்தி
தேவையுள்ளவஸ்துவெல்லாஞ்சேகரித்துக்கொண்டவளும்

அருச்சுனன்அல்லியைச் சூதாகத்தாலிகட்டி
விருதறுத்துப்போனது.

பந்தக்கால்நட்டுமெல்லோபந்தலலங்கரித்தார்
பச்சோலைப்பந்தலதுபாங்காயலங்கரித்தார்
நிலத்தைமெழுகியல்லோமாவாலேகோலமிட்டார்
சாலுங்கரகமுமேசதுராய்நிறுத்திவைத்தார்
பாலிகைவைத்துமல்லோபாங்காய்முளைதெளித்தார்
அரசாணிகால்நாட்டிஅம்மிகுழவிவைத்தார்
அந்திகாலமாச்சுதங்கேஆதித்தன்போய்மறைந்தார்
ஆயிரம்பெரிவிளக்கைஅழகாகயேற்றிவைத்தார்
குத்துவிளக்குங்குடவிளக்குமேற்றிவைத்தார்
மாயன்பெருமாளும்மலைராமரேதுசெய்தார்
அத்தண்டதோழிகட்கும்அல்லிப்பெருமாட்கும்
மயக்கத்தையுண்டுபண்ணார்மாயன்பெருமாளும்
மூதேவிதனையழைத்துமுகத்தில்நிறையுமென்றார்
வந்துநிறைந்தாளேவாடையிட்டாள்மூதேவி
சொரணைதப்பிதோழியர்கள்சோர்ந்துபடுத்தார்கள்
அப்போபெருமாளும்அருச்சுனனைத்தானழைத்து
ஓமம்வளர்த்துமென்றாருலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமலேவேள்விவளர்த்தினார்கள்
ஆயன்பெருமாளும்அருளாளரேதுசெய்தார்
தேவேந்திரனையல்லோசிந்தையிலேதானினைந்தார்
அருச்சுனராசனிவன்அல்லியைமணம்பொருந்த
மணமுகூர்த்தம்செய்வதற்குமங்கிலியம்வேண்டுமையா
யானைத்தலைபோலேஅழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலேதிருமங்கிலியச்சரடு
மாயத்திருநீரும்வரவனுப்பவேண்டுமென்று
தோத்திரம்செய்தாரேஸ்ரீராமரெம்பெருமாள
இந்திரருமப்போதுஇருதயத்திற்றானறிந்து

உள்ளமகிழ்ந்துமல்லோஉம்பர்பிரானிந்திரரும்
யானைத்தலைபோலேஅழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலேதிருமங்கிலியச்சரடும்
மாயத்திருநீறும்மகிழ்ச்சியுடன்தானெடுத்து
தூதன்கையிற்கொடுத்துஸ்ரீராமர்கைகொடென்றார்
வாங்கியந்ததூதனவன்மாயவனார்கைகொடுத்தார்
ஆயரவர்வாங்கியல்லோஅர்ச்சுனனார்கைகொடுத்தார்
லக்கினமுந்தப்பாமல்நல்விசையன்கொடுத்தார்
காராபலன்பார்த்துதரியுமென்றார்மங்கிலியம்
மாயரிடத்தன்பாதம்வணங்கியந்தஅர்ச்சுனனும்
ஈஸ்வரரைப்பார்வதியைஇருதயத்தில்தானினைந்து
பிட்டுக்குமண்சுமந்தபுனிதனைத்தானினைந்து
தேவேந்திரபகவானைசிந்தையிலேதானினைந்து
அல்லியென்னும்பெண்ணரசிஆரணங்குதன்கழுத்தில்
சிவாசிவாவென்றுசொல்லித்தேர்விசையன்கட்டலுற்றான்
அரகராவென்றுசொல்லிஅழுத்தினான்மங்கிலியம்
பிரம்மமுடிமூன்றுமுடிபோட்டானேஅர்ச்சுனனும்
ஈஸ்வரனார்வெண்ணீறைஇட்டானேநெற்றியிலே
மாயன்பெருமாளும்வரமென்னதான்கொடுத்தார்
இந்தமங்கிலியந்தன்னையிவள்கொத்திபிளந்தாலும்
கோடாலியாலேயிவள்கொத்திப்பிளந்தாலும்
இரம்பத்தைபூட்டியிவள்நலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலுங்கட்டழகிமங்கிலியம்
அறாமலிருக்கவென்று அரிராமர்வரமளித்தார்
அர்ச்சுனரைக்கூட்டிக்கொண்டுஅறிராமாதானடந்தார்
பத்துசுற்றுகோட்டைகளும்பார்த்திபன்தாண்டிவந்து
மஞ்சட்கொடிகளுமேமகுடரத்னதோரணமும்
பொம்மைவிருதுகளும்பூகத்தலைகளுமே
அல்லிக்கொடிவிருதும்அறுத்தெறிந்தானர்ச்சுனனும்
முச்சுகொட்டாகொடிவிருதைமுனைவீரன்தானறுத்தான்

கிருஷ்ணபகவான் அருச்சுனனும்தருமாபுரம்வந்துசேர்ந்தது.

விராதிவீரன்தம்பிவிசையன்வெளியானான்
மாயனுந்தானுமாகவழிநடந்துபோனார்கள்
மதுராபுரிகடந்துவனமாய்வனங்கடந்து
காடுசெடிகடந்துகரியமலைதான்கடந்து
ஆறுசுனைதாண்டிஅதிகவனந்தான்தாண்டி
பொல்லாதவனந்தாண்டிபோய்சேர்ந்தார்தருமாபுரம்
மாளிகைவாசலிலேவந்துசேர்ந்தாரிருவருமாய்
பொற்கோழிகூவியல்லோபொழுதுவிடிந்ததுகாண்
சக்கலாதேவிபுத்ரன்சூரியனும்வந்துதித்தான்

அருணனுடதேரேறி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியரும்தாதியர்கள் தூக்கம்விழித்தார்கள்
அத்தண்டதோழியர்கள் அனைவருங்கண்விழித்தார்
பாங்கியிலும்நல்லதொருபவளசேனையேதுசொல்வாள்
அல்லிப்பெருமாளின் அருகாகவந்தார்கள
தட்டியெழுப்பினார்கள்தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்தாள்பொற்கொடியாளானவளும்

அல்லியம்மாள்மங்கிலியங்கண்டுபரதவிக்கிறது

கழுத்திலேமங்கிலியங்கண்டாளே அல்லியம்மாள்
அத்தண்டதோழிகளும் அனைவோரும்பார்த்தார்கள்
முடாப்போலேதாலியதுமுன்மார்பில்தொங்குதங்கே
கண்டுஇடிவிழுங்காள்கட்டழகி அல்லியரும்
பார்த்துப்பதங்குலைந்தாள்பத்தினியாளல்லியரும்
இங்கிருந்தபாப்பாத்திஎங்கேபோனாள்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள்சீக்கிரமாய்வாருமென்றாள்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்தார்
தேடியலைந்தார்கள்திசையெட்டிற்கண்டதில்லை
எண்ணதுமெண்ணியவளிடிவிழுந்தாளல்லியம்மாள்
கத்தியெடுங்களடிகடுக அறுக்கவென்றாள்
கத்திகொண்டறுத்தாளேகாரிழையாளல்லியம்மாள்
இரம்பங்கொண்டறுத்தாலும்நாலுதுண்டாய்ப்போகுதங்கே
வாள்கொண்டறுத்தாலும்வாளுமடியுதங்கே
மெத்தவிசாரமிட்டுமெல்லிபுலம்பலுற்றாள்
கட்டிவிருதறுத்துக்கழுத்தில்தாலிகட்டினதார்
ஆறென்றறிவேண்டி ஆரணங்கேபவளசேனை
எவரென்றுயானறிவேன்ஏலப்பசுங்கிளியே
ஆறுயிரம்பாண்டியனை அழைத்தோடிவாங்கவென்றாள்
பொன்னின்மலைநாடாளும்பேரெடுத்தஅண்ணனையும்
அழைத்தோடிவாருமென்று இனுப்பினாள்தாதியரை
ஓட்டம்பெருநடையாய்ஓடிவந்தார்தாதியர்கள்
ஆறுயிரம்பாண்டியற்கும்அண்ணருக்கும்சேதிசொன்னாள்
மாதுகன்னியல்லியரைமங்கிலியஞ்சூட்டினார்கள்
கட்டினவிருதுகளைக்கடுகவறுத்தார்கள்
அல்லிப்பெருமாளும்அழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களையாவென்றுவணங்கினார்தாதியர்கள்
அந்தவுரைகேட்டுஆறுயிரம்பாண்டியர்கள்
அலைகுலையகதலைகுலையஅரைப்படவைநழுவிவிழ
அல்லியிடவாசலுக்குஅனைவோரும்வந்தார்கள்

மகளைக்கண்டல்லவோலயிறெறிந்துதானழுதார்
ஐயோமகளேயுன்னை அந்தீதம்பண்ணுவனர்
யானைத்தலைபோலேஅழகானமங்கிலியம்
முடாப்போலதாலியல்லோமுன்மார்பில்கட்டினதார்
இதுவென்னகாரணமோவென்றழுதார்பாண்டியர்கள்
கண்ணீரைவிட்டுமல்லோகததிப்புலம்புகிறார்
மகுடத்துரைச்சியவள்வாய்திறந்தேதுரைப்பார்
வயிற்றிற்பிறந்ததில்லைவன்கொடுமைசெய்ததில்லை
அங்கையற்கண்கிருபையாலேஅல்லிப்பிலேபெண்பிறந்தேன்
சொக்கர்கிருபையாலேதாமரையிற்பெண்பிறந்தேன்
ஏழுபிராயததிலேஎதிர்ந்துவந்தநீன்முகனை
வெட்டித்துணிந்துநான்வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும்பாருலகையாண்டிருந்தேன்
கொள்ளவருவார்க்குக்குறடாகுடுப்பேனென்றேன்
ஆளவருஞ்சம்மந்தியை அடிப்பேனென்றேன்சேருபந்தால்
கலியாணமென்றவரைக்கண்ணைப்பிடுங்கிடுவேன்
என்றுவிருதுகட்டிஎல்லையரசாண்டேனே
பொம்மைவிருதுகட்டி பூமியெல்லாமாளுகிறேன்
மூச்சுகொடிதெருவிற்கட்டிமுடிசூட்டியாளுகிறேன்
காணவருவாருங்கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும்பணிந்துகைகட்டுவாரும்
எதிரிகளில்லாமல்எல்லையரசாண்டேனே
அடியென்றழைத்தவர்கள் அவனியிலொருவரில்லை
வாடிபெண்ணேயென்றவர்கள்வையகத்திலாருமில்லை
மதிக்கும்படியாகமண்டலத்தையாண்டேனே
கட்டினவிருதருத்துக்கழுத்தில்தாலிகட்டினவன்
யாரோதெரியாதுஅந்தீதம்பண்ணுனே
ஆகாயலோகத்துஅமரரென்றுயானறியேன்
அந்தரலோகத்துக்கந்தருவரென்றறியேன்
மண்டலத்துராசாக்கள்மந்திரிகளென்றறியேன்
தீக்கோட்டையாண்டதொருதுரைகளென்றுயானறியேன்
ஆனைபோல்தாலிகட்டிப்பறையன்மகன்போனனே
முடாப்போலதாலிதொங்கமுடிசூடியாள்வேனோ
கண்டார்சிரிப்பாரேகலியுகத்தார்ஏசுவாரே
பார்த்தார்நகைப்பாரேபரியாசம்பண்ணுவாரே
சற்றும்மதியாரேதரணிதனிலுள்ளவர்கள்
நான்-செத்துமடிந்திடுவேன்சிவலோகஞ்சேர்ந்திடுவேன்
மாண்டுமடிந்திடுவேன்வைகுண்டம்சேர்ந்திடுவேன்
வல்லபிராணனைநான்கல்லோடேமோதிடுவேன்
சாவேன்கெடுவேனான்சமுத்திரத்தில்போய்விழுவேன்
முட்டிகொண்டாள்தரையோடே முகத்திலறைந்துகொண்டாள்
மார்பிலறைந்துகொண்டுமண்மேல்புரண்டழுதாள்

பாண்டியர் அல்லியம்மாளுக்குமனந்தேறுதல்சொல்லுகிறது.

ஆராயிரவர்களும்ஐயமாரேதுசொல்வார்
அஞ்சாதேஎன்மகளே ஆலோசனைசொல்லுகிறோம்
கட்டினதாலியைநீ கடுகஅறுத்தெறிந்து
விருதெடுத்துக்கட்டியல்லோ வெற்றியுடன்ஆளுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
கத்திக்கொண்டறுத்தாலும்கத்திமடியுதையா
வாள்கொண்டறுத்தாலும்வாளுமொடியுதையா
இரம்பங்கொண்டறுத்தாலும்இரம்பமொடிந்திடுதே
பட்டிமாடுபோலாகபறையன்மகன்கட்டினானே
கழுத்துமிகநொந்துதையா கட்டினதோர்தாலியாலே
எடுக்கமுடியவில்லைஎன்னசெய்வேனையாவே
ஆறென்றுநானறிவேனையாவேசொல்லுமென்றாள்
அறிந்தேனேயாமாகில்ஐந்துதுண்டாய்போட்டிடுவேன்
தெறிந்தேனேயாமாகில்சீவவதைசெய்திடுவேன்
என்றுசொல்லும்போதுசொல்லுவார்பாண்டியர்கள்
வந்தவரலாற்றைமக்களேநீர்சொல்லுமென்றார்
ஆனால்கேளையாவேஅற்பவதிசயங்கள்
பாதிவேட்டைபோனேனையாபாரவனந்தனிலே
ஆரோஒருவனவனம்புபொருக்கிதந்தான்
பார்த்தானேயாமாகில்பாணத்தார்போட்டிடுவேன்
அறிந்தேனேயாமானால்அம்புக்கிறைகொடுப்பேன்
காலும்பிடித்தானேகதையெனக்குச்சொன்னானே
அவன்முகத்தையான்பார்த்துஆயுதமெடுக்கப்போனேன்
ஓட்டம்பிடித்தானேஓடிவிட்டான்பாவிமகன்
மற்றொருநாளையிலேமதுரையிலேயொருவன்
பயித்தியக்காரனைப்போல்பவளகட்டுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்துதண்ணீரிலுரைத்தானே
வம்புதும்புஞ்சொல்லியல்லோமருந்தையவனுரைத்தான்
அவனையான்கொண்டுவந்து ஆக்கினைகள்செய்வதற்கு
ஆற்றிலேபோட்டவனை அம்பாய்புரட்டுமென்றேன்
அதினாலுஞ்சாகவில்லைஅரும்பாவியானவனும்
தூக்குமரத்திலேதுஷ்டனைப்போடுமென்றேன்
போடப்போனதாதியவள்பொலியானாள்செங்கமலம்
காளியம்மன்கோவிலிலேகடுகபொலிபோடுமென்றேன்
அக்காளிசெல்லியம்மாஆண்பெலிவேண்டேனென்றாள்
பூதக்கிடங்கிலேபோட்டவனைக்கொல்லுமென்றேன்
பூதங்களுள்ளதெல்லாம்போதப்பணிசெய்ததய்யா
அதினாலுஞ்சாகவில்லைஅரும்பாவியானவனும்
எவளோசிறுகன்னிஇந்திரம்பைபோலவந்தாள்
தன்கணவனென்றுசொல்லித்தனித்துப்புலம்பிவந்தாள்

அவனைத்துரத்திவிட்டேன் அழைத்துபோனாள்சீக்கிரமாய்
பண்டாரம்போலொருவன்படமெழுதிவந்தானையா
என்னைப்போல்படமெழுதி இங்கேமடலூர்ந்தான்
சொல்லாதவார்த்தைசொல்லிச்சோளிக்குச்சேலைகேட்டா
கொடுந்தாலேயல்லாதுபோகேனென்றான்பாவியவன் [ன்
பாம்புகளைவிட்டேனே பாவியைக்கொல்வதற்கு
ஆனைமதமேற்றி அவனையேகொல்லவிட்டேன்
எதாலுஞ்சாகாமல்இருந்தான்மகாபாவி
மற்றொருநாள்பிடாரனவன்வகைவகையாய்பாம்பெடுத்து
ஆடாதபாம்புகளை ஆடவைத்தான்வாசலிலே
மற்றொருநாளையிலேவனத்தில்நான்வேட்டைபோனேன்
தண்ணீர்களையாலேதாகவிடாய்பட்டுவிட்டேன்
காசிப்பிராமணன்போற்காசிதீர்த்தம்வார்த்ததுண்டு
வனவேட்டையாடியபின்மாளிகைக்குவரும்போது
தண்ணீர்பந்தல்போட்டிருந்தாள்தையல்பிராமணத்தி
பாராதேயென்றழுதாள்பறிதாபப்பட்டேனையா
மாளிகைவாசலுக்குமயிலணையைகூட்டிவந்தேன்
இலட்சுமிநோன்பென்றுநடத்தினாள்பாவியவள்
கலியாணச்சடங்குபோலகலசம்நிறுத்தினாள்
வேள்விவளர்த்தினாள்வேதங்களோதினாள்
பார்த்துமிருந்தேனேபண்ணினநோன்புகளை
கண்டுயிருந்தேனேகண்ணுறங்கி தூங்கிவிட்டேன்
பார்ப்பானைப்போலிருந்துபாவியவன்கட்டிவிட்டான்
ஆரென்றறிந்திடுவேன்ஐயாவேசொல்லுமென்றாள்
ஆராயிரவர்களும் ஆலோசனையேதுசொல்வார்
தேவனேயென்னாலேசெயிக்கமுடியாது
மண்டலத்துராசரென்றால்மாதேயறிந்திடலாம்
சீமைசீமைராசருக்குத்திருமுகமெழுதுமென்றார்
சொக்கலிங்கர்தன்னுடையசொர்ணமயச்சந்நிதியில்
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டர்சந்நதியில்
கோயிற்கெதிருககொப்பறையில்நெய்காச்சி
சத்தியங்கள்பண்ணச்சொன்னால்சாடையறிந்திடலாம்
மண்டலத்துக்கணக்கெழுதும்மதியுள்ளமந்திரியை
இராசசமர்த்தெழுதும்தன்மையுள்ளமந்திரியை
ஊர்கணக்கப்பிள்ளைகளை உத்தமரைத்தானழைத்து

அரசர்களுக்குத் திருமுகமெழுதி அனுப்புகிறது.

சீமைசீமைராசருக்குதிருமுகமெழுதுமென்றார்
என்னென்றுஓலைஎழுதுவதென்றாளே
அயோத்திகோசலமுஞ்சலகர்ணப்புரிதனிலே
ஆரியப்பளமும்அச்சிரமுந்தொழுமார்க்கம்

அங்கதேசம்கலிங்கதேசம் அவந்தி அளகாபுரி
மூய்சசியன் ஞாறு காவைமலையாளம்
அஸ்தினபுரம்சந்திரநாடு அழகுள்ள இந்திரநாடு
துலுக்காணம்பைகோவைதெலுங்குதேசந்தருமாபுரி
குருநாடுசிந்துதேசம்பங்காளம்காம்பில்யதேசம்
விசையபுரிவீமபுரிநேபாளம்யாழ்ப்பாணம்
மாட்டியம்சோமாபுரிமச்சதேசங்குடகுநாடு
சீனங்கிநஞ்சுமார்க்கம்பைந்தாசிங்காளமும்
ஆனைகுந்திபட்டணமும் அழகான் ஒட்டியமும்
ஐம்பத்தாறுதேசத்து அரசர்களானவர்கள்
நம்பிக்கைசெய்துநலமுடன் போவதற்கு
அல்லிமிகநினைத்து அரியக்கணக்கர்களை
மெல்லியாளல்லியம்மாள்மிகவுமேதானழைத்து
தேசதேசராசருக்குத்திருமுகமெழுதுமென்றார்
அப்படியேகணக்கர்களன்புடனெழுதுகிறார்
மதுராபுரியாளுகிறவாள்வாசியல்லியம்மாள்
சொக்கருளாலேசுந்தரியாள் தான்பிறந்தாள்
அங்கயற்கண்ணருளாலே அல்லியருந்தான்பிறந்தாள்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீண்முகனை
வெட்டித்தலைதுணித்துவீரபட்டங்கட்டினவள்
பன்னிரண்டுபிராயமட்டும்பாருலகையாண்டகன்னி
விருதுகொடிகட்டியல்லோ வேணமட்டுமாண்டவள்தான்
ஆராயிரம்பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியம்மாள் தன்கழுத்தில் ஆரோதெரியாது
தென்மொழியாள் தன்கழுத்தில் திருட்டுத்தாலிகட்டினார்
கழுத்திலேதாலிகட்டிக்கட்டினவிருதாறுத்தான் (கள்
இன்னவனென்றுசொல்லஎனக்குத்தெரியாது
சீமையிலுள்ளதொருதுரைகள்யேலெந்தனுக்கு
ஐயறவுதோன்றியது அரசமன்னராசர்களே
சீமையாளும்ராசர்கள்துரைகள்வரவேண்டும்
எல்லையரசரும் இராசாக்களிங்குவந்து
கழுத்திலேதாலியதுகட்டவில்லையென்றுசொல்லி
நாங்கள்சொன்னநம்பிக்கையைச்செய்துகொடுக்கவேண்டும்
ஓலையைத்தள்ளிவிட்டுவாராதிருந்தோர்களை
கோட்டையிடித்திடுவேன்கொத்தளங்கள்பேர்த்திடுவேன்
அரண்மனையைநாநிடித்து ஆமணக்குவிதைத்திடுவேன்
ஆண்சிறையுபெண்சிறையுமடங்கலுநான்பிடிப்பேன்
வெட்டித்தலையறுப்பேன்வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்குவந்திடுங்களென்றுசொல்லி
எழுதுமென்றாளோலையது இளங்கொடியாளல்லியம்மாள்
அவ்வார்த்தைதான்கேட்டன்பான மந்திரிகள்

சேமக்குருத்தோலைசீக்கிரமாய்த்தானெடுத்து
ஈழப்பனையோலையிருபக்கங்காம்பரித்து
தாளிப்பனையோலைதலைபக்கங்காம்பரித்து
வாரியவோலையிலேவக்கணைகள்தானெழுதி
செந்திரிக்கம்போட்டுமல்லோசீக்காமுத்திரைவைத்து
அல்லியம்மாமுன்புவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஆரடாசிட்டியல்லாயிரம்பேரொழுந்திருங்கள
சீமையுள்ளராசருக்குச்சுருளோலைகொண்டுபோங்கள்
மல்லரொழுந்திருந்துவாங்கினாரோலைதன்னை
காலால்நடவாமற்காற்றாய்ப்பறந்தார்கள்
மதுரையைத்தாண்டியவர்வனங்கள்புகுந்தார்கள்
காடுசெடிதாண்டிக்கரியமலைதான்தாண்டி
சீமைசீமைராசருக்குத்திருமுகந்தந்தார்கள்
ஓலைச்சுருள்விரித்தாருலகாளும்ராசாக்கள்
அதிலிருந்தமர்மமெல்லாம்அனைத்துமறிந்துகொண்டார்
நாமும்வருவோமென்றார்இராசாத்திசொர்ப்படிக்கே
நம்பிக்கைதான்கொடுத்துநலமுடனேவருவோமென்றார்
தருமபுரமாளும்தருமருக்கோலைதந்தார்
சந்தணவடிவழகர்தருமரவரோதுசொல்வார்
சீர்கணக்கனையழைத்துசுருளோலைபடியுமென்றார்
அப்போதுகணக்கப்பிள்ளையன்பாய்சுருள்விரித்து
படித்தார்களோலைதனைப்பார்வேந்தர்கேட்டுவிட்டார்
சந்தணவடிவழகர்தருமராதுகேட்டு
நாமும்வருகிறோம்ராசாத்திகொலுவுக்கென்றார்
மாயன்பெருமாட்குவந்ததேசுருளோலை
ஓலையதுபடித்துஉலகளந்தமாயவரும்
நாமும்வருகிறோம்நடவுங்கள்தூதரெல்லாம்
சீமையிலுள்ளதொருதுரைகளுக்குசொல்லிவந்தார்
காடுசெடிதாண்டிக்கடுகிவந்தார்தூதரவர்
அல்லியம்மாள்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டா
சீமைசீமைராசருக்குசொல்லிவந்தோமாச்சியென்றார் [ர்
சீமைகளிலுள்ளதுரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்துராசாக்கள்மகுடமன்னர்வாரார்கள்
திக்கெட்டையாண்டதொருதுரைராசர்வாரார்கள்
சந்தணவடிவழகர்தருமரவரோதுசொல்வார்
ஆரடாதூதுவரோஅலங்காரமல்லர்களே
மாயன்பெருமாளைவரவழைத்துவாருமென்றார்
ஓட்டம்நடையுமாகஓடிவந்தார்தூதுவர்கள்
மாயன்பெருமாட்குவந்துமேதெண்டனிட்டார்
சந்தணவடிவழகர்தருமருமைக்காணவென்று
கூட்டிவரச்சொன்னார்காண்கோபாலசுவாமியென்றார்
அப்போபெருமாளும்அக்கணமேதானெழுந்து

தாரகனையெச்சரித்துசுவாமிரதம்வேண்டுமென்றார்
கொண்டுவந்தான்தாரகனும்கொப்பெனவேசித்ரரதம்
ஏறினார்தேர்மேலேயெம்பெருமாளாண்டவரும்
காடுசெடிதாண்டிக்கடிகிவந்தார்தர்மபுரம்
கோபுரவாசலண்டைகோபாலர்தானிறங்கி
மாயன்பெருமாளும்மாளிகையில்வந்துவிட்டார்
தரணியளந்தமாயன்தருமருக்குதெண்டனிட்டார்
சிங்காதனமபோட்டுஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இட்டசிம்மாதனத்திலெம்பெருமாள்வீற்றிருந்தார்
என்னையழைத்ததுதானேதுகருமமென்றார்
தாரார்புகழுடையதருமரவரோதுசொல்வார்
மதுராபுரியாளுகின்றவாழ்வரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியம்கட்டியேபோனார்களாம்
திக்கெட்டையாண்டநல்லதுரைகள்மகாராசருக்கு
சுருளோலையெழுதியல்லோஅனுப்பினாள்தேசத்திற்கு
நம்பிக்கைசெய்துபோகநமக்கோலைவந்ததையா
அர்ச்சுனருநீருமாகஆரணியம்போநீர்களே
காசியாத்திரைபோனபோதுகளவுசெய்துவந்ததுண்டோ
கறுதலைப்பெட்டிமகன்தாழ்வுசெய்துவந்ததுண்டோ
குற்றங்களுண்டானால்கோபாலாசொல்லுமென்றார்
அருச்சுனன்றன்னாலேயழும்புண்டோசொல்லுமென்று
நான்-ஒக்கநடந்தேனேஒருபாவங்கண்டதில்லை [ர்
கூடநடந்தேனேகுற்றங்கள்நானறியேன்
அழும்புகளுண்டானாலருண்மைந்தாசொல்லேனே
எந்தனுக்குமோலையதுயெழுதிவரவிட்டாள்காண்
நானுமிதோபோறேன்மதுரைசீமைக்கு
வீட்டுக்கொருவரல்லோவேந்தர்கள்போகவேணும்
ஐவர்களிலொருவராராகிலும்வாருமென்றார்
ஆரையழைத்துப்போறீரரிராமர்சொல்லுமென்றார்
வெற்றிமதயானைவீமனையழைத்துப்போறேன்
நம்பிக்கைதந்துவிட்டுநாங்களும்வந்திடுவோம்
போய்வாருமென்றப்புண்ணியருஞ்செலவுதந்தார்

கிருஷ்ணசுவாமியும்வீமனும்மதுரைக்குப்போகுதல்

வெற்றிமதயானைவீமனெழுந்திருந்து
சந்திரகாந்திநட்டிகட்டித்தாமரைம்பூசங்குவிட்டார்
அம்புவில்லும்கைபிடித்துஅம்புறாதூணிமுதுகணிந்து
தேரின்மேலேறினானேதிக்குவிசயங்கொண்டவீமன்
மாயன்பெருமாளுமச்சுரதமேறிவாரார்கள்
இருவருமாகவல்லோரதமேறிவாரார்கள்
தருமாபுரந்தாண்டிவீமாபுரந்தாண்டி
காடுசெடிதாண்டிகரியமலைதான்றாண்டி
ஆறுசுனைதாண்டியதிகவனந்தாண்டி

வனமாய்வனந்தாண்டிவந்துவிட்டார்தென்மதுரை
மண்டலத்துராசரெல்லாம்வந்தார்மணிபுரத்தில்
முடியோடேமுடிவணங்கமுடிமன்னர்வந்துவிட்டார்
வச்சிரக்கிரீடங்கள்மணிமுடிநெருங்குதங்கே
எல்லையரசாண்டராசரெல்லோரும்வந்தமர்ந்தார்
ஆறுயிரவரிடஅல்லியருந்தானறிந்தாள்
மகுடத்துரைச்சியவள்வாய்திறந்தேதுசொல்வாள்
மாணிக்கச்சொக்கலிங்கம்மகாதேவர்கோவிலண்டை
கோபுரவாசலண்டைகொப்பரைவையுமென்றாள்
ஆயிரக்கலநெய்விட்டு அக்கினியைமூட்டுமென்றாள்
பாதாளக்குழிபறித்துப்பாங்கானபள்ளம்வெட்டி
இருப்புநல்லகொப்பரையையெடுத்துவந்துவைத்தார்கள்
ஆயிரக்கலநெய்வார்த்து அக்கினியைமூட்டினார்கள்
நெய்யைகொதிக்கவைத்துநேரிழைக்குசேதிசொன்னார்
பதினாங்கலநெல்லெடுத்துப்பாங்கியரோவையுமென்றாள்
அம்பாரம்போடுமென்றாளாண்டவனார்சந்நிதிமுன்
சம்பாநெல்லுங்காறுநெல்லும் அம்பாரம்போட்டார்கள்
மகுடத்துரைச்சியற்குமணிஆசனம்போட்டார்கள்
ஆறுயிரவர்களும்அல்லியருந்தானெழுந்து
ஆலயந்தன்னருகேவந்தார்களல்லவரும்
கோபுரவாசலண்டைகொப்பரையேவந்தார்கள்
மகுடத்துரைச்சியுமவந்தமர்ந்தாள்ஆசனத்தில்
வந்தவந்தராசரெல்லாம்வீற்றிருந்தாரெத்திசையும்
அல்லிப்பெருமாளும்ஆரணங்குமேதுசெய்வாள்
கேளுங்கள்ராசர்களேகீர்த்திபெற்றமன்னர்களே
ஆலவாய்ச்சொக்கலிங்கம்ஐயர்தன்கிருபையாலும்
அங்கயற்கணம்மைஆச்சிசெயலாலும்
அல்லியிலேமேலேயாரணங்குபெண்பிறந்தேன்
ஒருவர்-வயிற்றிற்பிறந்ததில்லை உன்கொடுமைசெய்ததி
ல்லை, குடவிற்பிறந்ததில்லைகுலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில்வுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கின்றகாற்றதனில்அலைகாற்றிற்றுரும்புமுண்டு
ஆலாலமுண்டவர்க்குகண்டங்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காணலும்கொஞ்சங்கறுப்புமுண்டு
எனக்கு-மயிரேகறுப்பொழியமற்றுக்கருப்புமில்லை
புருவங்கறுப்பொழியப்பின்னைக்கருப்புமில்லை
மாசில்லாபெண்பிறந்தேன்மீனாட்சிதன்செயலால்
ஏழுபிராயத்திலேஎதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைதுணித்துவீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பனிரெண்டுபிராயமட்டும்பாருலகையாளுகிறேன்
வாடியென்றழைத்தவர்கள்வையகத்திலாருமில்லை

வம்புதும்புஞ்செய்தவர்கள்மண்டத்திலாருமில்லை
யாரோதெரியாதுஅனியாயம்பண்ணுரோ
காணுமல்மங்கிலியம்கட்டினூரென்கழுத்தில்
இன்னாரினியாரென்றெனக்குத்தெரியாது
யானையினாலேதானழைப்பித்தேனுங்களைநான்
நானறியேனென்றுசொல்லிநம்பிக்கைசெய்திடுங்கள்
கொதிக்கின்றநெய்தனிலேகொப்பெனவேகையிடுங்கள்
அம்பாரம்போட்டநெல்லையள்ளிமிட்டிடுங்கள்
நெல்லளிமிட்டாமற்போனவனைவிடுவதில்லை
கைகளதுகொப்பளிக்கக்கண்டேயுண்டானால்
வெட்டித்தலைபிளப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
நாகலோகம்போனாலும்நானவனைவிடுவதில்லை
ஆகாயம்போனாலுமவனைநான்விடுவதில்லை
வானத்திற்போனாலும்வலைகட்டினூன்பிடிப்பேன்
பாதாளம்போனாலும்பேதிப்பேன்பைங்கொடியாள்
விட்டுவிடுவேனென்றுசற்றுமனமெண்ணவேண்டாம்
சத்தியத்தைசெய்துநீங்கள்தப்புவுடனேபோயிடுங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டுஅநேகங்கோடிராசரெல்லாம்
எழுந்தார்கள்சபையிலேயதுசொல்வாராசாக்கள்
அன்னநடைமாதேயாராணங்குநாயகமே
பாருலகையாண்டதொருபாண்டியர்கள்சீர்மகளே
செங்கோல்முடிசூட்டித்துரைத்தனங்கள்செய்பவளே
உன்னூரறியோம்பேரறியோம்ஒருசெய்கையாமறியோம்
மங்கிலியந்தொட்டுமல்லோதரித்தவகையறியோம்
அறிந்தோமேயாமாகிலழும்புவருமெங்களுக்கு
அக்கினிக்கேதிகாரனவரும்வந்துநின்றார்
மகுடமுடிராசாக்கள்வந்தவர்கள்தாமெழுந்து
நெய்க்கிடாரந்தன்னருகேஅக்கினிக்குமுன்னாலே
இருகையைக்கட்டியவரோதுசொல்வார்மன்னவர்கள்
ஐயாபிடாரிகளேஆகாயதூர்க்கிகளே
அந்தாதேவதையேசந்திரசூரியரே
இந்திரப்பிரம்மாவேகர்த்தர்வரிஷிகளே
ஆலவாய்ச்சொக்கலிங்கமங்கையற்கண்ணம்மையே
மாணிக்கச்சொக்கலிங்கமகாதேவரீஸ்வரரே
ஏதுமறியோமென்றுஇருகையைத்தானெடுத்து
மாதருக்குமங்கிலியம்தரித்தவகையறியோம்
ஏதுமறியோமென்றிருகையைத்தானெடுத்து
காய்கின்றநெய்தனிலேகையைவைத்துவந்தார்கள்
அம்பாரநெல்லையெல்லாமள்ளிமிட்டினூர்கள்
ஒவ்வொருமன்னர்களாய்ச்சோதனைதந்தார்கள்
மாயன்பெருமாளும்வந்துசத்தியம்பண்ணுரோ
வெற்றிமதயானைவீரனெழுந்திருந்து

நெய்கிடாரந் தன்னருகே நேரே வருகையிலே
அக்கினியாய் வீசாது அருகில்வரவொட்டாமல்
வெந்துகருகிறது வீமனது தேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரோ திருட்டுகிருஷ்ணு
முன்னிட்டகாலையவன் பின்னிட்டுவாங்கிக்கொண்டான்
அக்கினிபகவானை ஆயரும் கைதொழுது
எம்பெருமாள்மாயவரும் பாரை நினைக்கலுற்றார்
என்னபுதுமையிது எம்பெருமாளென்றுகேட்டான்
அருகில்வரவொண்ணாமல் அக்கினியாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணாமல் செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவம்நானறியேன் என்னதுவினையென்றறியேன்
ஒருநன்றிசெய்தவனாயுள்ளத்தில்வைக்கவேணடும்
அக்கினிபகவானே அர்ச்சுனனு நமக்கு
அத்தனைசகாயஞ்செய்தா ரெல்லாமறந்தீரோ
மருகின்றவுன்னையந்தவாழ்விசையன்காத்தானே
அந்தச்சகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னவன் பெண்ணரசியாலேயிட்டாள்
உந்தனுக்குக்கோபமேனவருத்துவானேன் செந்தணலாய்
கோபத்தைதையாதே குளிர்ந்தசலம்போலிருங்காண்
என்றுதொழுதாரே யெம்பெருமாள்மாயவரும்
ஆயாதுசொற்கேட்டக்கினிதேவரவர்
குளிர்ந்தசலம்போலாகக்கொப்பெனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனுவார்த்தைகேளும்மைத்துனரே
மாதினுக்குமங்கிலியம்மதவீயாதறிகதுண்டோ
செய்ததேயுண்டானால்சேரவொட்டாது
கலக்கங்களுண்டானால்கட்டழகாதூரநில்லு
மனதிற்கபடுகளும்வஞ்சனைகளில்லையென்றால்
இராசாக்கள்போலேநீநம்பிக்கைசெய்யுமென்றாள்

வீமராசன்நெய்குடித்துவிட்டுக்கொப்ப
றையையுருட்டினது.

மறுபடியும்வீமராசன்மன்னவனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகேகொப்பரைவேவந்துநின்றார்
மணக்கின்றநெய்தன்னைமதவிசயன்பார்த்துவிட்டான்
தூக்கினான்கொப்பரையைத் துரிதமாய்நெய்யையெல்
வெற்றிமதயானைவீமனவன்வந்துவிட்டான் [லாம்
மாயனுடனுகைவழிபிடித்துபோய்நடந்தார்
மதனைத்தெருதாண்டிவனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டிகரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டியதிகவனந்தான்தாண்டி
தருமாபுரிபட்டணத்தில்தார்வேந்தர்வந்துவிட்டார்
அல்லிப்பெருமாளுமாரணங்குமேதுசொல்வாள்

இத்தனைபேர்தனிலேயெவனைத்திருடனென்பேன்
அநேகங்கோடிராசர்களிலாரை திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தாரோ தாணியுள்ளராசரெல்லாம்
நெய்யிலேகைதோய்த்துநெல்லைமிட்டிவிட்டார்
சோதனைகாட்டிபல்லோர்துரைகளெல்லாம் போரையிலே
அனைவோரைபோலாகஅவனுங்கைதோய்க்கவேண்டும்
கொதிக்கின்றநெய்யதனைகுடிக்கவிதிமுறையோ
திருடருக்கு தெய்வமுண்டோ சோரருக்கு நேசமுண்
வானஞ்சுழல்வதற்குமருந்துண்டவன்கையில் [டோ
வண்ணமருந்தெடுத்துத்தண்ணீரிலுரைக்கலையோ
வம்புதும்புபேசியவன்வாய்பழுதுசொல்லலையோ
ஆற்றில்புரட்டியல்லோ ஆனைநான்கொல்லுமென்றேன்
அவனுடையமந்திரத்தாலாற்றைத்தடைக்கலையோ [ன்
தூக்கிலேபோட்டவனைத்தோழியரே கொல்லுமென்றே
தாதியைக்கொன்றுவிட்டான்தந்திரவித்தையினால்
காளியம்மன்கோவிலுக்குகாவுகொடுங்களென்றேன்
வடவாசல்செலவியரைவாய்தடைகட்டிவிட்டான்
பண்டாரம்போலேவந்துபடப்படித்தார்வாசலிலே
வம்பானவார்த்தைகளும்வாய்பழுதுஞ்சொன்னானே
அரவத்தைவிட்டுநானுண்டியைக்கொல்லுமென்றேன்
பாம்பைதடைகட்டினானேபாதகனவனும்
யானையைமதமேற்றியாண்டியைக்கொல்லுமென்றேன்
யானைதடைகட்டினானரும்பாவியானவனும்
வேதியனைப்போலாகவேள்விவளர்த்தினானே
மறையவனைபோலேவந்துமங்கிலியஞ்சூட்டிவிட்டான்
நெய்யைகுடிக்கயவன்வகையறியமாட்டானோ
மலையாளவித்தைகளுமந்திரமுங்கற்றபாவி
எந்தவூராசாவோவெனக்கறியச்சொல்லுமென்றாள்
தருமாபுரமாளும்தருமர்தம்பிவீமனென்றார்
நெய்யைக்குடித்தவனும்நிகரில்லாவீமனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டல்லிப்பெருமாளும்
எட்டிப்பழம்போலேஇருகண்ணுந்தான்சிவந்து
உருகியசெம்பொன்உதிரம்போல்கண்சிவந்து
தருமாபுரமுள்ளதெல்லாம்தவிடுபொடியாக்கி
தங்கமதில்கோபுரத்தைதரையோடேசாத்திடுவேன்
ஆமணக்குப்பருத்தியுமாய்மடங்கலும்விளைத்திடுவேன்
ஆண்சிறைபெண்சிறையடங்கலும்நான்பிடிப்பேன்
பயணம்பயணமென்றுபயணபேரிபோடுமென்றாள்
வெட்டியானைதானழைத்துவீரமுரசையூதுமென்றாள்
ஆறாயிரம்பாண்டியர்கள்மடங்கலும்பயணமென்றாள்
இன்றுவெளிகூடாரமியலுடனேபோடுமென்றாள்
சண்டாவைநாட்டுமென்றாள்தபுரையடியுமென்றாள்

அப்போதுசாம்பவனும்யானையேறிமாலைசூட்டி
அடித்தான்பாரியாசை அம்மதுரைநாகதிர
மதுரைப்படைகளெல்லாம்வாருங்களென்றுசொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அனைவோரும்வாருமென்று

அல்லியரசாணிபஞ்சபாண்டவர்பேரில் சண்டைக்குவருகிறது.

மதுரைப்படைகளும்மகாசனங்களுள்ளவரும்
எண்ணாதஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டார்
அமரதருஞ்சமரதரும்அஸ்திரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களுங்கன்னிடயானவரும்
ஈழத்துவங்கணரும்இளநாட்டுச்சோனகரும்
ஆரியருமாரியரும்அனைமலைத்துநாவர்களும்
உடையவருஞ்சூதகருமொட்டியரும்பார்ப்பாரும்
சிட்டிமன்னர்தேசமன்னர்உரைமன்னர்போர்மன்னர்
குறவர்மறவர்களுங்குச்சிலியருள்ளவரும்
வன்னியர்துலுக்கர்களும்மாட்டியருள்ளவரும்
வேடருவில்லியரும்வேணசனமுள்ளவரும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அநேகஜனம்வந்தார்கள்
பட்டயஞ்சூரிகளும்பாரியமுசல்சமுதாடும்
நிலையில்சுடுங்குண்டுகளும்கேரிசமாம்பெரியகத்தி
கூலிசமும்சூலிசமும்குண்டுதுப்பாக்கிகளும்
மண்வெட்டிகோடாலிவல்லயமிருப்புலக்கை
வாளுகளும்வேலுகளும்வளைதடிசக்கரமும்
கண்டகோடாலிகளும்கவண்டுகல்லுண்டுவில்லுஞ்
சிங்காணிபூச்சிவில்லும்சேனவிதஆயுதமும்
இரம்பமும்பாசங்களும்நாலெட்டுஆயுதமும்
எண்ணாதஆயுதங்களெடுத்தரையிற்கட்டினார்கள்
சட்டைதமான்கச்சிரப்பாய்தரித்தார்களெல்லவரும்
சண்டைக்குமுஸ்தீபாய்ச்சமர்த்தரெல்லாம்வருகிறார்
வந்துநிறைந்தார்கள்வளம்பெருஞ்சேனையெல்லாம்
யானைகளோ ஆறுலட்சம் அசுவங்களேழுலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம்ஒன்றாகக்கூட்டினார்கள்
கார்மேகம்போலாகக்கருத்தானைகூட்டம்வரும்
செவ்வானம்போலாகச்செவந்தபுரவிகளும்
வந்துநிறைந்தார்கள்வாழ்வரசியல்லியண்டை
பொன்னின்மலைநாடாளும்பேரொடுத்தஅண்ணாவை [ணா
அண்ணாவைத்தானழைத்து ஆளுமென்றார்பொன்மது
வென்றுகெலித்தான்விருதுகட்டிவருமளவும்
செயித்துவருமளவுந்தென்மதுரையாளுமென்றார்
முத்துபடுந்துறையும்முனைவீரர்பட்டுறையும்
யானைபடுந்துறையுமடங்கலும்பதனமென்றார்
பவளம்படுந்துறையும்பட்டணமுபத்திரங்கள்

கப்பற்பரிந்துறையாங்கடற்சோங்கும்பத்திரங்காண்
செயித்துவருமளவுஞ்சீர்மதுரையாளுமென்றார்
பயணம்பயணமென்றுபயணபேரியடியுமென்றான்
அம்பெடுத்துவில்லெடுத்துஅம்புறாத்தூணிமுதுகணிந்து
எல்லாரும்பயணமென்றுவரிஞர்தேர்மேலே
வானத்துமேகம்போலேமணிரதங்கள்வருகிறது
ஆறாயிரந்தேரும்அணியணியாய்வருகிறது
சொக்கலிங்கந்துணையென்றுதேரைநடத்தினளே
அச்சுகிடுகிடென்னயானைநெடுந்தேரசைய
வண்டில்கிறுச்சியிடமதயானைகோஷ்டமிட
குதிரையனுமாணிக்கக்கோடிமன்னர்சத்தமிட
வெய்யனுக்கெடுத்தார்வெள்ளைநல்லகூடாரம்
காலுக்கெடுத்தார்கறுப்புநல்லகூடாரம்
கறுப்புநிஜான்சிவப்புநிஜான்கலந்துபறக்குதுபார்
அல்லிக்கொடிவிருதுஅலைகிறதுதேர்மேலே
மஞ்சட்கொடிபறக்கமகரதோரணமசைய
வருகிறதேழுபலம்மண்ணிடங்கொள்ளாமல்
ஆற்றுமணல்போலேயனேககோடிசேனைவரும்
மேகம்புரண்டாற்போல்வேணசெனங்கள்வரும்
காட்டுக்களாப்பூவுங்காளான்முளைத்தாப்போல்
சுற்றிக்குடைபிடித்தார்சூரியன்தோற்றாமல்
பக்கங்குடைபிடித்தார்பகலவனைக்காணாமல்
செந்தூளெழும்பினதேசூரியனைக்கப்பிற்றங்கே
அடிபடுதேபேரிகைகளந்தக்காந்தாளதிர
யானையின்மேல்பேரிகைகள்குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்துதாரைசையெழும்பினதே
வெண்கலபேரியதுவிருதுமுழங்கிறதே
பாஞ்சசன்னியம்தேவதத்தம்பலவிருதும்தான்முழங்க
சசசரிதைவீணைகளுந்தாக்கிமுரசறைய
ஓற்றைவாசலங்கமதுஊதுகிறாருலகதிர
மதுராபுரியைவிட்டுவன்காட்டில்போகலுற்றார்
காடுசெடிதாண்டிக்கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டிஅதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம்வெண்களாம்பூத்தவனம்
அண்டற்கரியாதஇருண்டவனந்தாண்டி
தருமாபுரிபட்டணத்தைதானடுத்தாளல்லியம்மாள்
பட்டணத்தைசுற்றிக்கொண்டுபாளையஞ்சூழ்ந்தாளே
பஞ்சவர்ணகூடாரம்பலதிசையும்போட்டார்கள்
இலட்சணைபோட்டாளேஇராசாத்தியல்லியம்மாள்
சண்டாவைநட்டார்கள்தமுறடித்தார்பாளையத்தில்

ம௫

அடிபடுதேராயபேரி அடிவானத்திடிபோல
கோண்டகாலத்திடிபோல்குமுறுதேராயபேரி
செவ்வானத்திடிபோலசேரமுழங்கிறதே
சத்தத்தொனியதுதான் தருமரவர்கேட்டுவிட்டார்
ஊரிலுள்ளசெனங்களெல்லாம்ஓடிவந்துபுலப்புகிறார்
சந்தணவடிவழகர்தருமலிங்கமகாராசர்
வெற்றிமதயானைவீமனைதானழைத்தார்
ஆணழகுமன்னனருச்சுனனைத்தானழைத்தார்
நகுலசகாதேவராசாக்களைதானழைத்தார்
மாயன்பெருமாளைமனதிலேதானினைத்தார்
அடியளந்தமாயவரேஆதிமூலம்வாருமென்றார்
வாருமென்றபோதேவந்தாரேயெம்பெருமாள்
சந்தணவடிவழகர்தருமருக்குசரணஞ்செய்தார்
கூடசரணஞ்செய்தார்கோபாலர்மாயவரும்
என்னையழைத்ததுதானேதுகருமமென்றார்
பட்டணத்தைச்சுற்றியல்லோபாளையங்கள்வந்ததுகாண்
கோட்டையைச்சுற்றியவர்முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென்று தமுருபடித்தார்கள்
சண்டைநிசான்ட்டார்கள்தண்டுவந்திறங்கினதே
எந்தவூராசாவோஏதுமறியேனே
ஆளோடவிட்டுநீங்களறிந்துவரச்சொல்லுமென்றார்
அர்க்காறொருவனைத்தானனுப்பினார்மந்திரியை
வந்தவராரென்றுவார்த்தையறியுமென்றார்
ஒற்றொருவனவன்ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரில்வந்துபாங்குடனேதெண்டனிட்டு
எந்தவூராசனையாளதற்காகவந்தீர்கள்
சண்டைபண்ணவந்ததொருவயணமென்னராசர்களே
சொல்லுங்களையாவென்றுதெண்டனிட்டார்வந்தவர்கள்
மந்திரியுங்கேட்கையிலேமகாரரசரேதுசொல்வார்
மதுராபுரியாளும்வாழ்வரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியம்கட்டினாரவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோபுகழ்வீமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்யஅனேகதளங்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிகெலிக்கச்சொல்லும்சாமார்த்தியராசர்களை
வந்தாலேயாச்சுதுவாராமலிருந்தாக்கால்
நாளை-கோட்டையிடித்திடுவோம்கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
தங்கமதில்கோபுரத்தைத்தரையோடேசாய்த்திடுவோம்
ஆமணக்கம்பருத்திமடாவிதைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையுமடங்கலும்பிடித்திடுவோம்
கடுகவரச்சொல்லும்கட்டழகாராசர்களை
அவ்வார்த்தைதான்கேட்டுஅழகானதூதுவர்கள்

சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து மந்திரியுமேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசிகன்னியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினராமவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ வந்தாரம்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டிவந்தாள்
சண்டைக்குவந்தாலே அல்லதுராசாவே
கோட்டையிடிப்பேனென்றாள் கொம்மைபறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமலிங்கராசாவே
என்றுசரணமிட்டா னியலானதூதுவனும்
தக்கப்புகழுடைய தருமராதுகேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைதான்பார்த்து
தையலிளங்கொடிக்கு சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைபோநீர்களே செய்தியென்னசொல்லுமென்றார்
அங்கேநடந்ததொரு அதிசயத்தைச்சொல்லுமென்றார்
அருள்மைந்தர்மருக் கிராமரேதுசொல்வார்
மண்டலத்துராசாக்கள்வந்து சத்தியம்பண்ணார்கள்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகைநுழைத்து
சத்தியங்கள்செய்யாமல் தாமந்தவாழ்மார்பன்
கொதிக்கின்றநெய்தனைக் கொப்பரையோடெடுத்து
நெய்யைக்குடித்துவிட்டு கொப்பரையையுருட்டிவிட்டான்
மகப்பட்டவீமன்செய்த வண்மையினாலிப்பொழுது
சண்டைக்குவந்தாளே சாமார்த்தியமுள்ளகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றும்விடலாகாது
சண்டைகளைச்செய்யவேணும் சமர்த்தறியவேணுமென்றார்
வந்தசண்டைவிடலாமா வளம்பெரியதருமரேசொல்
பின்னுக்கிடைந்தாலே விடுவாளோபெண்ணரசி
வென்றுசெயிக்கவேண்டும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட் டருண்மைந்தரேதுசொல்வார்
ஆரையனுப்புவோம் யமராதுசெய்யவென்றால்
எவரையனுப்புவோ மெம்பெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராசாக்கள்தங்களையும்
வெற்றிமதயானை வீமனையனுப்புமென்றார்
மூவருடனாக வெகுசனங்கூட்டுமென்றார்
நானுங்கூடப்போறேன் ராசாவேயஞ்சாதே
வென்றுசெயித்துநான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு சண்டைக்குவருகிறது.

தருமராதுசேனைகளைச் சகலசெனம்வாருமென்றார்
இன்றுவெளிகூடார மியலுடனேபோடுமென்றார்

சண்டைமுரசூதுமென்றார் சண்டைகொடிநாட்டுமென்றார்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்கள்சொன்னார்கள்
ஆரடா தேர்பாகா அலங்கரியுந்தேரையென்றார்
தேர்ப்பாகனோடிவந்து தேரையலங்கரித்தான்
ஆறுவண்டி நாறுசட்டம் மழகானகுத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைதிரைவளைத்து
கும்பகலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
அழகானசிலையினு லலங்காரம்பண்ணனே
நாலுபக்கஞ்சாலர்களும் நவரத்னதோரணமும்
கண்ணாடி சல்லிகட்டி கவரிபான்குச்சுவிட்டு
ஐந்துகொத்தாராச்சி யழகுமணிகட்டினானே
நவகண்டவீரமணி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசாரிபுரவியொன்றும பஞ்சகல்யாணியொன்றும்
தேசிஎன்னும்புரவியொன்றும் சிவரத்னப்புரவியொன்றும்
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்தில்கொலுசுகளும்
முன்னாலேசுட்டிகளும் பின்னாலேகுச்சுகளும்
மாணிக்கக்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரின்மேலேறினானே சீக்கிரமாய்புரவிகளை
சாய்ந்திருந்து சண்டைசெய்ய சார்மணைபோட்டானே
குந்தியேசண்டைசெய்ய குறிஞ்சிப்பூமேடையிட்டான்
ஒளிந்திருந்துசண்டைசெய்ய ஒருகுதலையணைகளிட்டார்
சந்தணப்பொட்டுமிட்டு சாம்பிராணி தூபமிட்டான்
தேரையலங்கரித்து தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லியடிவணங்கிதெண்டனிட்டான்
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசரவரெழுந்து
ஆயர்பெருமானு மரிராமர்தாமெழுந்து
மகுடமணிந்தார்கள் வாகுவலயமிட்டார்
வாள்களுங்கத்திகளும் வலதுகையில்தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்தார்
சட்டைதமான்வச்சிரப்பாய் காமணிந்தாராசரெல்லாம்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிபூச்சவில்லும்
வச்சிரகதையணிந்தான் மதவீமராசனவன்
தண்டாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சண்டைக்குமுஸ்தீதாய்ச் சமர்த்தர்வெளியானார்
அருச்சுனரதுவறிந்து ஆபரண்டைஓடிவந்தார்
அல்லியவளோடே அமருக்குப்போரீரே

அவள்மேலேஅம்புபட்டால் என்னுயிருருகிவிடும்
சிவனழிந்திடுவேன் செலவழிந்துபோவேனென்றான்
மாண்டுமடிந்திடுவேன் மாதருக்குப்பாணம்பட்டால்
எந்தவிதமானாலு மிட்டுவரவேண்டுமையா
பொற்கொடிமாதரைநீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சுனரே நமக்குதெரியவரும்
எந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்போ
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்வேன்போ
என்றுமேசொன்னாரே எம்பெருமாள்மாயவரும்
அப்போதருச்சுனரு மாணழகர்தாமெழுந்து
வெற்றிமதயானை வீமனண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணாமதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குப்போறீரே
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணாவே
வில்வித்தைசெய்யவேண்டாம் விசைபாணம்போடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாருந் தாமந்தவாழ்மார்பா
என்றுதொழுதானே யெழில்விசையனருச்சுனனும்
அவ்வார்த்தைதான்கேட்டு வாணழகனேதுசொல்வான்
நல்லதுதம்பியரே நமக்குத்தெரியவரும்
என்றுசொல்லிமதவீம னேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
முத்துக்குடைகளுமே முழுவயிரநற்குடையை
பட்டுக்குடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
கிருஷ்ணரதுதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமரதுதேர்மேலே சிங்கக்கொடிபறக்க
நகுலரதுதேர்மேலே நாமக்கொடிபறக்க
சகாதேவர்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அச்சுகிறுகிறென்ன யானைநெடுந்தேரசையும்
வண்டில்சிறுச்சிடுமா மதயானைகோஷ்டமிடும்
குதிரையனுமனிக்கக் கோடிமன்னர்சத்தமிட
யானைசேனைபரிவார மடங்கலும்வருகிறதே
செந்தூளெழும்புவதும் சூரியனைக்கப்புவதும்
கருந்தூளெழும்புவதுங் கதிரோனைக்கப்புவதும்
மண்தூளெழும்புவதும் மண்டலத்தைகப்புவதும்
அடிபடுதேராயபேரி அந்நகரந்தானதிர
வெண்கலபேரி விருதுமுழங்கிவர
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுதே
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெத்திநகரடிபடுதே
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுதே
கோடைகாலத்திடிபோலே குமுறுதேராயபேரி

அடிவாளத்திடிபோலே அடிபடுதேராயபேரி
அண்டங்கிடுகிடென்ன அடிபடுதேராயபேரி
அல்லியென்றுபேர்சொன்னால் கல்லுந்தெய்வங்கூத்தாடும்
மண்தூளுஞ்செந்தூளும் மண்டலத்தைகப்பியதே
வருகிறசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பட்டணத்தைதாண்டிப் பாளையம்வருகிறதே
யூகம்பிரித்தார்களுயித்தியஞ்செய்யவென்று
வந்துமுனைகொடுத்தார் வளம்பெரியசேனையெல்லாம்
இருவாதுபாளயங்க ளெட்டிநெருங்கிறல்லோ
உந்திபிரிந்தார்களுயித்தியம்பண்ணுகிறார்
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேற்சரம்பொழிந்தார் சாமார்த்தியமுள்ளவர்கள்
அமரதருஞ்சமரதருஞ் சமரதரும்அமரதருய்
கலிங்கர்தெலுங்கர்களும் தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடியர்கஸ்தியர் கஸ்தியர்கன்னடியர்
க்ஷத்திரியர்மூத்திரியர் மூத்திரியர்க்ஷத்திரியர்
யானையோடியானைதாக்க அஸ்வத்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும் ஒக்கப்போர்செய்யுதங்கே
ஒருவர்க்கொருவரல்லோ ருயுத்தங்கள்பண்ணுகிறார்
எட்டிற்றேநல்லசண்டை எழும்பிற்றேறாயபேரி
மூளுதேநல்லசண்டை முழங்கிற்றேறாயபேரி
வந்துமுனைகொடுத்தாள் வாழ்வரசியல்லியம்மாள்

பீமசேனன் யுத்தம்.

வெற்றிமதயானை வீமனவன்தான்பார்த்து
வந்துவளைந்தானே வல்லிடிபோல்தேர்திருப்பி
தேரைத்திழிப்பியவன் செங்கையிலேவில்லெடுத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிபொழிந்தானே வளம்பெரியஅஸ்திரத்தை
வாயுவாஸ்திரங்களோடு வருணன்திரக்ஷந்தரன்
இமையாஸ்திரங்களோடு இந்திராஸ்திரங்களும்
சூரியஅஸ்திரமாஞ் சுப்பிரமணியஅஸ்திரமாம்
மூடுபனிபோலாக மூடிக்கிவிட்டான்பாணமது
அம்புவரும்வேகமானா லார்க்கமுடிபோகாது
பாணம்வருவேகமானால் பார்க்கமுடிபோகாது
சரவருஷம்போலாகச் சரமேற்சரம்பொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்செவந்தாளே
சீறியெரிபறந்து சிங்கத்தைப்போற்றதும்பி
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனேடா
திருட்டுப்பயலே வுன்சீவன்பறித்திடுவேன்
சண்டிப்பயலே யுன்சாமார்த்தியந்தானழிப்பேன்

மன்ரமற்றுஞ்சேவகமும் அப்போதெரியுதுபார்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
அல்லியென்றுபேர்சொன்னால் அண்டாண்டங்கிடுகிடென்னும்
அரைநாழிக்கொள்ளையிலே யளகாபுரஞ்சேர்த்திடுவேன்
தேரைத்திருப்பினளே செங்கையிலேவில்லெடுத்தாள்
பம்பரம்போலாகப் பாரரதந்திருப்பி
சக்கரத்திகிரிபோலே சமர்த்துடனேதேர்திருப்பி
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாள்சரபாணம்
தொட்டானேவில்லதனைத் தொடுத்தாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்க ளார்க்கமுடிகூடாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிகூடாது
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகின்றாள்பாணங்களை
அக்கினியாஸ்திரங்கள் அனந்தம்பொழிகிறாளே
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
அருநெல்லிப்பழம்போலே யஸ்தமெல்லாங்கொப்பளிக்க
நான்குநாள்மட்டாக நல்லசண்டைபண்ணுகிறான்
தன்மேல்வரும்பாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
ஒருவர்விட்டபாணம் ஒருவர்விலக்கிச்சொல்வார்
இருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடுபாணத்தினால் வெகுசனங்கள்மாளுறுது
யானையின்மேலிருந்ததுரை யறுந்துவிழுகிறார்கள்
குதிரையின்மேலிருந்ததுரை கொக்கரித்துகீழ்விழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்தோ ரோலமிட்டுவிழுவார்கள்
அம்மாடியென்றுசொல்லி யலறிவிழுவார்கள்
தென்னங்காய்போலாகச் சேனைகளையுருளவிட்டான்
பனங்காய்கள்போலாகப் பறித்தெரிவான்வேணதலை
அறுந்ததலைகளெல்லா மம்மானாடுதங்கே
பெட்டியும்பேழைபோலே பெலிகொடுத்ததலைகள்போலே
சட்டிகள்பானைபோலே தலைகளுருளவிட்டாள்
அம்மாடியென்றுசொல்லி யநேகந்தலையுருளும்
காலறுந்துபோய்விடுதே கைகளற்றுப்போய்விடுதே
ஈரல்குடல்சரிந்து இருநிலத்தில்வீழ்வாரும்
மணிக்குடல்கள்தான்சரிந்து மண்ணில்விழுவாரும்
நிலப்பூச்சிபோலாக நிலத்தில்நசுங்கலுற்றார்
சாகிறவுண்ணிபோலே தரையில்நசுங்கலுற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
அல்லியம்மாள்பாளையங்க ளலைந்தலைந்தோடுது

சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோர் — ஊர்க்குர்
ஆயுதத்தை தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைகாட்டிவாரும் நான்தாதனென்பாரும்
பிச்சையிறந்துண்ணப் புறப்பட்டோமென்பாரும்
ஆயுதத்தை தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
ஐயையோதெய்வமென்று அலைகிறதேபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிபுலம்புகிருர்
தண்ணீ தண்ணீரென்று தவிக்கிறதேபாளையங்கள்
மார்பளவுரத்தாறு வழியவிட்டான்வீமனவன்
பிடாரியம்மன்கோவிலுக்கு பலிகொடுத்தபாவனைபோல்
அம்மைபார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
ஆள்ளுகிறதலைகளெல்லாம் செருக்களங்கள்கொள்ளவில்லை
ரத்தாறுபோடினதே யுத்தக்களங்களெல்லாம்
இவ்விதமாக இனியபோர்செய்வதிலே
தேவாதிதேவரெல்லாம் சொல்லுவாரொருவார்த்தை
இராமராசசண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
சூரபத்திரர்சண்டையென்பார் சுப்பிரமண்யர்சண்டையென்பார்
வீரபத்திரர்சண்டையென்பார் வேள்விதக்கன்சண்டையென்பார்
வீமன்போல்சண்டைசெய்வார் ஆருமில்லைவையகத்தில்
வெற்றிமதபாரா வீமனவன்பின்னிடையான்
நான்றதான்மட்டுமல்லோ நல்லசண்டைபண்ணுகிருன்
அல்லிபெருமாளு மாக்கறித்துப்பற்கடித்து
ஆலவாய்ச்சொக்கரென்று மாண்டவரைத்தானினைந்து
திவ்யாஸ்திரத்தை தூபமிட்டுத்தானெடுத்தாள்
மந்திரநூபமிட்டு வாங்கிவிட்டாள்வீமன்மேலே
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளவாங்கிவிட்டாள்
மேலிட்டுவருகிறதே வீமனதுதேர்மேலே
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமுடைந்ததுவே செம்புரவிசெத்ததுவே
போட்டதோர்வச்சிரக்கபாய் பொடிபொடியாச்சுதங்கே
சட்டைதமான்வச்சிரக்கபாய் தவிடுபொடியாச்சுதுகாண்
சரீரங்களுள்ளதெல்லாம் சல்லடைக்கண்ணாச்சுது
மானங்குலைந்தானே மதகரியான்வீமசேனன்
விழுந்துமெழுந்தவனும் வெட்கக்கெட்டோடிவிட்டான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் யுத்தம்.

மாயன்பெருமாளு மலராமர்கண்டுவிட்டார்
வகைமோசம்வந்ததென்று மாயவருந்தேர்திருப்பி
வந்துமேச்சண்டைசெய்தார் மயிலேணையாள்தன்னுடனே

பம்பரம்போல்தேர்திருப்பியாணந்தொடுத்துவிட்டார்
அல்லிப்பெருமாளுமாக்கரித்துபற்கடித்து
சொக்கனைத்தானினைத்துத்தொட்டாளேபாணமதை
இருவர்தங்களுமிருநிலத்தில்தான்சுழல
பம்பரம்போலாகப்பாரரதந்திருப்பி
விட்டாள்சரபாணம்மேகவர்னர்தேர்மேலே
வாய்வாஸ்திரங்களும்வருணாஸ்திரங்களும்
வச்சிரபாணமதைவாரிச்சரம்பொழிந்தாள்
ஒன்றல்லஇரண்டல்லொருகோடிபாணம்விட்டார்
சூரியனைத்தான்மறைத்தாள்தொடுத்தநல்லபாணமதால்
ஆகாயமுள்ளதெல்லாம்அம்பாலேபந்தலிட்டாள்
பெருமாளுமல்லியருபிரியாதசண்டைபண்ணார்
மாளுஞ்செனங்களென்றால்மட்டுமிதங்களில்லை
செத்தசெனங்களென்றால்சொல்லிமுடியாது
ஐயையோதெய்வமேயென்றலறுதேபாளையங்கள்
யானைமேலுள்ளவர்கள்பயமிட்டுமண்ணைக்கவ்வ
குதிரைமேலுள்ளவர்கள்கொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டகமேலுள்ளவர்களோலமிட்டுமண்ணைக்கவ்வ
இந்தவிதமாகஇனியசண்டைபண்ணுகிறார்
அலைகடல்சத்தம்போலேஅபயமிட்டுவெகுசனங்கள்
கூக்குறலாகிறதேகோஷ்டமிடும்பாளையங்கள்
அபயம்சிவாயமென்றுஅலைகிறதேவெகுசனங்கள்
வடுகரெல்லாம்நீரென்பார்வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்றுசொல்லுகிறார்பாளையத்தில்
தண்ணீதண்ணீரென்றுசொல்லித்தவிக்கிறதேபாளையங்கள்
அப்போதுஅல்லியம்மாள்திரமானகோபமுடன்
வசிச்ரபாணந்தன்னைமந்திரதூபமிட்டு
மாயாதுதேர்மேலேவாரிந்துஇழுத்துவிட்டாள்
உக்கிராஸ்திரங்களாதுதிவ்வியாஸ்திரங்களாது
இராமசந்திரஅஸ்திரமாம்நாராயணஅஸ்திரமாம்
அக்கினியஸ்திரமாமனந்தம்பொழிகிறாளே
ஒன்றல்லவிரண்டல்லஒருகோடிபாணம்விட்டாள்
வாரிப்பொழிந்தாளேவளம்பெரியஅஸ்திரத்தை
எடுத்துப்பொழிந்தாளேஏழுலட்சம்பாணங்களை
விழித்தகண்சிமிட்டாமல்பொழிந்தாளேபாணங்களை
பாதாளமூடுருகப்பாணந்தொடுத்தாளே
ஆபன்சரீரமெல்லாமங்கம்பிளக்கடித்தாள்
சல்லடைக்கண்போலேசரீரமெல்லாந்தான்றுளைத்து
மயிருக்கொருபாணம்மாதுதொடுத்துவிட்டாள்

வில்பிடித்தகைகளெல்லாமெத்தசிவப்பேறிற்று
கைகளெல்லாஞ்சேர்ந்துவிடக்கின்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம்அல்லியைக்கொண்டாடினார்
இந்தப்படியாகஇனியசண்டைசெய்கையிலே
இவனேவெகுபாரமென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோதோள்புரளத்தொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரியவந்துவிழுந்தது
தேருமொடிந்துபோச்சுசெம்புரவிநாலும்போச்சு
சட்டைநமான்வச்சிரக்கப்பாய்தவிடுபொடியாகி
செங்கையில்வில்லெடுத்துசோடுசட்டைதானணிந்து
பதாதியாயோடுகிறார்பாரளந்தரெங்கபெருமாள்
வகைமோசம்வந்ததென்றுகரியமாலோடுகிறார்

சகாதேவன்யுத்தம்.

கண்டான்சகாதேவன்கரியமாலோடுவதை
தேரைத்திருப்பினானேசெங்கையில்வில்லெடுத்தான்
வந்துவளைத்துக்கொண்டான்வல்லிடிப்போல்சகாதேவன்
பேரிகையறைவித்துப்போயெதிர்த்தானல்லியண்டை
சண்டைபேரிகையடித்துச்சமர்த்துடனேவந்தெதிர்த்தான்
கண்டாளேயல்லியம்மாள்கண்கள்ரெண்டுந்தான்செவக்க
ஒருபாணம்விட்டாலேயுலகமெல்லாம்தானதிர
பேரிகையைக்கிழித்தாளேபெரியடமாதான்கிழித்தாள்
வச்சிரபாணம்விட்டுமார்பைசுக்கலாய்கிழித்தாள்
விழுந்தெழுந்திருந்தான்வெட்கங்கொண்டோடிவிட்டான்

சகாதேவன்அல்லியைப்புலிக்கூண்டிலேற்பிடித்துவருகிறது.

எந்தவிதத்தினாலேயிவளைசெயித்திடலாம்
அடங்காதநீலிதனையடைக்கும்வழியெப்படிதான்
என்றதுதானினைந்துஅனையசகாதேவன்
உள்ளங்கைசாத்திரத்தையுத்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தைப்பார்த்துசகாதேவன்
பத்துசுற்றுப்புலிக்கூண்டைபாங்குடனேகொண்டுவந்தார்
சூதுபண்ணியல்லியைபோனில்டைக்கவேண்டும்
இல்லாமற்போனாக்காலிவளைக்கெலிக்கவேண்டும்
இவள்கையால்மாளுவதெல்லவருநிச்சயந்தான்
சாஸ்திரத்தைத்தான்பார்த்துதாக்குள்ளசகாதேவன்
செருக்களத்தைவிட்டவனுஞ்சீக்கிறமாய்போகலுற்றான்
மாளிகையிற்சேர்ந்தமன்னன்சகாதேவன்
விசுவபிர்மதச்சர்களைவிரைந்தோடியழையுமென்றான்
அப்போதுகாவலர்களழைத்தோடிவந்தார்கள்
ஆயிரம்தச்சர்களையழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள்மன்னன் சகாதேவனைத்தான்

என்னையழைத்தப்பணி யாதென்றுகேட்டார்கள்
நிமிஷமரைநாழிகையில் நிருமியுங்கூண்டையென்றார்
ஒருபக்கம்பார்த்தாலே உச்சித்தேர்போலே
ஒருபக்கம்பார்த்தாலே யுச்சிதக்கூண்டுபோலே
மறுபக்கம்பார்த்தாலே மச்சுவீடுபோலாக
பந்துச்சுற்றுக்கோட்டையதாய் பக்கங்கதவடைத்து
வாசலுங்குவாசலது வச்சிரத்தாள்போட்டும்
சாவியுஞ்சங்கிலியும் தாப்பாளுமைவுமென்றான்
ஆயிரந்தச்சர்களும் மக்கணமேசொப்பனிட்டு
நிமிஷமரைநாழிகையில் நிர்மித்தார்விஸ்வகர்மர்
சோடித்தோமென்றுசொல்லித் தெண்டனிட்டுப்போனார்கள்
அப்போசகாதேவன் அங்கனவேதானெழுந்து
தேரைத்திருப்புகிற சூரனைத்தானழைத்து
குதிரையலங்கரித்துக் கூண்டிலேகட்டுமென்றான்
சாத்திரக்கொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றான்
பாராசாரிப்புரவிகளைப் பாங்காயலங்கரித்து
கூண்டுக்கழகாகக் குதிரைகளைகட்டுமென்றான்
அங்கேசகாதேவ னம்புவில்லுங்கைபிடித்து
ஏறினான்கூண்டுதனி லெடுத்தார்பேரிகையை
திறவுகோல்கைபிடித்துச் சூதாகவேறினானே
கூண்டைத்திருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளயத்தில்
செயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையில்வில்லெடுத்தான்
சண்டைசண்டையென்றுசொல்லிச் சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிநகாரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
கண்டாளேயல்லியம்மாள் காற்றைப்போல்தேர்திருப்பி
வந்துவளைத்தாளே வல்லிடிபோல்வளைந்தாள்
எட்டுதேகல்லசண்டை எழும்புதேராயபேரி
மூணுதேகல்லசண்டை முழுங்கிற்றேராயபேரி
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
ஒருவர்விடும்பாணம் ஒருவர்விலக்கிகொள்வார்
இருவர்சமானமாக விருதுசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திரபாணங்களி லல்லியொருபாணம்விட்டாள்
சகாதேவன்வில்முறியச் சமர்த்துடனேபாணம்விட்டாள்
வேதாளமாகவந்து வில்லைமுறித்ததுவே
வில்லுமுறியவேதான் வேந்தன்சகாதேவன்
வாள்கேடகந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
தந்திரஜாலவித்தையி லெழும்புவான்சகாதேவன்

அப்போதுயல்லியரு மாரணங்குதான்பார்த்து
சரணங்கள்போடுகிறாள் கைலாகுபண்ணுகிறாள்
கருடப்பாய்ச்சல்தானெடுத்துக் கொப்பெனவேபாயுகிறாள்
புலியும்புலியுமது போயெதிர்த்தபாவனைபோல்
யானையானையுமாய் அதிர்ந்துமெதிர்ந்ததுபோல்
சிங்கமுசிங்கமுமாய் சீறியெதிர்த்ததுபோல்
கொக்கரித்துவாளியிட்டுக் கொற்றவனும்பாயுகிறான்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிறாள்யல்லியம்மாள்
ஓடியொளிப்பவன்போ லுபாயமாய்ச்சகாதேவன்
கூண்டிற்புதைத்தானே கொப்பெனவேசகாதேவன்
ஓடிப்போறானென்று உலகாளும்ராஜகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுதனிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோடலுற்றான்
அவ்வாசற்புகுந்தாளே அல்லிமலநாயகியாள்
எங்கேபோனான்கள்ளனென்று இளங்கொடியாள்தேடுகிறாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்து
அவ்வாசற்கதவடைத்து அருந்தாப்பாள்பூட்டினனே
சன்னற்கதவடைத்து தாப்பாளும்போட்டானே
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்றான்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்றான்
அகப்பட்டாளல்லியென்று அடிபடுதேபேரிகைகள்
சிக்கினாளல்லியென்று சின்னங்களூதுகிறார்
அத்தண்டபேர்களுமே அனைவோருங்கேட்டுவிட்டார்
சந்தோஷப்பட்டார் தருமருடசேனையெல்லாம்
தப்பினகேனையெல்லாந் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போசகாதேவ னானந்தமாய்வாரானே
கூண்டைதிருப்பியே கொண்டுவந்தான்பட்டணத்தில்
அருச்சுனன்றன்னருகே யடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவன் சொல்லுவானொருவார்த்தை
அல்லியுடன்சண்டைபண்ண வமருக்குபோனபோது
அகங்காரப்பெண்புலிதா னகப்பட்டதென்கையிலே
வேங்கைபுலியதனை விடுகூண்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசியல்லியரை
தேரேறிச்சண்டைசெய்யுந் துரைமகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனன்மனமகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தர்மரந்தவாழ்மார்பன்
அன்னநடைதிரௌபதையாள் ஆரணங்கைதானழைத்து
நாகமடந்தையரை நறுநுதலைத்தானழைத்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தானழைத்து
நான்செய்தகாரியத்தை நாயகமேநீர்கேளீர்

மாயவரும்பா[illegible]மாக வனவாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோகையிலே செய்தபிழைநீர்கேளும்
ஆதிசிவனைநான் அடிவணங்கவேணுமென்று
மதுராபுரியிலேமாணிக்கசொக்கலிங்கம்
பிட்டுக்கு மண்சுமந்த பித்தரைகாணவென்று
மதுரைக்குபோகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யங்கொருவன்புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
அன்றாடமுத்தெடுத்து அளப்பாணுமாரிமைக்கு
படிமுத்துகுறைந்ததென்று பதறிவிழுந்தான்காண்
அல்லியரசாணி யரசுநிலையாகிறது
அவள்பிறந்தவண்மைகளும் ஆவலெல்லாம்சொல்லுமென்றான்
ஆறாயிரம்பாண்டியர்கள் அறியதவஞ்செய்ததுவும்
அகிலாண்டசொக்கலிங்கம் அங்கயற்கண்கிருபையினால்
அல்லியிலைமேலே அவள்பிறந்தவண்மைகளும்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலை துணிந்து விரபட்டங்கட்டினது
கொள்ளவரும்மாப்பிள்ளைக்குக் குறடாகொடுப்பேனென்று
சேரவரும்மாப்பிள்ளைக்குச் சேருபந்துசெய்வேனென்றும்
ஆளவருஞ்சம்பந்தியை யடிப்பேனென்றாள்சேருபந்தால்
முச்சுகொட்டாதெருவிற்கட்டி மொய்குழலாண்டிருந்தாள்
இவ்வார்த்தைதான்கேட் டென்மனதுதாளாமல்
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்யவென்று
என்றுமனதிலெண்ணி எட்டுநாள்காத்திருந்தேன்
பத்தினியானவள் பாரிவேட்டைபோனபோதும்
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்தொடர்ந்துபோனேன்
கரும்புலிமேலேறி மான்வேட்டையாடையிலே
ஆனந்தமாரியற் கம்புபொருக்கித்தந்தேன்
வேட்டைகளாடியே மெத்தகளைத்தவளும்
ஆலமரத்தடியிலே யங்கேபடுத்தாளே
காலும்பிடித்தேனே கதையொன்றுசொன்னேனே
அடையாளம்காட்டவென்று யாரம்கழற்றிக்கொண்டேன்
அன்றுபோய்மற்றானாள் மற்றொருவேடங்கொண்டேன்
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பயித்தியக்கொண்டவனாய்
அல்லியதுபட்டணத்தில் அழகுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து வளம்பாடியானுரைத்தேன்
அனேகதாதிமாரைவிட்டு யாற்றிலெலனைபுரட்டுமென்றாள்
அதினாலுஞ்சாகாமல் அவள்நினைவாயிருந்தேன்
தூக்குமரந்தனிலே போடுமென்றாளென்னையவள்
செங்கமலத்தாதியைநா னுபாயமாய்க்கொன்றுவிட்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே

பூதக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னாரே
பூதம்பணிமாரப் பிழைந்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணாகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டியைப்போலேவடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணமட்டிலெடுத்து மாதுயிச்சைவாங்கிவந்தேன்
மாயன்பிடாரனானார் வண்ணவிகப்பாம்பானேன்
மாம்புருவாய்போயிருந்து படுக்கையில்நான்கலந்து
பொற்கொடிமாதினுக்கும் புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாளந்தமாயவனார் பிராமணப்பெண்ணானார்
மெத்தக்கிழவனைப்போல் வேதியனாய்வடிவெடுத்து
அத்வானகானகத்தில் தண்ணீர்பந்தல்வைத்திருந்தோம்
அதுவேஷத்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தோம்
தேவேந்திரனைநோக்கிச் செய்தேன்பெருந்தபசு
யானைத்தலைபோலே பழநானமங்கிலியம்
தும்பிக்கைபோலாகத் திருமங்கிலியச்சரடும்
கொடுத்தனுப்பவேண்டுமென்று கொப்பெனவேதபசுசெய்தேன்
தேவேந்திரபகவான் சித்தமிரங்கியென்மேல்
மாயத்திருநீறும் மங்கிலியந்தரித்துவிட்டார்
மாலைப்பசுங்கிளிக்கி மங்கிலியந்தரித்துவிட்டேன்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கட்டினவிருதறுத்துக் கடுகியேவந்துவிட்டேன்
நான்குமாதங்கெர்ப்பமது நடக்குதுகாண்மாதினுக்கு
இன்னவனென்றுசொல்லி யென்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனையரியாள்
தரையிலுள்ளராசாக்களை வாவென்றழைத்தவளும்
செய்களைக்காச்சியல்லோ கையதனைத்துவையுமென்றாள்
மண்டலத்துராசரெல்லாம் வந்துசத்தியஞ்செய்தார்கள்
வெற்றிமதயானை வீமனகுடித்துவிட்டான்
ஆகையினாலேயவள் அமருக்குயிங்குவந்தாள்
தர்மமுடியானும் சகாதேவன்பிடித்துவந்தான்
புலிக்கூண்டிலேயடைத்துப் பொற்கொடியைக்கொண்டுவந்தான்
இந்தவயணமெல்லா மேந்திழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளியிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்யத்தைசெய்தபின்பு தையலைவிட்டுவீடு
ஆயுதத்தைவாங்கியபின் அப்புறத்தில்விட்டுவிடும்
என்றுசொல்லியே யெழில்விசையனனுப்பிவைத்தான்